සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


**அனுருத்தர் மான்மியம்-1998**

அம்மான் அனுருத்தர் ஆயுதத்தை தூக்கியபின்
எம்மாம் பெருவெற்றி எமக்கெல்லாம்—சும்மாவோ?
முல்லையிலும் பின்னர் முதுவன்னிக் காட்டினிலும்
கிள்ளையிலுங் கிட்டியதென் கொல்?

—ஈழமோகம்


இதழ் 156 ஒக். 01 — ஒக். 14. 1998 விலை ரூபா 10.00





## காத்தான்குடி : றபாய்தீனைக் கடத்தியது டெலோ ?

## விஜே டயஸ் : புலிகளின் ஜனநாயகம் எது?

## சாகித்தியப் பரிசு : அயோக்கியத் தனத்திற்குப் பரிசு !

## ஆலங்குளம் : மக்களை விரட்டும் படையினர்!

# மூதூர் மருந்தகம்: யாருடைய நலனிற்காக?

மூதூர் ஆயுர்வேத மத்திய மருந்தகம் இயங்குவது யாருக்காக என்ற கேள்வி மூதூர் மக்களிடையே தலைதூக்கியுள்ளது. எவ்விதபொருத்தமுமற்ற இடத்தில் அமைந்துள்ள மருந்தகத்தினால், கட்டிடச் சொந்தக்காரரைத் தவிர யாரும் நன்மையடைவதாகத் தெரியவில்லை.

இம் மருந்தகம் மக்கள் சஞ்சாரமற்ற வயல்வெளிப்பரப்பின் நடுவே அமைந்துள்ளது. தற்போது இதன் அருகே காவலரண் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மழைக்காலங்களில் இம் மருந்தகத்தைச் சூழவுள்ள நிலப்பரப்பு நீரில் அமிழ்ந்து விடும். இடுப்புவரை நனையாது எவரும் இந்த மருந்தகத்துக்கு வந்து போக முடியாது.

மருந்தகம் நோயாளிகளுக்காகவே அமைக்கப்படுகின்றது என்பது, உண்மையானால், இம் மருந்தகத்தால் எந்த நோயாளிக்கும் பயன் இல்லையென்று தான் கூற வேண்டும். கோடை காலங்களில் ஒரு நோயாளியால் உச்சி வெயிலில் இவ் வயல் நிலப்பரப்பைத் தாண்டி மருந்தகத்துக்குப் போவது என்பது நேர்த்திக் கடன் வைத்தது மாதிரித் தான். அதே போல் மழை நாட்களில் ஆற்றைக் கடந்து போவ தற்கிடையில் நோயாளி குளிரில் விறைத்து செத்து விடுவார்.

கட்டிடச் சொந்தக்காரரே குடியிருக்க லாயக்கற்ற இடம் எனக்கைவிடப்பட்ட நிலையில் மருந்தகம் அமைக்க இக்கட்டிடம் தெரிவு செய்யப்பட்டது அரசியல் செல்வாக்கை அடிப்படையாகக் கொண்ட ஒரு செயலே என நினைக்கத் தூண்டுகிறது.

இந்த மருந்தகம் பயனற்ற இடத்தில் அமைந்துள்ளது என்றும், அதனைப் பொது மக்கள் வந்து செல்லக் கூடிய இடமொன்றுக்கு மாற்றித் தருமாறும் 24.11.97 திகதியிட்ட மகஜர் ஒன்றின் மூலம் பொதுமக்கள் மாகாண ஆயுர்வேத பணிப்பாளரைக் கோரியிருந்தனர். இக் கோரிக்கைக்குச் சார்பாக மூதூர் பிரதேசச் செயலாளரும், 25.11.97 திகதியிட்ட குறிப்பொன்றை வழங்கியிருந்தார். இந்தக் குறிப்பில், இம் மருந்தகம் வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதியில் அமைந்துள்ளதென்றும், நோயாளிகளோ, வைத்திய ஊழியர்களோ போக்குவரத்துச் செய்வதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இக் கட்டிடம் மருந்தகத்திற்குப் பொருத்தம் அற்றது எனக் கண்ட வடக்கு கிழக்கு மாகாண ஆயுர்வேத நிர்வாகம், 98 ஓகஸ்ட் 31ம் திகதி இக்கட்டிடத்தை உரிமையாளரிடம் ஒப்படைப்பதெனத் தீர்மானித்து 15.5.98 திகதியிடப்பட்ட 9/PTA/FA/188 இலக்கக் கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கியது. கட்டிட உரிமையாளர் தனது அரசியல் செல்வாக்கைப் பிரயோகித்ததன் பயனாக திருகோணமலை மாவட்ட பா.உ. நஜீப் அப்துல் மஜீத் அவர்கள் 10.7.98 திகதியிட்ட கடிதத்தின் மூலம் மேற்படி கட்டிடத்தில் இருந்து மருந்தகத்தை இடமாற்றம் செய்ய வேண்டாம் என சுகாதார அமைச்சின் செயலாளரை கேட்டுக் கொண்டதன் பெயரில் மருந்தகம் இடம்மாறுவது நிறுத்தப் பட்டிருக்கிறது.

இந்த விடயம் வெளியே தெரிய வந்ததும், வெகுண்டெழுந்த நூற்றுக் கணக்கான மக்கள் மருந்தகம் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் தெளிவான நீண்ட விளக்கங்களை பலநூற்றுக்கணக்கான கையொப்பங்களுடன் நஜீப் பா.உவுக்கு 19.8.98ம் திகதியிட்டு அனுப்பி வைத்துள்ளனர். இந்தக் கையெழுத்துப் போராட்டத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர் ஜே.முகம்மட் சாபி என்பவர் முன்னிலையில் நின்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதை விட மூதூர்ப் பிரதேச பள்ளிவாசல்கள் சம்மேளனமும் 7.9.98 திகதியிட்ட கடிதத்தின் மூலம் மருந்தகத்தை இடமாற்றும்படி நஜீப் பா.உவை வலியுறுத்தியிருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர் மக்கள் பக்கம் நிற்கப்போகிறாரா கட்டிட உரிமையாளர் பக்கம் நிற்கப் போகிறாரா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

*விவேகி*

# யுத்தம் வேண்டாம்!

அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பின்பற்றி அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களும் ஆகக் குறைந்தது தமது ஒரு வாரகால சம்பளப் பணத்தையாவது தேசிய பாதுகாப்பு நிதியத்துக்கு வழங்குவதற்கு ஏற்ற வகையில் அவர்களைத் தூண்டுமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அத்துறைத் தலைவர்களுக்கு அனுப்பியுள்ள அறிவித்தல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதைத் தவிர பாதுகாப்பு நிதியைச் சேகரிப்பதற்காக பாடசாலை மாணவ மாணவிகளையும் ஊக்குவிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கும் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தக் அறிவுறுத்தல்களுக்கான காரணம், யுத்தத்திற்கு மேலதிகமாகத் தேவைப்படும் ரூபா 1200 கோடியை பெற்றுக்கொள்வதே என்று நிதியமைச்சிலிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை, இக்கோரிக்கையை பரவலான தொழிற்சங்கங்கள் எதிர்த்துள்ளன.

"யுத்தம் தேவையற்றது. அநாவசியமான இந்த யுத்தத்திற்காக பாதுகாப்பு நிதி என்ற பெயரில் அரசு வங்கி ஊழியர்களிடமிருந்து நிதி திரட்டுகிறது. இதை வங்கி ஊழியர்களாகிய நாம் எதிர்க்கிறோம். இதேவேளை வியர்வை சிந்தி உழைக்கும் ஊழியர்களின் அனுமதியின்றி மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கையை சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது என அகில இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் ஆட்சேபனை தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

தேசிய பாதுகாப்பு நிதிக்கு நிதி திரட்டும் நோக்கில் அரசு புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன் ஒரு கட்டமாக இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஊழியர்களிடமிருந்து ஒரு வார சம்பளப் பணத்தைத் வழங்குமாறு கோரியிருந்தது. முழுமையாக அல்லது தவணை அடிப்படையில் இதனைச் செலுத்தலாம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வருடம் வங்கி ஊழியர் சங்கம் நடாத்திய வருடாந்த மாநாட்டில் யுத்தத்துக்கெதிரான தீர்மானத்தையும் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து மக்கள் வங்கி தனது ஊழியர்களுக்கு விடுத்த ஒரு சுற்று நிருபத்தில் வார சம்பளப்பணத்தை தேசிய பாதுகாப்பு நிதியத்துக்கு வழங்குமாறு கேட்ட அதேநேரம் இலங்கை வங்கி தனது ஊழியர்களிடமிருந்து ஒரு நாள் சம்பளப் பணத்தை வழங்குமாறு கோரியிருந்தது.

அக்கோரிக்கைககைக்கு இலங்கை வங்கி ஊழியர் சங்கம் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறது. இவ்விரு வங்கிகளையும் சேர்ந்த பதினேழாயிரம் ஊழியர்கள் இச்சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். இதுபற்றி சங்கத்தின் பொதுச் செயலாளர் ஷா கருத்துத் தெரிவிக்கையில் பொது மக்கள் போதுமான வரிப்பணத்தைச் செலுத்தி விட்டார்கள். அரசு இவ்வழியில் மக்களைத் துன்புறுத்தக் கூடாது என வற்புறுத்திக் கூறினார்.

இது குறித்து மேற்படி சங்கம் தனது உறுப்பினர்களுக்கு சுற்று நிருபமொன்றை விடுத்துள்ளது. அதில் அரச ஊழியர்கள் பல்வேறு வரிகளை மாதாந்தம் செலுத்தி வருகிறார்கள். இதில் பாதுகாப்பு வரியும் அடங்கும். இந்நிலையில் தேசிய பாதகாப்பு நிதியத்திற்கு மேலும் பணத்தை வழங்குமாறு உழைக்கும் வர்க்கத்தைத் துன்புறுத்துவது அநீதியான செயலாகும். பாராளுமன்ற உறுப்பினர்கள் இது குறித்த அக்கறை செலுத்த வேண்டும் எனவும் அதில் கோரப்பட்டிருக்கிறது.

கூடவே இந்த அநாவசிய யுத்தத்திற்கு நிதி கொடுப்பதை எதிர்ப்பதோடு எமது ஊழியர்களையும் பாதுகாப்பு நிதிக்குப் பணம் கொடுக்க வேண்டாமென்று கேட்டுள்ளோம். இந்த யுத்தத்தை நிறுத்தும்படி நாம் அரசுக்கும் லண்டனிலுள்ள புலிகளுக்கும் அறிவித்திருக்கிறோம் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ○

## நிகழ்வுகள்

### கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகள்

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு, வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு எட்டு வருடங்களாவதை முன்னிட்டு கவிதை, கட்டுரை, பேச்சு முதலான போட்டிகளை நடாத்த தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

கட்டுரைக்கான தலைப்பு: "சமாதானமும் வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றமும்", கவிதைக்கான தலைப்பு: "உரிமைகளை மீட்போம்", பேச்சுக்கான தலைப்பு: "சமாதானத்துக்கான யுத்தம்" என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் கலந்துகொள்ள எவருக்கும் வயதெல்லையோ பூமியெல்லையோ கிடையாதென்றும் தமிழ் மொழியிலேயே அனைத்து போட்டிகளும் இடம்பெறுமென்றும் ஆக்கங்கள் சொந்தமானதாகவும் சொந்த கையெழுத்தில் எழுதப்பட்டதாகவும் அமையவேண்டும் என்றும் கவிதைகள் ஆறு பக்கங்களுக்குள் அமைவதுடன் புதுக் கவிதை வடிவிலேயே எழுதப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. கட்டுரை கவிதைப் போட்டிகளுக்கான முடிவுத் திகதி ஒக்டோபர் 18. பேச்சுப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பத்தை ஒக்டோபர் 10ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும். பேச்சு 15 நிமிடங்களுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும். ஆக்கங்கள்-விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு(NMRO) 15, ரோஹினி வீதி, கொழும்பு-06.

### நூல் வெளியீடு

"இலங்கை இனப்பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்களும் மாந்தை நானாட்டன் முஸ்லிம்களும்" என்ற கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் எழுதி நூல் எதிர்வரும் ஒக்டோபர் 10 சனியன்று புத்தளம்-தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வெளியிட்டு வைக்கப்படும். இந் நூல்வெளியீட்டு வைபவத்தில் பிரதம அதிதியாக ரவுப் ஹக்கீம் பா.உ. அவர்கள் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

# புண்ணியவான்களின் கதை!

யாழ். குண்டுவெடிப்பு சம்பவம் நடைபெற்ற பின் ஒரு பத்திரிகை எழுதிய பத்தி இது. ''இந்தக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட படையினரும், பொலிசாரும் போராட்ட களத்தில் ஆயுதபாணிகளாக போர் புரிய வந்தவர்கள் இல்லை. யாழ். மக்களின் இயல்பு வாழ்விற்கு உதவ வந்த இவர்களும் அநியாயமாகப் பலியாகி விட்டனர்....'' இந்த வரிகளை நீங்கள் இப்போது வாசிக்கும்போது இது ஒரு சிங்கள இனவாதப் பத்திரிகை ஒன்றின் பத்தி என ஊகித்திருப்பீர்கள். திவயின, அல்லது ஐலண்ட் பத்திரிகைப் போன்று ஒன்றில் வெளியானதன் தமிழாக்கம் எனக் கருதி இருப்பீர்கள்.

'மீட்பர்கள் செய்த கொலை' எனும் பட்டியல் நீளும் இன்றைய காலகட்டத்தில் இவ் இராணுவத் தளபதிகள் எவ்வித இன அழிப்பையும் மேற்கொள்ளத் துணையாக நின்றதில்லை என இப்பத்தி கூறுவதாக நினைப்பீர்கள். உங்களுக்குள் கேள்வி வரும்; செம்மணிப் படுகொலைகள், காணாமல் போகுதல், காரைநகர் படுகொலைகள், இராணுவ அடக்கு முறைகள் என்பவற்றையெல்லாம் யார் செய்தனர்? இன்றுவரை யார் மறைக்க முயல்கின்றனர்? இதே அரசும், அதன் இராணுவமும் தான் என விளங்கிக் கொள்வீர்கள்.

உங்களுக்குத் தெரியும். கொக்கட்டிச்சோலை, சத்துருக்கொண்டான், வந்தாறுமூலை இன அழிப்புகளிலெல்லாம் இராணுவ அதிகாரிகளின் பங்களிப்பு எத்தகையது என்பது. யாழ்ப்பாணத்தில் காணாமல் போகுதலில் இவர்களின் பங்குபற்றுதல் எத்தகையது என்பது? இலங்கை அரசு நாடுமுழுவதும் இன அழிப்பு போரை முன்னெடுத்துச் செல்ல, யாழ். மண்ணைக் கைப்பற்றிய எந்தளவிற்கு பிரச்சாரப் பொருளாகக் கொள்கிறது என்றும், அதனூடாக மேலும் மேலும் இன அழிப்பை தொடர்கின்றது என்றும், அதற்கு இவ் இராணுவ, பொலிஸ் அதிகாரிகள் உதவுகின்றனர் என்றும் உங்களுக்குத் தெரியும். இவர்கள் மக்களுக்கு உதவுவது என்பது பூச்சுற்றல். அதுவும் புலிகள் அழிக்கப்படும்வரை தான் இப்பூச்சுற்றல் என்றும் உங்களுக்குத் தெரியும். தம் சிங்கள பௌத்த பேரினவாத மேலாதிக்க நிறுவுதலில் இது ஒரு அங்கம் என்பதையும் நீங்கள் இலகுவில் புரிந்து கொண்டு இருப்பீர்கள். ஆக, இப்பத்தி நிச்சயம் இராணுவத்திற்கும், சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கும், தமிழ் மக்களின் இன அழிப்பிற்கும் ஆதரவு செய்யும் பேரினவாத பத்திரிகையின் கருத்து என நினைத்திருப்பீர்கள். ஆனால், இதனை எழுதியது ஒரு தமிழ்ப் பத்திரிகை. அதுவும் பக்கச்சார்பு இல்லாமல் நடப்பதாக கூறிவரும் வீரகேசரியின் ஆசிரியர் தலையங்கம் இது என அறிந்தவுடன் அதிர்ச்சி அடைந்திருப்பீர்கள். ஆசிரியர் தலையங்கத்தை நிர்வாக ஆசிரியர் எழுதும் அற்புத பாரம்பரியம் கொண்ட வீரகேசரியின் பக்கச்சார்பு உங்களுக்கு ஆழமான மனவலியை ஏற்படுத்தி இருக்கும்.

வீரகேசரி என்ன சொல்கிறது? உண்மையில், சமாதானத்தை விரும்புகின்றது எனில், அது அதற்கு எதிரான சக்திகளை இனங்காட்டி இருக்க வேண்டும். யுத்தத்திற்கு அப்பாவிச் சிங்கள இளைஞர்களைப் அழைத்துப் பலியாக்கும் அதன் தலைமைப்பீடத்தை விமர்சித்திருக்க வேண்டும். பாம்புக்கு தலையையும், மீனிற்கு வாலையும் காட்டும் சந்தர்ப்பவாத கொள்கையைக் கைவிட்டிருக்க வேண்டும். இவை இல்லாமல் இன அழிப்பில் ஈடுபடுபவர்களை மக்களுக்கு உதவுபவர்களாகச் சித்திரிப்பது எதற்காக?

நான் எழுதுவதன் நோக்கம் இத்தகைய அதிகாரிகளை கொலை செய்வதை ஆதரித்து எழுதுவேண்டும் என்பதற்காக அல்ல. அவர்களை புண்ணியவான்களாக, மக்களுக்கு உதவுபவர்களாக ஏன் பொய் சொல்லவேண்டும் என்பதே. கிழக்கு முழுதும் இன அழிப்பை மேற்கொண்ட பின் யாழ்ப்பாணத்திற்கு வரும்போது மட்டும் மனித நேய முகமூடிபோடும் இவ் இராணுவ அதிகாரிகளின் போலி முகங்களைக் கிழிக்க வேண்டும் என்பதே. இன்று இவ் அரசை நம்பி வடக்கு - கிழக்கிற்கு வெளியே வரும் தமிழ் மக்கள் மீது இதே இராணுவம், பொலிஸ் செய்யும் அடக்குமுறைகளையும், தமிழ் மக்கள் மீதான அழிப்பையும் கை கட்டி நின்று பார்க்கும் இவ் அதிகாரிகளின் உண்மை உருவத்தையும் வெளிக்கொண்டு வரும்படி இவற்றை விட்டுவிட்டு சகல தளங்களினூடும் தமிழ், முஸ்லிம் மக்கள் மீது அடக்குமுறையை பிரயோகிக்கும் அரசையும், (வீரகேசரி விமர்சிக்கும் தமிழ்க் கட்சிகளின் செயல்களை மிஞ்சிய விதத்தில்) இலங்கை அரசின் இன அழிப்பிற்கு துணை போகவேண்டாம் என்பதே!

# மெய்யாகிலும் சமாதானம் சொல்!

பொ.ஐ.மு. வெற்றி பெற்ற அந்த நேரத்தில் இனவாதம் செத்து விட்டது. இனி சிங்கள இனவாதிகள் ஒளிந்து கொள்ள இடமில்லாமல் இடம் தேட வேண்டும் என்றெல்லாம் எத்தனையோ புத்திஜீவிகள் கூறினார்கள்.

இன அழிப்பிற்கு அங்கீகாரமும், அதற்கான முழு அதிகாரத்தையும் வழங்கும் அதே பாராளுமன்றமும், அரசியலமைப்பும் அப்படியே இருக்க சிங்கள பௌத்த பேரினவாதம் ஊறிய அரச எந்திரமும், சிவில் நிர்வாக கட்டமைப்பும் எவ்வித மாற்றமும் இன்றி இருக்க, அவற்றை மாற்ற எத்தனிக்காத ஒரு அரசாங்கமும் பொறுப்பேற்கும் போது தம்மை மனித உரிமைவாதிகளாகவும், புத்திஜீவிகளாகவும் காட்டிக்கொள்பவர்கள். அதனை இனவாதப்போர் தொடுக்க மாட்டாத ஒரு அரசியல் அதிகாரம் கொண்ட ஆட்சியாக இனங் கண்டனர். எழுதி சத்தியம் செய்தனர். அவர்கள் மக்களை அதற்கு வாக்குப்போட கேட்டனர். யாழ். மண்ணை இன அழிப்பின் மூலம் ஆக்கிரமிக்கும் பொழுது, அம்மண்ணில் இறங்கி கையில் ஒலிவாங்கியுடன் அது சமாதானத்துக்கான போர், சிங்கள இனவாத அரசியல்வாதிகளுக்கும், தமிழ் ''பயங்கரவாதி''களிற்கும் எதிரான போர் என்றனர். நளின் டி சில்வா போன்றோரின் துவேஷத்திற்கு கொடுக்கும் பதில் என்றனர்.

அதே அவர்கள் சத்தியம் செய்த ஆட்சி இன்று செம்மணி புதைகுழிகளை உருவாக்கியது. இடம்பெயர்ந்து நாதியற்றுக் கிடக்கும் தமிழ் மக்களைப் பட்டினிப்

→

→ போடுகின்றது. கலவரங்களை தன் அரசியல்வாதிகளின் மூலமாகவே தூண்டிவிடுகின்றது. இவை அனைத்திற்கும் மேலாக இவ்விளைவுகளைத் தோற்றுவிக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்துடன் உடன்பாடு செய்துகொண்டு எதிர்காலத்தில் செய்யக்கூடிய அன்னத்து சமாதான முயற்சிகளுக்கும் இன்றே வேட்டு வைக்கிறது இந்த சமாதான விரும்பி அரசு. ஐ.தே.க. புலிகளுடன் பேசவேண்டும் என்று சொல்லிற்று. தன் சுயலாபத்திற்காக என்பது உண்மை. ஆனால் இவ் அரசு என்ன செய்தது? சிங்கள பௌத்த இராணுவவாதிகளான பிக்குகளை அதற்கு எதிராகக் கிளப்பி விட்டது. மக்களைக் கொல்லும் புலிகளுடன் பேச்சுவாத்தை வேண்டாம்'' என உரத்துக் கூறவும் சுவரொட்டிகள் ஒட்டவும் கேட்டுக் கொண்டது. இராணுவவாதிகளான பிக்குகளை ஊர்வலம் போகச்செய்தது அனைத்திற்கும் மேலாக பிக்குகளை இவ் அரசின் அமைச்சர் ரத்வத்தை தனது வீட்டிற்கு அழைத்து விருந்து வைத்து ஆதரவு கேட்கிறார். பேஷ்! பேஷ்!! புத்திஜீவிகளால் மெச்சப்பட்ட அரசின் பேரினவாத எதிர்ப்பு அரசின் செயல்கள் இவை.

என்றுமில்லாதவாறு இன்று சிங்கள பௌத்த பேரினவாதம் கையில் ஆயுதம் கொண்டு தமிழ் மக்களை சகல பாகங்களிலும் வேட்டை ஆடும் போது அதனை வளர்த்தெடுக்கும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. இப்போது அப்புத்திஜீவிகள் என்ன சொல்கின்றனர். தமது தவறைப் புரிந்து கொண்டனரா? புரிந்து இவ் அரசின் முகமூடியைக் கிழிக்கும் புதிய போராட்டத்தில் இணைந்து கொள்வரா? குருணாகலையில் கேட்கும், புதிய அந்தக் குரலுக்கு தம் குரலையும் கொடுத்து உதவுவரா? யுத்தம், இன அழிப்பு, மனித உரிமை மீறல், நீதியமைப்பை உதாசீனம் செய்தல் என தொடரும் இவ் அரசை மக்கள் முன், சர்வதேசம் முன் அம்பலப்படுத்த முனைவரா? இன்று இவர்கள் முன் இருக்கும் முக்கியமானதும், முதன்மையானதுமான பணி இதுவாகும். இப்பணி மட்டுமே நாட்டில் வலிமை பெற்றுவரும் இனக் குரோதத்தை உடைத்து உண்மையான சமாதானத்தைக் கொண்டு வரச்செய்யும். செய்வார்களா இவர்கள்?

கொல்லப்பட்ட நண்பகர்ளைப் பற்றிய அஞ்சலிக் குறிப்புக்களை எழுத நேர்வது ஒரு அவலமான நிலைமை. அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாலும், நண்பர்களாக இருக்க முடிந்தது திடீரெனக் கொல்லப்பட்ட நண்பர்களைப் பற்றிய எழுதுவது அவலத்திற்கு மேலும் அநியாயம் சேர்ப்பது.

## துயரமான சிரிப்பு!

சர்வதேச மன்னிப்புச்சபை புளொட் மற்றும்'ஜனநாயக வழிக்கு வந்ததாகத் தம்மைத் தாமே அழைக்கும் தமிழ் இயக்கங்கள் வசம் உள்ள சித்திரவதை முகாம்கள் பற்றித் தெரிவித்தது தான் தெரிவித்தது.

புலிகளும் தமது இன்டர்நெட் மூலமும், ஏனைய தமக்குச் சார்பான வெகுஜன தொடர்பு அமைப்புகள் மூலமும் அவ் இயக்கங்களை விமர்சித்துத் தள்ளியது. உண்மையில் இவர்களில் யாருக்கு யாரை விமர்சிக்க அருகதை உள்ளது? புலிகளிடம் இல்லாத வதைமுகாம்களா அல்லது வதைமுறைகளா ஏனையவரிடம் உள்ளது? ஈ.பி.டி.பி., பிரேமதாச காலத்தில் யாழ். தீபகத்தையே ஒரு திறந்தவெளி வதைமுகாமாக வைத்திருந்ததை யார் மறப்பர்? ஈ.பி.ஆர்.எல்.எப்., இந்தியப் படை காலத்தில் முழு வடக்கு கிழக்கையே சித்திரவதைக் கூடமாக மாற்றிய பெருமையை அது மறுக்குமா? இதேபோல் தான் ரெலோவும். இவர்களுடைய மனித உரிமை மீறல்களை வரலாற்றில் இருந்து அழித்து விடமுடியுமா என்ன? ஆக இவை இப்படி இருக்க, ஒருவர் பற்றி இன்னொருவர் குறை கூறுவதைப் பார்க்க சிரிப்பு தான் வருகிறது. ஆனால், அது துயரமான சிரிப்பு! மக்களின் விடுதலைக்காக என மக்களையே சாட்சியாக வைத்து அவர்களையே கொன்றுகுவித்த துயரத்தின் சிரிப்பு!

எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்று அவர்கள் சொல்கிறபோது வருகிற சிரிப்பு!

கா.சூ.சீரான்



## கையறு நிலை அரசியலின் துயரம்!

*கொல்லப்பட்ட நண்பர்களைப் பற்றி அஞ்சலிக் குறிப்புக்களை எழுத நேர்வது ஒரு அவலமான நிலைமை. அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாலும் நண்பர்களாக இருக்க முடிந்து திடீரெனக் கொல்லப்பட்ட நண்பர்களைப் பற்றி எழுதுவது அவலத்திற்கு மேலும் அநியாயம் சேர்ப்பது.*

*செப்டெம்பர் பதினோராம் தேதி யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பாரிய குண்டு வெடிப்பு ஒன்றில் எனது இனிய நண்பர் பொன்.சிவபாலன் கொல்லப்பட்டார். யாழ். மாநகர சபை முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த சிலபாலன், தான் வரித்துக் கொண்ட பாதையில் இத்தகைய உயிராபத்துக்கள் பெருமளவுக்குச் சாத்தியம் என்பதை நன்கு அறிந்திருந்தவர். ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சி, பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி என அவரது அரசியல் வாழ்வு அமைந்திருந்தது. இலங்கையின் இனப் பிரச்சினை தீர்ந்து, ஒடுக்குமுறையற்ற ஒரு வாழ்வு தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதே தினந்தோறும் அவருடைய பிரார்த்தனையாக இருந்தது என்பதை கடந்த ஐந்து வருடங்களாக நான் அறிவேன். அரசியல் வழி முறைகள், அரசியல் ஆய்வுகளுக்கு அப்பால் பிரார்த்தனை தான் ஒரே வழி என்று அவர் நம்பியிருந்தது பலமா? பலவீனமா? அல்லது இயலாமையா? எனத் திட்டவட்டமாகச் சொல்வதற்கு முடியாமல் இருக்கிறது.*

*மனம் நொந்து சலிப்புற்று சிலகாலம் ஐரோப்பிய நாடொன்றில் அகதியாகச் சென்றிருந்தாலும் அகதி வாழ்வின் அவலத்தை விடக் கொழும்புச் சீவியமும், அரசியல் ஆபத்துக்களும் பரவாயில்லை என்று உணர்ந்து திரும்பி விட்டார்.*

*சொந்த வாழ்க்கையில் பொருளாதாரக் கஷ்டம், எதிர்காலம் பற்றிய நிச்சியமின்மை, அவருடைய மிருதுவான இதயத்திற்கும் அதிகாரத்தின் கவர்ச்சிக்கும் இடையே நிகழ்ந்த கயிறிழுப்பு ஆகிய எல்லாம் இரத்தம் சிந்திய நிலையில் வெடி குண்டு இடிபாடுகளுக்குள் சிதறிக் கிடக்கின்றன. அடிப்படையான அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பாலும் இணக்கத்ததையும், நட்பையும் பேண முடியும் என்பதற்கு இருந்த மிகச் சில சாட்சியங்களுள் நண்பன் சிலபாலனும் ஒருவர்.*

*முரண்பாடுகளைக் கல்லறையிலும், சுடலையிலும் தான் தீர்க்க முடியும் என்று நம்புகிறவர்களின் விடுதலை வழி மூடுண்டது. அதை விட இறுக்கமாக மூடுண்ட வழி, உறுதி தளராமலும், தளம்பாமலும் அரசியல் செய்யாமல் தீர்க்க தரிசனமற்றுப் பலிக்கடாக்களை உருவாக்குகிற கையறு நிலை அரசியல்.*

சேரன்

## திருமலை: மீனவர் மீது சுட்டுப் பழகும் படையினர்!

வழக்கம்போல் மனைவி மக்களுக்கும் பெற்றோருக்கும் விடை கூறி, பொலிஸ் காவலரண்களில் பதிவு செய்து கொண்டு, செப். 19 சனி மாலை கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற சல்லி மீனவர்கள் இருவர் அடுத்த நாள் பிணமாக மீண்டனர். மற்றிருவர் மரணம் வரை சென்று மயிரிழையில் மறுபிறவி எடுத்துத் திரும்பினர். இத்தனைக்கும் இவர்கள் செய்த ஒரே பெரும் பிழை, தமிழ்த் தாயின் வயிற்றில் பிறந்தததுதான்.

கிழக்குப் பகுதியில் இலங்கை அரசுப் படைகள் தாங்கள் குறிதவறாமல் சுடுகிறோமா என்பதை இப்போது மீனவர்கள் மீது தான் பரீட்சித்துப் பார்க்கிறார்கள் போலிருக்கிறது. கடற்பரப்பில் என்றால், சுடுபவர்களுக்கும், சுடப்படுபவர்களுக்கும இடையில் தடை இருக்காது. புலிகள் அல்லர் என்பதையும் தெளிவாக உறுதி செய்து நிதானமாகச் சுடலாம்.

ஒரு மாத காலத்துக்குள் சல்லி மீனவர்களுக்கு இது மூன்றாவது அனர்த்தம். முதலாவது சம்பவம் ஒகஸ்ட் 22 சனிக்கிழமை இடம் பெற்றது. கோணேசர் மலைக் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களை நெருங்கிய கடற்படையினர் அவர்கள் மீன்வர்களே என்று உறுதி செய்து கொண்ட பிறகு, வேறு ஒரு மீன்பிடிப் படகை அழைத்து இந்த இருவரையும் அந்தப் படகில் ஏற்றி அனுப்பி விட்டு அவர்களது படகைத் தகர்த்து மகிழ்ந்திருக்கிறார்கள். இந்த மகிழ்ச்சிக்கு மீனவர்கள் காடுத்த விலை, இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரம், படகு, உபகரணங்கள் ஆகும்.

இரண்டாவது சம்பவம், ஒகஸ்ட் 28 வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்றது. புறாமலை எனும் இடத்தில் சல்லி மீன்வர்களான தங்கவேலாயுதம் காந்தரூபன், நவரத்தினம் சசிகரன் ஆகியோர் மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளையில், (நேரம் அதிகாலை 1.30) எந்தவித சலனமுமில்லாமல் கடற்படைப் படகொன்று இவர்களது படகை மோதி இரண்டாகப் பிளக்கச் செய்து விட்டு, நிதானமாகச் சென்று விட்டது. இத்தனைக்கும் இவர்கள் தங்கள் படகில் பெற்றோமாக்ஸ் விளக்கு எரிய வைத்திருந்தார்கள். படகும், உபகரணங்களும் நீரில் அமிழ்ந்து விட மீன்வர்கள் கடலில் பாய்ந்து நீந்தி வேறு ஒருபடகால் காப்பற்றப்பட்டு, கரை சேர்க்கப் பட்டார்கள்.

ஒரு வாரத்தில் நடந்த இந்த இரண்டு சம்பவங்களும் சல்லிக் கிராமத்தைப் பயத்தினால், உறையச் செய்து விட்டது. மீள்குடியேற்றம், நிவாரணம், தொழில் வாய்ப்பு என்பவை பற்றி வானொலியும், தொலைக் காட்சியும் வாய்கிழியப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கும் அதேவேளையில் தங்கள் தொழில் எவ்வித காரணமுமில்லாமல், தகர்க்கப்பட்டுப் போவது கண்டு சல்லி மீனவர்கள் செய்வதறியாது திகைத்துப் போயிருந்தனர்.

இந்த நிலையில் தான் மூன்றாவது சம்பவமும் இடம்பெற்றிருக்கிறது. செப். 19ம் திகதி மாலை காவலரணில் பதிவு செய்து விட்டுத் தொழிலுக்காக புறப்பட்டுச் சென்ற தங்கவேலாயுதம் குணசேகரன் (19), கோபாலசிங்கம் கிருஷ்ணமூர்த்தி (21) - ஒரு குழந்தையின் தந்தை ஆகியோர் கெவுளியா கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளையில் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். ஞாயிறு அதிகாலை 3.35க்கு இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்கிறது. அதே இடத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மற்றொரு படகு தகர்க்கப்பட்டிருக்கிறது. இதில் இருந்த தங்கவடிவேல் பத்மநாதன் (23), சந்திரலிங்கம் சந்திரசேகர் (32) ஆகியோர் கடலில் பாய்ந்து நீந்திய போது சிங்கள மீனவர்களால் காப்பாற்றப்பட்டு கரை சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாங்கள் அந்தப் பக்கம் போகவேயில்லையென்று கடற் படையினர் பயபக்தியுடன் சத்தியம் செய்து விட்ட நிலையில் சடலங்களை மீட்கவேண்டும் என்ற காரணத்துக்காக இனந் தெரியாதோரால், தாக்கப்பட்டதாக மனமறிந்து பொய்கூறியே உறவினர்கள் இறந்தவர்களது உடல்களைப் பெற்றுக் கொண்டனர். சிங்கள மீனவர்களும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து தங்களது கவலையை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

இதேவேளை, வெருகலுக்கு அண்மையில் வைத்துக் கடலில் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்ட சிங்கள மீனவர் ஒருவரின் வெளியிணை மோட்டார் இயந்திரம் உரியவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. சுனில் என்ற இந்த மீனவர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் தனது மோட்டாரைப் புலிகளிடம் பறி கொடுத்துள்ளார். சில நாட்களின் பின் புலிகள் வேறு ஒரு மீனவர் மூலமாக இந்த மோட்டாரை ஒப்படைத்தனர். மோட்டாரைப் பெற்றுக் கொண்ட மீனவர் அதனைப் பொலிசில் ஒப்படைத்ததைத் தொடர்ந்து முறைப்படி நீதிமன்றின் ஊடாக சுனிலிடம் மோட்டார் திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

*விவேகி*

## லிங்கநகர்: காணியை விட்டு எழும்ப படை உத்தரவு!

லிங்கநகர் மக்களுக்கு இராணுவம் மீண்டும் தலையிடி கொடுக்கத் தொடங்கியுள்ளது. நேர்மையான முறையில் அறிவுரை கூறுவது போல் இராணுவ அதிகாரிகள் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

செப். 19ம் திகதி லிங்கநகர் மக்களைப் பிளான்டன் பொயின்ட் முகாமுக்கு அழைத்த இராணுவத்தினர் ''அரசியல்வாதிகளை நம்பாதீர்கள்'' என்று அன்புடன் புத்திமதி கூறியிருக்கிறார்கள். இந்தக் காணியை விட்டு நீங்கள் என்றாவது எழும்பத்தான் வேண்டும். அந்தப்பணியை இன்றே ஆரம்பியுங்கள் என்று வேறு கட்டளையிட்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டில் இருக்கும் திருகோணமலைப் பா.உ. இரா. சம்பந்தனோ ''அஞ்சேல் நான் இருக்கிறேன்'' என்று அங்கிருந்து குரல் கொடுத்திருக்கிறார்.

அந்தப்பகுதி மக்களுக்கு பாண் பருப்புத் தொடக்கம் பனடோல் கொண்டு செல்வது வரை கட்டுப்பாடு போட்ட இராணுவம், தேசிய அடையாள அட்டை, மாவட்ட அடையாள அட்டை என்பவற்றுக்கும் மேலாக விஷேட அடையாள அட்டை விநியோகித்த இராணுவம் வீடுகட்டுவதற்கோ, திருத்துவதற்கோ எந்தப் பொருளையும் கொண்டு செல்ல அனுமதிக்காததுடன், வீட்டுக் கூரைகளைப் பிரித்து எரித்த இராணுவம், மக்களுக்கு கூறியிருக்கிறது, அரசியல்வாதிகளை நம்பவேண்டாம் என்று.

தமிழ் மக்கள் அரசியல்வாதிகளை நம்புகிறார்களா, அல்லது ஆண்டவனைத்தான் நம்புகிறார்களா என்பது ஒருபுறமிருக்கட்டும். இராணுவமும், ஏனைய சீருடைகளும் தமிழ் மக்களுக்கென்று விசேடமாகச் செய்யும் தொல்லைகளுக்கு யாரிடம் சென்று தமிழ் மக்கள் பரிகாரம் காணமுடியும் என்பது சிக்கலான விடயம்.

திருகோணமலை மாட்ட சிவில் அதிகாரிகளை நம்பி முறையிடலாம் என்றால், இராணுவத்தின் கண்ணசைவுக்குகூட, அவர்கள் கதிகலங்கிப் போய் நிற்கிறார்கள். பொலிசாரோ, இராணுவத்தை மீறி நாங்கள் செயற்பட முடிவதில்லை என்று பல தடவைகள் பொதுமக்கள் முன் அறிவித்துக் களைத்துப் போய்விட்டார்கள். இராணுவத்தைக் கண்டு சற்றேனும் அஞ்சாதவர்கள் விடுதலைப் புலிகள் தாம். அவர்களிடம் முறையிட இந்த நாட்டில் ஜனநாயகச் சட்டங்கள் இடம் கொடுக்குமா அல்லது இராணுவம் தான் ஏற்றுக் கொள்ளுமா?-

அரசியல்வாதிகளை நம்ப வேண்டாம் என்று மக்களுக்கு அறிவுரை கூறும் இராணுவம் மட்டும் என்ன செய்கிறது? போர் நகர்வுகளில் ஏராளமானவை அரசியல்வாதிகளின் நாற்காலித் தேவைகளை ஒட்டித்தானே வகுக்கப்படுகின்றன? ஜயசிக்குறு நடவடிக்கை இராணுவத் தேவையை விட அரசியல் தேவையைத்தானே கொண்டிருக்கிறது. அரசியல் வாதிகளின் பின்னால் மக்களை விட இராணுவம் உட்பட்ட படைத்தரப்பே தங்களை அறியாமலேயே சென்று கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

தமிழ் மக்களை அரசும், படைகளும் புலிகளாகப் பார்க்கும் வரை, இரண்டாம் தரமாக நினைக்கும் வரை தமிழ் மக்கள் யாரை நம்புகிறார்களோ இல்லையோ படைகளையும், அரசையும் நம்பமாட்டார்கள். இது தான் உண்மை!


*திரிபுரன்*

## ஒரே ஒரு மொழி!

பாதுகாப்பு நிதிக்கு பங்களிப்பு செய்யுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபம் தனிச் சிங்களத்திலேயே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாம். ஒரே நாடு ஒரே மக்கள் என்றால் ஒரே மொழியைப் பயன்படுத்துவதில் என்ன தவறு இருக்கிறது என்று அரசு கருதுகிறது போலும்!

எ●

# ஏன் இந்த 25 வருட மௌனம்?



ஊர்கூடி நிதி சேகரித்து மு. தளையசிங்கத்துக்கு இன்னும் சிலை வைக்கவில்லை. அது நிம்மதியான செய்தி. அது தேவையானதும் இல்லை! செப்.26,27 சனி, ஞாயிறு தினங்களில் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில், **மு. தளையசிங்கத்தின் சிந்தனைத் தளமும், படைப்புலகமும் பன்முக விமர்சன நோக்கு** என்ற தலைப்பில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் மு. தளையசிங்கத்தின் உருவப் படத்தை வைத்து, அன்னாருக்கு மலர் மாலை சாத்தி, அவரின் 70களில் எடுக்கப்பட்ட வெறும் நிழல்படத்துக்கு மன அஞ்சலி செலுத்தும் காரியத்தை யாருமே செய்யவுமில்லை. அந்த வகையில் மு. தளையசிங்கத்தின் உயிரும் சந்தோசமடையும். நாங்களும் சந்தோசமடைகிறோம். மு. தளையசிங்கம் இதற்காக வாழ்ந்தவருமில்லை, இதனை எதிர்பார்த்தவருமில்லை.

மு. தளையசிங்கம் போலி வார்த்தைகளால் இட்டு நிரப்ப முடியாத உண்மை மனிதனின் பிரதிநிதி! 70களின் பின் உருவான இளம் தலைமுறைகள் யாரும் மு. தளையசிங்கத்துடனான நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கவில்லை. அவருடைய மரணம் அந்த வாய்ப்பைப் பெரும்பாலானவர்களுக்கு வழங்கவில்லை. ஆனாலும், காலத்தால் அழிக்க முடியாத ஒரு கலைஞனின், ஒரு மனிதனின் பதிவுகளை மு.தளையசிங்கம் விட்டுச் சென்றதன் காரணமாய் 70களுக்குப் பின்வந்த இளம் தலைமுறையினரிடம் மு.தளையசிங்கம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அவர்களின் சிந்தனையின் தளங்களில் பெரும் உவப்பை ஏற்படுத்திய ஒருவராகிறார். இது உண்மை எனில், ஒரு கேள்வி இங்கு பிரதானமாகிறது.

1957களில் இருந்து 1973ல் தனது மரணம் வரை - மு. தளையசிங்கம் எமது தமிழ்ச் சூழலில் எம்முடனேயே வாழ்ந்து இருக்கின்றார். படைப்பு, விமர்சனம், அரசியல், தத்துவம் போன்ற சிந்தனைத் தளங்களில் ஒளியின் வேகத்தைவிட அவர் பாய்ச்சல் நடாத்தியிருக்கின்றார். மனங்கள் அதிர்ந்து போகக் கூடிய அளவுக்கு எழுத்தும், சிந்தனையும் அவருக்குக் கைவந்திருக்கிறது.

சுமார் 17 வருடங்கள் தனது மரணத்தின் இறுதி மூச்சுவரை படைப்பாளி தின் இறுதி மூச்சுவரை படைப்பாளி சிந்தனைவாதி என்ற வகையில் வெறும் கனவுகளில் நூல் கோர்த்து மன வெளிகளில் பட்டம் விட்டுக் கொண்டிருந்தவர் அல்ல மு. தளையசிங்கம். ஆகவே, அக்காலப் பகுதியில் மு. தளையசிங்கம் நமது தமிழ்ச் சூழலில் ஏற்படுத்திய அதிர்வு, தாக்கம் பற்றி ஏன் இதுவரை பேசப்படவில்லை என்ற கேள்வி இன்று மிகவும் முக்கியமாகிறது.

எழுத்துத் துறைக்கு வந்து 25, 50, 60 வருடங்கள் என மணிவிழா, பொன்விழா, பவளவிழா கொண்டாடும் எழுத்தாளர்கள் மாலை சூட்டிகளாக வாழும் நமது தமிழ்ச் சூழலில் எழுதி, விமர்சித்து, மனிதனை அவனது அசிங்கங்களுக்கு அப்பால், சேற்றுக் குழியிலிருந்து வெளியே எடுப்பதற்காக நமது அரசியல் தொடக்கம் ஆன்ம விடுதலை வரை உழைத்து போராடி அதிலேயே மரணித்துப் போன மு. தளையசிங்கத்திற்கு, அவரை திரும்பிப்பார்க்க அவரது சிந்தனைத் தளத்தை மறு கண்டுபிடிப்புச் செய்ய 25 வருடங்களை வெகு அலட்சியமாக நாம் கழித்துவிட்டு, மண்ணோடு மண்ணாக இற்று அழிந்துவிட்ட அவரது எலும்புக் கூடுகளைப்போல் அவரது படைப்புகளில் அவரது சிந்தனைகளும் சுவடுகள் தெரியாத ஆழத்தில் புதைக்கப்பட்டுவிட்டது என்று நாம் வாழாவிருந்தோமா? தூக்கத்தில் கிடப்பது போல் பாசங்கு செய்து கிடந்தோமா?

ஈழத்து தமிழ்ச் சூழலில் மிகத் தீவிரமான சிந்தனையும், மிகத் தீவிரமான செயற்பாடும் கொண்டவராக வாழ்ந்து மரணித்துப் போனவர்தான் மு. தளையசிங்கம். எழுத்தும், வாழ்க்கையும் வேறானது என எழுதியது போல் வாழ முடியாத அவலம் நிறைந்த நமது சூழலில், எழுதியது போல் வாழ முடியும் என வாழ்ந்து காட்டியவர் அவர். தன் வாழ் அனுபவத்திலிருந்தும் தனது சிந்தனைத் தளத்திலிருந்தும் தீர்க்கமாக சிந்தித்த அவர், தனது அற்ப ஆயுசான 38வது வயதிலேயே எழுத்தை மெய்ப்பிப்பதற்கான தனது போராட்டத்தில் தனது வாழ்வை முடித்துக் கொண்டார்.

இவரது இழப்பு நமது தமிழ்ச் சூழலுக்கு ஏற்பட்ட மிகப்பெரும் துயரம் தரும் அவலமாகும்! 1973இல் மு. தளையசிங்கத்தின் மரணம் நிகழ்ந்தவுடன் அவரது முக்கியத்துவம் பற்றி ஈழத்துச் சூழலில் யாருமே பெரிது படுத்திக் கொண்டதாகத் தெரியவில்லை என்ற செய்தி அவரை, அவரது எழுத்தை, அவரது சிந்தனையை மீள திரும்பிப் பார்க்கும் ஒரு இளம் படைப்பாளிக்கு பெரும் அதிர்ச்சியையே தருகிறது.

ஈழத்தில் மிகவும் இருட்டடிப்புக்கு உட்பட்ட அவலத்தின் உச்சம் தான் மு. தளையசிங்கம். 60,70களில் இங்கு போலி புரட்சி முழங்கிக் கொண்டு நமது படைப்புத் தளம் தொடக்கம், நமது இடதுசாரி அரசியல் வரை நமது இடதுசாரி அரசியல் வரை கூடாரமடித்து புகை எழுப்பிக் கொண்டு, ஈழக் கொள்ளிகளால் புரட்சித்தீ வளர்த்த புரட்சிவாதிகளுக்கு அன்று தேவையாக இருந்தது தங்களது இருப்பை காப்பாற்றிக் கொள்ளும் தந்திரோபாய குயுக்தி மாத்திரமே!

ஆனால், வரலாறு இன்று இந்த போலி புரட்சிவாதிகளை குப்பைக் கூடைக்குள் வீசி விட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டு, புறந்தள்ளப்பட்டு மரணம் கபளீகரம் செய்த மு. தளையசிங்கத்தை காலத்தால் அழிக்க முடியாத வாழ்வே நித்தியமான சிந்தனைவாதியாக ஒரு கால் நூற்றாண்டுக்குப் பின் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. சூரியனை கைகளினால் மறைக்க முடியாது என்பது இது தான் போலும்.

ஒரு சத்திய எழுத்தாளனுக்கு வாய்க்கப்பெறும் எதிர்காலத்தை கட்டியங் கூறுவதற்கான தூரதிருஷ்டி நிறையவே மு. தளையசிங்கத்திற்கு கைவரப் பெற்றிருக்கிறது' என்பதை அவரது படைப்புகளைப் படிக்கும் நாம் நிகழ்கால அனுபவத்தில் உரைத்தறிய முடிகிறது. 1960களில் இவரால் எழுதப்பட்ட ஒரு தனி வீடு நாவல், ஈழத்து தமிழர் அரசியலில் மிகத் தீர்க்க தரிசனமான படைப்பாகும். தமிழ்த் தேசியவாத அரசியலின் சிந்தனைத்தள முன்னோடியாக நிலை நிறுத்தப்பட்ட வேண்டியவர் மு. தளையசிங்கம். அன்றைய ஒரு தனி வீடு இன்று ஒரு தனி நாடாக நிகழ்காலத்தில் எழுந்து நிற்கிறது.

கொழும்பில் சமஷ்டிக் கட்சியாகவும், யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியாகவும் இருவேறுமுகம் காட்டி அரசியல் பிழைப்பு நடாத்திய அரசியல் சக்திகளுக்கெதிராகவும், இடதுசாரிகள் என்ற போர்வையில் சிங்கள பௌத்த தேசியவாதத்திற்கு சாமரம் வீசிக் கொண்டிருந்த போலி முற்போக்கு சக்திகளுக்கெதிராகவும் தீவிரமாக போராடியவர் மு. தளையசிங்கம். தாழ்த்தப்பட்ட, அடக்கப்பட்ட மக்களின் பக்கமே தனது எழுத்தும், வாழ்வும், சிந்தனையும் என்ற நிலைப் பாட்டிற்கும் மேல் - மரணமும் அவர்களுக்கான போராட்டத்திலே என்பதை மெய்ப்பித்தவர் என்ற உயர்ந்த ஸ்தானத்திற்குரியவராகிறார் மு. தளையசிங்கம்.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்வதற்கான சாயல் இவரைப் போல் முழு வீச்சோடு வெளிப்படுத்திய ஆளுமைகள் நம்மிடையே வேறு உள்ளனவா? இந்த நூற்றாண்டின் முதற்பாதியில் இரண்டு பெயர்கள் கிடைக்கின்றன. ஒருவர் பாரதி, மற்றொருவர் புதுமைப்பித்தன்.பாரதி தாழ்ந்து போனமைக்கு துக்கித்து மேலான ஒன்றை எழுப்ப முயன்றார். புதுமைப்பித்தன் தாழ்ந்து போனதை வெட்ட வெளிச்சமாக்கினார். இந்த வரிசையில் மூன்றாவதாக வருபவர் மு. தளையசிங்கம். பாரதியின் கருத்துலகத்தை விடவும், மு. தளையசிங்கத்தின் கருத்துலகம் முழுமையானது. மற்றொரு விதத்தில் முழுமையானது. மற்றொரு விதத்தில் சொன்னால் பாரதியின் சிந்தனையை இவர் நம் காலத்திற்குக் கொண்டு வந்து இடைக்கால சரித்திரத்திற்கும் எதிர்வினை தந்து இடைவெளிகளை அடைத்து முழுமைப்படுத்த முயன்றார் என்று சொல்லலாம் என்ற சுந்தர ராமசாமியின் கருத்து எந்த விதத்திலும் மு. தளையசிங்கம் தொடர்பான மிகையான கூற்றல்ல.

நமது ஈழத்து தமிழ்ச் சூழலில் படைப்பு, விமர்சனம், சிந்தனைத் தளம் என்பவற்றுடன் ஒரு தத்துவத் தளத்தையும் உருவாக்கியவர் மு. தளையசிங்கம். இதுபோல் யாரும் மு. தளையசிங்கத்திற்கு முன்போ, தளையசிங்கத்திற்குப் பின்போ இன்னும் தோன்றவில்லை என்ற உண்மையை யாரும் நிராகரிக்க முடியுமா?

***- எம்.பௌசர்***

காத்தான்குடி றபாய்தீன் கடத்தல்:

## மீண்டு வந்த கதை!

காத்தான்குடியைச் சேர்ந்த முஹம்மது றபாய்தீன் (18) என்பவர் காணாமல் போனது தொடர்பாகவும், அதனால் காத்தான்குடியிலும், சூழவுள்ள தமிழ், முஸ்லிம் கிராமங்களிலும் ஏற்பட்டிருந்த பதற்றம் பற்றிய செய்திகளும், பின்னர் இந்தக் கடத்தல் நாடகமே பொய் என்ற மாதிரியான தகவல்களும் பத்திரிகைகளில் வெளிவந்தன. தினக்குரல், வீரகேசரி பத்திரிகைகள், காணாமல்போன அல்லது கடத்தப்பட்ட வாலிபன் பற்றியோ, அதனால் தோன்றியிருந்த பதற்றம் பற்றிய செய்திகளையோ முதலில் வெளியிட்டிருக்கவில்லை. எல்லாம் முடிந்து திரிக்கப்பட்ட உண்மைகளாக வெளிவந்த தகவல்களை 'மாயமான வாலிபர் ஜீப்பில் வீதிவலம் என 'இப்படியும் நடக்கிறது' பாணியில் பிரதானப் படுத்தியிருந்தன.

ஆனால், உண்மையில் நடந்தது என்ன?

சைக்கிளும், அவரின் உடைகளும் வீதியில் அநாதரவாய்க் கிடக்க பெண் ஒருவருடன் - தமிழ்ப் பெண் என்று கூறப்படுகிறது - எப்படி பொலனறுவையில் இரு நாட்களைக் கழித்திருப்பார்?

'இவரது விடுதலை தொடர்பாக முஸ்லிம் பிரமுகர்களும், தமிழ்ப் பிரமுகர்களும் மிகக் கரிசனையுடன் செயல்பட்டுள்ளனர்' என்ற காத்தான்குடி பிரதேச சபை தவிசாளரின் (வீரகேசரி 15.9.98) அறிக்கையின் அர்த்தம் என்ன?

பொலனறுவையில் இருந்தவர் எவ்வாறு கல்லடியில் கைது செய்யப்பட்டார்? இவருடன் கூட இருந்த பெண் எங்கே? இவரும் காணாமல் போனது தொடர்பாக பதற்றம் நிலவவில்லையா? அவரையும் பொலிசார் ஜீப்பில் அழைத்து அறிவிக்கச் செய்தனரா?

காத்தான்குடியையும், அதனைச் சூழவுள்ள பிரதேசங்களின் நிலைமை தெரிந்தபடியாலும், இவ்வாறான கேள்விகள் எழுந்தபடியாலும் இது தொடர்பாக 'சரிநிகர்' பலரைத் தொடர்பு கொண்டு உண்மை நிலைபரத்தை அறிய முற்பட்டதில் கிடைத்த தகவல்கள் இவை:

காணாமல் போனவர் உட்பட, ஊர் மக்களில் பெரும்பாலானோர் கூறுவது, ஓர் ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் இவர் கடத்தப்பட்டுள்ளார் என்பதாகும்.

''கடத்தப்பட்டதென்று தான் அவர் சொல்கிறார். அதற்கு மேற்கொண்டு அவர் விபரமொன்றையும் சொல்கிறாரில்லை...'' என்கிறார் காத்தான்குடி பிரதேச சபைத் தவிசாளர்.

றபாய்தீனின் தாயாரும் தன் மகன் கடன் காசு வாங்கத்தான் போயிருந்தாரென்றும், குடும்பத்தில் ஏற்பட்ட தகராறோ, அல்லது பெண் ஒருவருடனான தொடர்பின் காரணமாகவோ அவர் வீட்டை விட்டுச் செல்லவில்லை என்கிறார்.

இவர் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்யுமாப் போல இன்னொரு தகவலும் கிடைத்திருக்கிறது; காத்தான்குடியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு (பெயர் தவிர்க்கப்பட்டுள்ளது) ''அவரை விட்டு விட்டோம். அவர் இப்போது சிவானந்த வித்தியாலயத்தடியால் வந்து கொண்டிருக்கிறார்.'' என்ற தொலைபேசி அழைப்பும் வந்திருக்கிறது.

இவர் கடத்தப்பட்ட மறுநாளே காத்தான்குடியில் பதற்றம் நிலவிய வேளையில் புலிகள், இச்சம்பவத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என்றும், காணாமல் போய்க் கொல்லப்பட்டவராகக் கருதப்படும் நபரின் சடலத்தையும், அவரைக் கொன்றவர்களைக் கண்டு பிடித்து அவர்களது சடலங்களையும் நாங்கள் உங்களிடம் ஒப்படைக்கிறோம் என்று தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது.

குறித்த நபர் கடத்தப்பட்டதுடன் காத்தான்குடியைச் சூழ பதற்றம் நிலவத் தொடங்கி விட்டது. கடையடைப்பு, ஹர்த்தால் என்று ஊர் ஸ்தம்பித்து விட்டது. இனமுரண்பாட்டைத் தோற்றுவிக்கிறதாய் மாறிய இந்நிலைமையைக் கண்டு இதைச் சமாளிக்கும் நோக்குடனேயே கடத்தியவர்கள் பொலிசாருடன் சேர்ந்து இந்நாடகத்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர் என்று கூறுகிறது ஒரு தகவல்.

''றபாய்தீனது பிரச்சினையில் பொதுமக்கள் எந்தத் தொடர்பும் கொள்ளத் தேவையில்லை'' எனப் பொலிசார் பள்ளிவாசல்களூடாக அறிவிப்புச் செய்திருந்தனர். எனினும், உண்மை நிலையை ஊகித்த மக்கள் எதிர்ப்புக் காட்டியே வந்துள்ளனர். இதன் தொடராகத்தான் 'கல்லடியில் கைது செய்ததாக கூறப்பட்ட ரபாய்தீனை கிட்டத்தட்ட நிர்வாணமாக - இடுப்பில் மட்டும் துண்டுத்துணி இருந்தது என பார்த்தவர்கள் தெரிவிக்கிறார்கள் - ஜீப்பில் அழைத்து பொய்யான அறிவிப்பைச் செய்யுமாறு பணித்துள்ளார்கள். இந்த அறிவிப்பின் கபடத்தன்மையை அறிந்த ஓரிரு இளைஞர்கள் 'உண்மையைச் சொல்லு. உன்னால் ஊரே கலவரப்பட்டிருக்கிறது' என்று றபாய்தீனிடம் கோர, அவரும் பொலிசார் ஊரே கலவரப்பட்டிருக்கிறது' என்று றபாய்தீனிடம் கோர, அவரும் பொலிசார் தான் இவ்வாறு சொல்லச் சொல்லியிருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார். இதனால் அங்கிருந்தவர்கள் பொலிசாருடன் தர்க்கம் புரிந்து எதிர்ப்புக் காட்டியிருக்கிறார்கள். இதன் விளைவாக பொலிசாராலும், மோட்டார் சைக்கிளில் ரோந்து செல்லும் இராணுவத்தினராலும் ஆண்கள், பெண்கள், மாணவர்கள் என பல பொது மக்கள் தாக்கப்பட்டுள்ளனர். இதன் பிறகே மேலதிகமாக பொலிசார் அனுப்பி வைக்கப்பட்டனர். இதன் போது முஸ்லிம்கள் வீதிகளை தடைப்படுத்தி தங்கள் எதிர்ப்பைக் காட்டியிருந்தனர்.

இந்த முழுப் பிரச்சினைக்கும் காரணமே கடத்தியவர்கள் தான். அதுவும் இராணுவம் பொலிசுடன் நெருங்கிய தொடர்புபட்ட ரெலோ இயக்கத்தினர் தான். புலிகள் கடத்தியிருந்தால் பொலிசாருடன் சேர்ந்து இவ்வாறான நாடகம் ஆடியிருக்க முடியாது. தேவையும் ஏற்பட்டிருக்காது. நிலைமை எதிர்பார்த்ததை விட வேறுமாதிரியாகப் போனதாலேயே இவ்வாறு திடீர் நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு கடத்தப்பட்டதற்கான காரணத்தை சிலர் 'பணம் கோருவதற்காக கடத்தியிருக்கலாம்' என ஊகிக்கின்றனர். பெரும் பதற்ற நிலையைத் தோற்றுவித்த இந்தச் சம்பவங்களில் உடந்தையாக இருந்து, அப்பாவிப் பொதுமக்களை தாக்கிய பல பொலிசார் அவசர இடமாற்றத்துக்குள்ளாகியிருக்கிறார்கள். ஆனால், கடத்தியவர்களாகக் கருதப்படுவோருக்கு - பொலிசாருக்கும் நன்கு தெரிந்திருக்கிற இவர்களுக்கு - என்ன தண்டனை? அப்பாவி இளைஞனும், ஊர் பொதுமக்களும் அவமானப்படுத்தப்பட்டு, தாக்கப்பட்ட வடுக்களை எதைக் கொண்டு அழிப்பது?

இக்கேள்விகளுக்கெல்லாம் ''அதிகாரங்கள்'' என்ன சொல்லப் போகின்றன?

***— ஷப்பா***

# செம்மணியாகும் வடக்கு-கிழக்கு!



—நாசமறுப்பான்

'காணாமல் போதல்' என்ற சொற்றொடர் எண்பதுகளின் ஆரம்பத்தில் தமிழ்ப் பகுதிகளில் ஒரு வகையான திகிலுடனும், மெல்லிய பெருமிதத்துடனும் உச்சரிக்கப்பட்ட ஒரு சொற்றொடர். அப்போது தான் விடுதலை இயக்கங்களை நோக்கி 'சொல்லாமல் போகும் புதல்வர்களின் கதை ஆரம்பமாகத் தொடங்கவிருந்தது. சொல்லாமல் போகும் புதல்விகளின் கதை தொடங்க இன்னும் ஒரு சில ஆண்டுகள் எடுத்தன. பிள்ளைகளை காணாது தவித்த பெற்றோர்கள் பாடசாலை மதில்களிலும் தெருவோரத்துப் பூவரசுகளிலும் சாத்தப்பட்டிருக்கும் அனாமதேயமாக விடப்பட்ட சைக்கிள்களை அடையாளம் காண்பதன் மூலமாக அவர்கள் இயக்கத்துக்கு ஓடிவிட்ட தகவல்களை அறிந்து கொண்டனர். இரவோடிரவாக படகிலேறி தமிழ்நாட்டுக் கரைகளை நோக்கி 'பூஞ்சிறகு முளைத்த சிட்டுக்குருவிகளாக அவர்கள் ஓடினார்கள். ஓடிப்போனவர்கள் வருவார்கள், அவர்களது வீரமும், பெற்ற பயிற்சியும் தேசத்தின் விடுதலையைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையுடன் பெரியவர்கள் காத்திருந்தார்கள்.

எண்பதுகளின் நடுப்பகுதி அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கெல்லாம் முகத்திலடித்தாற்போல் விடிந்தது. சொல்லாமல் போன புதல்வர்கள் காணாமல் போகத் தொடங்கினார்கள். தமிழ் நாட்டு மண்ணுக்குள்ளும் குடாநாட்டு மணல் வெளிகளுக்குள்ளும் அவர்கள் புதையுண்டு போனதாக பிறகு கதைகள் வரத் தொடங்கின. துப்பாக்கிகளைச் சுமந்தபடி வீதிகளில் வலம் வந்த அவர்களில் பலரின் முகங்களில் வீரத்திற்குப் பதில் வீறாப்பும், விடுதலை வேகத்திற்குப் பதில் வெறியும் எழுதப்பட்டிருந்தன. இயக்க முகாம்கள் முளைத்தன. அவற்றிற் பல விசாரணை மண்டபங்களாகவும், சித்திரவதைக் கூடங்களாகவும் மாறின. அடிக்கடி விடுதலை, ஜனநாயகம், சுதந்திரம் என்று பேசியவர்கள் காணாமற் போயினர். தெருவோரத்து மின்கம்பங்களில் மரணதண்டனைத் தீர்ப்பு எழுதிய வாசகங்கள் தொங்க விடப்பட்டிருந்தன. மாடு களவெடுத்தவன் முதல் காட்டிக்கொடுத்தவன் வரை எல்லோருக்கும் ஒரேவிதமான தண்டனை வழங்கப்பட்டது. வீதிகளில் பகிரங்கமாக அரசியல் பேச மக்கள் பயப்படத் தொடங்கினார்கள். சொல்லாமல் போன புதல்வர்களில் பலர் நீதிபதிகளாகவும், தண்டனை வழங்குவோராகவும் குற்றவாளிகளாகவும் உலாவந்தனர். பெடியங்கள் அல்லது பெடியள் என்ற அன்புப் பதம், அச்சத்துடன் உச்சரிக்கப்படும். ஒரு சொல்லாக மாறியது.

எண்பதுகளின் பிற்பகுதி தெருவோரங்களை யுத்தகளமாக்கியது. சொல்லாமல் போன புதல்வர்களின் சடலங்கள் தெருக்களில் கிடந்தன. கொலை வெறியும், கொலைகட்கான நியாயங்களும் மக்களை மௌனிகளாக்கின. காணாமல் போனவர்களின் தொகை அதிகரிக்கத் தொடங்கியது, இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட துப்பாக்கிகளும், பயிற்சியும் முழு தேசத்தையுமே வாய் மூடி மௌனியாக்கியது. சாப்பிடுவதற்காக மட்டுமே வாயைத்திறக்க வேண்டும் என்ற சட்டம் எழுதாச் சட்டமாகியது. வேறு காரணங்களுக்காக வாய்திறந்தவர்கள் காணாமல் போனார்கள்.

சமாதானப் படை வந்தது. சென்னை மீனம்பாக்கத்தில் அது விமானத்தில் ஏறும்போதே கனரக ஆயுதங்களுடன் ஏறியது. சந்திக்குச் சந்தி தெருவுக்குத் தெரு அது துப்பாக்கியை நீட்டிப்பிடித்தபடி சமாதானத்தைக் காத்தது. காணாமல் போதல் தொடர்ந்தது. தமிழ் தேசிய இராணுவத்திற்காக திடீர் திடீரென இளைஞர்களும், மாணவர்களும் கடத்தப்பட்டார்கள். துப்பாக்கியேந்தியவர்களின் அதிகாரம் மட்டுமே உண்மையான அதிகாரம் என்பது துல்லியமாக உணர்த்தப்பட்டது.

இந்தியப்படை போனது. புலிகளின் அதிகாரம் வந்தது. மீண்டும் அதே நிலை. அதே காணாமற் போதல்கள். போவதற்கான காரணங்கள் யாருக்குமே தெரியாது. காணாமற் போனவர்களில் சிலர் பிறகு 'தண்டிக்கப்' பட்டதாக தகவல்கள் வந்தன. தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக சொல்லாமல் போனவர்களில் பலரே இப்போது காணாமல் போயினர். விடுதலை பேசியவர்கள், அதற்காகப் போராட விரும்பியவர்கள் மக்களையும் ஜனநாயகத்தையும் மதித்தவர்கள், பிற இயக்கங்களின் அராஜகத்தை எதிர்த்து ஒதுங்கி வேறு வழிதேட நினைத்து இருந்தவர்கள் என்ற நீண்ட பட்டியலில் புலிகளின் கருத்துக்களை ஏற்காதவர்களில் பலரும் காணாமல் போயினர். ஆயுதம் வைத்திருந்தது அரசியல் பேசியது, முரண்பட்ட கருத்தைக் கொண்டிருந்தது என்ற பலநூறு காரணங்களுக்காக அவர்கள் காணாமல் போயிருக்கலாம் என்று பின்னர் பேசப்பட்டது.

பிறகு மீண்டும் யுத்தம். யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் பிடித்தது. யாழ்ப்பாணத்தில் ஜனநாயகத்தை, புலிகளிடமிருந்து மக்களை மீட்கும் பணியை தாம் ஏற்கப்போவதாக அது அறிவித்தது. சமாதானத்துக்கான யுத்தம் என்று கூறியபடி அது தனது டாங்கிகளால் பாழ்ப்பாணத்தின் முதுகை உழுதது. மீண்டும் காணாமல் போதல்கள் தொடங்கின. பிடிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடக்கிறது என்று தெரியாத ஒரு நிலை. அவர்கள் கொல்லப்பட்டார்களா, புதைக்கப்பட்டார்களா, உயிருடன் இருக்கிறார்களா என்று அறிய முடியாத அவலம். இந்த நிலையில் தான் செம்மணி சுடலையில் நானூறுக்கும் மேற்பட்ட உடல்கள் புதைக்கப்பட்டிருப்பதாக நீதிமன்றத்தில் ஒரு இராணுவத்தினன்-குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை வழங்கப்பட்ட ஒரு இராணுவத்தினன் தெரிவித்தான்.

யாழ்ப்பாணம் பிடிபட்டபின் காணாமல் போன அறுநூறுக்கும் மேற்பட்டோரில் எத்தனை பேர் அங்கு புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற ஆவேசமும் ஆவலும் பொங்க மக்கள் புதைகுழிகளைத் தோண்டுமாறு கோரத் தொடங்கினர். வெகுசன அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் சர்வதேச, உள்ளூர் மனித உரிமை ஸ்தாபனங்கள் எல்லாம் புதைகுழிகளைத் தோண்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரத் தொடங்கின.

ஆனாலும் அரசாங்கம் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. இந்த நானூறு புதைகுழிகள் என்ன முக்கியம் என்பது போல ஜனாதிபதி கூட வாய் திறக்கவில்லை. புலிகளால் ஒரு கொலை செய்யப்பட்டால், அதை கண்டிக்க முந்தி நிற்கும் ஜனாதிபதி செயலகம் இது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

சர்வதேச நிபுணர்கள் முதல் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு வரை எல்லோரும் தாம் இந்தப் புதைகுழிகளைத் தோண்ட உதவி செய்ததாக அறிவித்த போதும் கூட, அவற்றைத் தோண்ட உரிய நடவடிக்கைகள் எதையும் அரசு எடுக்கவில்லை.

குறைந்தபட்சம் அந்தப் புதைகுழிகளைப் பாதுகாக்கும் முயற்சியில் கூட ஈடுபடவில்லை. பதிலாக அங்கிருந்த சுடலைக் காவலாளியைக் கூட வேலைக்கு வரவேண்டாம் என்று அங்குள்ள படையினர் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செம்மணி சுடலையில் இருந்து புகை கிளம்புவதாகவும், இது அங்குள்ள சடலங்களை புதைகுழியிலிருந்து கிளப்பி எரியூட்டுவதால் வரும் புகைமூட்டமாக இருக்க வேண்டும் என்றும் ஊகங்களாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

அங்கு போய்ப்பார்க்க யாருக்கும் எந்த அனுமதியும் இல்லை.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களாவது தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு தடவை கூட்டாகப் போய் பார்த்து உண்மையைச் சொல்வார்களோ என்றால் அவர்களும் இது பற்றி மூச்சு விடுவதாகத் தெரியவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் செயலணிக் குழு உதவிக்கு வர முடியுமென அறிவித்தும் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அவர்களை அழைக்க முயலவில்லை. ஒருவேளை நானூறு புதைகுழிகளையும் தோண்டி எடுத்து எரியூட்டிய பின்பு தான் அங்கு போய்ப் பார்ப்பதற்கு ஐ.நா மனித உரிமை செயலணிக் குழுவை அரசாங்கம் அழைக்குமோ என்னவோ?

பகற் கொள்ளை அரசியல், ஆயதம் ஏந்தியவர் சொல்வதே சட்டபூர்வமானது என்று கூறும் பயங்கரவாத ஜனநாயகம், புதைகுழிகளுக்குள் காணாமல் போவதற்கான சமாதானமும் விடுதலையும் என்பதே தமிழ் மக்களின் வரலாறாகிப் போயிற்று.

அஞ்சி ஒடுங்கும் கோழைகளையும், நியாய அநியாயங்களுக்கஞ்சாத கொடுர, சித்தம் கொண்ட வன்முறையாளர்களையும் மட்டுமே கொண்டிருக்கும் மன நோயாளிச் சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கான போட்டி அங்கு நடந்து கொண்டிருக்கிறது.

அரசியல் வியாபாரிகளுக்கு வாய்ப்பான காலம் உரிமைகளுக்காக நியாயம் கேட்டுப் போராடிய காலம் போய் விட்டது. உரிமைகளுக்காக நியாயங் கேட்பதாக கூறி அரசியல் பிழைப்பு நடாத்திய காலமும் போய் விட்டது. உரிமைகளையும் நியாயங்களையும் விற்றுத் தின்ற காலமும் முடிந்து விட்டது. இப்போது உரிமைகளை மறுக்கும் நியாயங்களை பேசிப் பிழைக்கும் காலம் மக்களுக்கு எதிராக யுத்தம் நடாத்திப் பறிக்கிற காலம்.

செம்மணி விவகாரம் இதனை தெளிவாகக் காட்டுகிறது. காணாமல் போபவர்களுக்காக கண்ணீர்விட்டு கண்ணீர் விட்டே சாக ஒரு சமூகம்.

அதன் கதையைச் சொல்லிப்பிழைக்க ஒரு கூட்டம் அரசியல்வாதிகள்.

முழு வடக்குக் கிழக்குக்கு செம்மணி என்று பெயர் சூட்டும் நாள் விரைவில் வரலாம். தமிழ்க் கட்சிகள் அதுவரை சந்தோசமாக இருக்கலாம்.

○

# ஆலங்குளம்: வேரிலுள்ள பழுதுக்கு இலைக்கு மருந்து செய்த கதை!

-அஃமத்

1947ல் கல்லோயாத் திட்டத்தின் மூலம் சிங்களவர்களைக் குடியேற்றியும், 1984ல் தெஹியத்த கண்டியை அம்பாரை மாவட்டத்துடன் இணைத்து அம்பாரைப் பகுதியில் சிங்கள சனத் தொகை விகிதத்தை அதிகரிப்பதன் மூலமும் தனது தனது சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்த அரச இயந்திரமும், சிங்கள பௌத்த இனவாதிகளும் திட்டமிட்ட குடியேற்றங்களை ஏற்படுத்தி வந்துள்ளனர். இதே நிகழ்வின் தொடர்ச்சியாக அண்மையில் அம்பாரை மாவட்டத்திலுள்ள ஒலுவில், சம்மாந்துறை, அட்டாளைச் சேனைப் பகுதி மக்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகளிலும், அவர்களது வாழ்விடங்களிலுமிருந்து துரத்தியடிக்கப்பட்டு, அம் முஸ்லீம் மக்களும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலங்கள் சூறையாடப்பட்டு பொன்னன் வெளிப் பிரதேசம் ஆக்கிரமிப்பாளர்களால் "தீகவாபி" என்று நாமம் சூட்டப்பட்டு புனித பிரதேசமாக்கப்பட்டதில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு நிவாரணமாக காணிகள் வழங்க அமைச்சர் அஷ்ரஃப் மேற்கொண்ட முயற்சிகளும் சிங்கள இனவாத சக்திகளின் எதிர்ப்பால் இடையில் கைவிடப்பட்டதும், இவ்வெதிர்ப்பு அலையில் முஸ்லிம்களின் தனித்துவத் தலைவரும் அடிபட்டுப் போனதும் ஒன்றும் புதிய விடையமல்ல. இப்போதைக்கு இவை பழைய கதைகள்,

காலம் சென்றும் இந்த ஆக்கிமிப்புச் சக்திகள் தனது நடவடிக்கைகளில் பழைய குருடி கதையாக தனது இனவாத சொருபத்தை மீளவும் அம்பாரை மாவட்டத்தின் ஆலங்குளம் பகுதியில் காட்டியுள்ளனர்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவினுள் அடங்குகின்ற, அட்டாளைச் சேனையிலிருந்து சுமார் மூன்று மைல் தொலைவிலுள்ள விவசாயக் கிராம் ஆலங்குளம். இங்கு 120 முஸ்லீம் குடும்பங்களும் ஒரு தமிழ்க் குடும்பமும் வாழ்ந்து வருகின்றன. சுற்றவும் வயல் வெளிகளால் சூழப்பட்ட ஆலங்குளத்திற்கு அருகில் தான் பொன்னன்வெளி-தற்போதைய தீகவாபி உள்ளது.

கடந்த 1998.09.20. ஞாயிற்றுக்கிழமை இரவு 10மணியளவில் முகமூடியணிந்து, ஆயுதம்தாங்கிய எட்டுப்பேர் ஆலங்குளம் ஜீம்ஆ பள்ளிவாயலுக்கு பின்புறத்திலுள்ள கரும்புக் காணிகள் வழியாகவே கிராமத்துள் நுளைந்துள்ளனர். ஆலங்குளத்தினுள் நுளையுமுன்னமே மின்சாரத்தைத் துண்டித்திருந்த இவ்வாயுதம் தாங்கிய முகமூடிகள் பள்ளிக்கு அருகாமையிலும், கடை வீதிகளிலும், ஊருக்குள்ளும் நின்ற ஆலங்குளத்து முஸ்லிம்களை, அங்கிருந்து வெளியேறி ஓடும் படி சிங்களத்தால் மிரட்டியும், அடித்தும், தூஷணத்தால் ஏசியும் இம்சித்துள்ளனர். புலிகள் தான் ஊருக்குள் நுளைந்து இப்டி விரட்டுகின்றார்கள் என்று பயந்த மக்கள், போட்டதைப் போட்ட இடத்திலேயே கிடக்கப் போட்டு விடடு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வயல் வெளிகளுக்குள்ளால் ஓடி, ஆலங்குளத்தை விட்டு வெளியேறி- கச்சல் நகரில் போய்த் தஞ்சமடைந்து அவ்விரவை அங்கேயே கழித்துள்ளனர். மறுநாள்(21ம் திகதி) காலையில் அயல் கிராமமான பொன்னன்வெளியில் சென்று இது பற்றி விசாரித்துள்ளனர். இதன் போது, பொன்னன்வெளி சிங்கள மக்கள்

சம்பவத்தோடு தொடர்புடைய முகமூடிகள், தீகவாபிக்கு அருகிலுள்ள கரடிக்குளத்தின் மேற்காயுள்ள பொலிஸ் போஸ்ட்டிலிருந்தே வந்ததாகச் சொல்லியுள்ளனர். மேலும் சம்பவந்தோடு தொடர்புடையவர்களையும்,அவர்கள் பயணம் செய்த இலக்கத் தகடு மறைக்கபட்ட வெள்ளைவேனையும் 8ம் கட்டைப் பொலிஸிற்கு அருகில் தாம் கண்டதாக ஆலங்குளவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பபாக பிரதேச சபையினூடாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்படது. இதையொட்டி, தமண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.பெரேரா தலைமையில் நடைபெற்ற விசாரணைகளின் பின்பு இக் காடைத் தன நில் சம்பந்தப் பட்டிருந்த இரு பொலஸ் உத்தியோகஸ்தர்களும், ஆறு ஊர்காவல் படையினரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னரும் ஒரு தடவை இதே போல இனத்துவேஷ நடவடிக்ககையொன்று நடைபெற்றிருந்ததாகவும், அது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்படட்டும் எது வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென்றும் ஆலங்குள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது மட்டுமின்றி- தீகவாபிக்கு அருகிலுள்ள இன்னுமொரு முஸ்லிம் பகுதியாகிய றஹ்மத் நகரிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான பேர்மிட் உள்ள நெற்காணிகளை, அருகிலுள்ள பிரதேசங்களில் வசிக்கும் சிங்களவர்கள் ஆக்கிரமித்து, அவர்களை வேளான்மை செய்யவிடாது தடுத்து வருகின்றனர். இதற்கான காரணமாக தங்களுக்கு நெற்செய்கைக்கான வேறு காணிகள் இல்லை, ஆகவே நாங்களே இக்காணிகளில் வேளான்மைசெய்வோம் என்று கூறியுள்ளனர். இது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்தாலோசித்து முடிவு செய்ய இருப்பதாக அட்டாளைச்சேனை பிரதேச துணைத் தவிசாளர் எம்.எஸ். உதுமாலெப்பை சரிநிகருக்குத் தெரிவித்தார். மட்டுமின்றி றஹ்மத் நகரில் வேண்டுமென்றே பள்ளிவாயலுக்கு அருகில் சிங்களவர்களுக்குரிய சவக்காலையொன்றை அமைத்து, முஸ்லிம்களது மத அனுஷ்டானங்களுக்கு இடைஞ்சல் விளைவித்து வருவதாகவும் தெரிய வருகிறது.

மேற்குறித்த நடவடிக்கைகளின் ஒட்டு மொத்த விளைவாகப் புலப்படுவது, இனக் கலவரமொன்றின் மூலம் முஸ்லிம் மக்களை அவர்களது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து ஓட ஓட விரட்டியடித்து விட்டு, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரேயொரு மாவட்டமான அம்பாரை மாவட்டத்தையும் விழுங்கி ஏப்பம் விடும் சிங்கள இனவாதத்தின் நயவஞ்சகத்தனமான ஒரு நடவடிக்கையேயன்றி வேறொன்றுமில்லை. (ஆலங்குளச் சம்மபவத்தின் போது மக்கள் கிராமத்தை விட்டு வெளிறேிய பின்பும், மின் குமிழ்களையும், புளரொளிர்வுக் குழாய்களையும் தவிர வேறு எந்தப் பொருட்களையும் காடையர் குழு சூறையாடவில்லை என்பதிலிருந்து, வந்தவர்களின் நோக்கம் கொள்ளையிடுவதல்ல என்பது புலனாகிறது.)


ஆக, முன்பிருந்த அரசுகள் போலவே, சந்திரிக்கா அரசின் அரச இயந்திரமும் நேரடியாயும், மறைமுகமாகவும் ஆக்கிரமிப்புகளுக்குத் துணைபோயிருக்கிறது என்று தெரிகிறது. இதில் ஆச்சரியமடைய இதுவொன்றும் முதல் தடைவையல்ல.

சம்பவத்தில் ஈடுபட்ட பொலிசாரை இட மாற்றம் செய்வதும், இனி இவ்வாறு நேராது என்று வாக்குறுதி வழங்குவதும் வேரில் உள்ள பழுதுக்கு இலைக்கு மருந்து செய்த கதைபோலத்தான்.

○

# புலிகள் தமிழ் மக்களுக்கு வழங்கப் போகிற ஜனநாயகம் எது?

- விஜே டயஸ் - பொதுச் செயலாளர், சோசலிச சமத்துவக் கட்சி.



*சோசலிச சமத்துவக் கட்சியினர் ஐவர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யயப்பட்ட விடயம் தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக சோசலிச சமத்துவக் கட்சியின் செயலாளர் விஜே டயஸ் அவர்களை சந்தித்தோம். எம்முடன் அவர் நடாத்திய நீண்ட உரையாடலின் சில பகுதிகளை இங்கே தருகிறோம்.*

*எமது இந்தச் சந்திப்பு நடந்ததன் பின்னர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டவர்களில் முதலில் மூவரும், பிறகு ஒருவருமாக நால்வர் விடுவிக்கப்பட்டு விட்டார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். ஆயினும், இன்னும் ஒருவர் விடுவிக்கப்படவில்லை. இந்த ஒருவர் தமது பிடியில் இல்லையென்று புலிகள் தெரிவித்துள்ளதாக கூறிய சோ.ச. கட்சியின் அறிக்கையொன்றின்படி விடுவிக்கப்பட்டவர்களின் பெயர்கள்: பரமு திருஞான சம்பந்தன், காசிநாதன் நகுலேஸ்வரன், ராஜேந்திரன் சுதர்சன், ராஜரத்தினம் ராஜவேல்.*

**நேர்காணல் : சி. செல்வன்**

''பரமு, காசிநாதன் ஆகியோரது கைது தொடர்பாக எமக்கு கடந்த ஓகஸ்ட் நாலாம் திகதியே தகவல் கிடைத்தது. உடனே நாம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டோம். அவர்களது கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகட்கு கடிதம் அனுப்பப்பட முடியாது என்பதால் லண்டனிலுள்ள அவர்களது அலுவலகத்துடன் தொலைமடல் மூலம் தொடர்பு கொண்டு கைது செய்யப்பட்ட எமது தோழர்களை விடுவிக்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தோம். ஆனால், அதன் பின்னரே இன்னுமிரு தோழர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் தெரியவந்தது. இது தொடர்பாகவும் பல கடிதங்களை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியிருந்தோம். அதேவேளை சமதர்ம வெப் நிலையத்தினூடாக இதை உலக மக்களுக்கு அறியத்தரும் வேலையிலும் நாம் ஈடுபட்டு வருகிறோம். ஆனால், இதுவரை இக்கடிதங்கள் கிடைத்தமை தொடர்பாகக் கூட புலிகள் எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை. பதிலாக அவர்களின் ஆதரவாளர்கள் என்று சொல்லக்கூடிய ஒரு குழுவினரால் நடாத்தப்படும் ஈழம் வாசகர் வெப் நிலையத்தினூடாக 17.08.1998 அன்று ஒரு அறிவித்தல் ஒன்றை விடுவித்திருந்தார்கள். அது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நேரடி அறிக்கை அல்ல என்ற போதும் அந்த அறிவிப்பு அச்சுறுத்தல் ஒன்றை விடுக்கும் பாணியிலேயே விடப்பட்டிருந்தது. ''உலக சமதர்ம வெப் நிலையத்தைப் பாவித்து சர்வதேச சமூகத்தை இக் கைதுகட்கு எதிராக நிறுத்துவதை உடன் நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் கைது செய்யப்பட்ட சோ.ச.க. உறுப்பினர்களுக்கு உயிர் ஆபத்து ஏற்பட இடமுண்டு'' என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், இதுவரை இந்தத் தோழர்கள் கைது செய்யப்பட்டதற்கான நியாயமான காரணம் எதையும் அவர்கள் கூறவில்லை...'

''சோ.ச.கவும், அதன் உறுப்பினர்களும், ஐ.தே.க., பொ.ஐ.மு. அரசாங்கங்கள் இரண்டினாலும் நடாத்தப்படும் இனவாத யுத்த்த்திற்கு எதிராக தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கப் போராடி வந்துள்ளனர். 1972ம் ஆண்டு சிங்கள பௌத்த அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டபோது அக்கால கூட்டு அரசாங்க (ஸ்ரீ.ல.சு.க, லசசக. இ.க.க)த்திற்கு எதிராகச் செயற்பட்டனர். இச்சட்டம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழிக்கும் ஒரு அரசியலமைப்பு எனத் தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் பிரசாரம் செய்தது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத் (சோ.ச.கவின் அன்றைய பெயர்)தின் தலைமையின் கீழ் இருந்த அரச அச்சுத் தொழிலாளர் சங்கம் இவ்வரசியலமைப்பைக் கண்டித்து இதற்கெதிராக தொழிலாள வர்க்கம் கிளர்ந்து எழ வேண்டும் என்ற பிரேரணை ஒன்றை நிறைவேற்றியது. இதனை பாவகரமாகக் கருதிய ல.ச.ச.கட்சி இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்திலிருந்து இத் தொழிற்சங்கத்தை வெளியேற்றியது. ஆயினும், நாம் அந்தக்கூட்டு அரசாங்கத்தின் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டத்தை நடாத்தினோம். பல்கலைக்கழகத் தரப்படுத்தலுக்கு எதிராக அன்றைய ஆர்ப்பாட்டங்களுக்கு தலைமை வகித்ததும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே.

1977இல் ஐ.தே.க.ஆட்சி வந்தபின் நடைபெற்ற இனவெறி தாக்குதலின் போது கொழும்பு, மலையகப்பகுதிகளில், பு.க.க. மட்டுமே முன்வந்து அதற்கெதிராகப் போராடியது. 1977ல் தேர்தலில் ல.ச.ச.க., இ.க.க. ஆகியன படுதோல்வியடைந்து தமது பத்திரிகைகளையும், அரசியல் நடவடிக்கைகளையும் பெட்டி கட்டி வைத்திருந்த ஒரு காலத்தில் பு.க.க. அப்போராட்டத்தைத் தமது கையில் எடுத்துக் கொண்டு தனித்து நின்று தமிழ் மக்களைப் பாதுகாக்கப் போராடியது. இப்போராட்டம் காரணமாகவே பு.க.கவின் ராஜாங்கனை அமைப்பாளர் ஆர்.பி.பியதாச இனவாத ஐ.தே.க. பொலிசாராலும், கொலைகார கைக்கூலிகளாலும் 1979ம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டார். தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரத்திற்கு அண்மையில் கிராமம் ஒன்றில் அவர் நடாத்திய துணிகரமான போராட்டத்திற்கு ஐ.தே.க. அரசாங்கத்தினாலும், அதனது பொலிசாலும் கிடைத்த பதிலடியாகவே அது நடந்தது. 1983இல் இனவாத இரத்தக் களரியும், படுகொலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. அப்போது விசேடமாகப் பு.க.க. பிரதான அலுவலகமும், அச்சகமும் இதே ஐ.தே.கவால் கட்டவிழ்த்துவிடப்பட்ட கொலைவெறி இயக்கத்தின் இலக்காக ஆகியிருந்தது. அப்போது அது அயலவர்களின் உதவியினாலேயே காப்பாற்றப் பட்டது. அவர்கள் கொலைவெறியர்களை பொய் கூறி வேறு திசையில் திருப்பி விட்டதனாலேயே காப்பாற்றப்பட்டது. ஆனாலும், இனவாத குண்டர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எமது கட்சியினூடாகவும், அதன் பத்திரிகைகளின் ஊடாகவும் நடத்திய போராட்டம் தொடர்பாகவும் அவர்கள் காட்டிய குரோதத்தைத் தடுக்க முடியவில்லை. அதற்குப் பதிலாக ''கம்கறு மாவத்தை'' பத்திரிகை ஆசிரியர் தோழர் ரத்னாயக்கவின் ரத்மலானையில் அமைந்திருந்த, முக்கியமான நூல் நிலையத்தையும் கொண்டிருந்த அவரது வீட்டை முழுமையாகவே தீ வைத்து நாசமாக்கினர். ஐ.தே.க அரசாங்கமும், பொலிசும் அதனுடன் சேர்ந்து செயற்பட்ட இனவாத குண்டர்களுமே இதனைச் செய்தனர். இவையெல்லாவற்றுக்கும் மத்தியில் நாம் தமிழ்த் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இதற்குச் சமனான போராட்டத்தை செய்து கொண்டிருக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமது அரசியலுக்கு; வேலைத் திட்டங்களுக்கு நாம் தடையானவர்கள் என இப்போது எமது தோழர்களைக் கைது செய்யத் தொடங்கியுள்ளது.

1983ல் 6வது திருத்தச் சட்டத்தை எதிர்த்து அரசியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும் முன்நின்று பிரயத்தனங்களை எடுத்தது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. 1983இல் ''கம்கறு மாவத்தை'' பத்திரிகை வெளியீட்டாளரும், நிருபருமான ஆனந்த வக்கும்புற வவுனியாவுக்குச் சென்று தகவல் திரட்டிய போது அவரை கைது செய்யும் முயற்சியொன்று நடைபெற்றது. பின்னர் அவர் கட்சிக் காரியாலயத்தில் (அப்போது காரியாலயம் வெள்ளவத்தையில் இருந்தது) வைத்து கைது செய்யப்பட்டார். இதேகாலத்தில் 6வது திருத்தச் சட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது. அது தமிழ்த் தேசிய இனத்திற்கு தாம் விரும்பும் அரசியலை மேற்கொள்ள, அதனை நோக்கி மக்களை அணிதிரட்ட உள்ள ஜனநாயக உரிமையை இல்லாதொழிக்கும் விதியாக அது இருந்ததனால் அதனை எதிர்த்தோம். நாம் அந்த ஆர்ப்பாட்டத்தையும், தமிழ் மக்களுக்கெதிராக தொல்லைகள், இடையூறுகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்துடன் சேர்த்து நடத்தினோம். இந்நிலைமையில் ஆனந்த வக்கும்புறவின் கைதுக்கெதிராக நாம் நீதிமன்றம் சென்றோம். அடிப்படை மனித உரிமைகள் மனுத்தாக்கல் செய்தோம். இத்தொல்லைப் படுத்தல்கள், தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலைப் போலவே தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளை பாதுகாப்பதற்காகப் போராடும் பு.க.க.தினதும் அடிப்படை உரிமை மீறல் என்றும் தெரிவித்திருந்தோம். அது 6வது திருத்தச் சட்டத்திற்கே உயர் நீதிமன்றத்தில் சவாலாக விளங்கும் என்று விளங்கியதால் சட்டமா அதிபர் அவ்வழக்கை வாபஸ் பெற்று ஆனந்த வக்கும்புற விடுவிக்கப்பட்டார்.

இத்தகைய வரலாறு கொண்ட ஒரு கட்சியின் உறுப்பினர்களைத் தான் புலிகள் இன்று கைது செய்திருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் எமது உறுப்பினர்களது கைதுக்குக் காரணம் ஏதும் கூறவில்லை. பின்னர் கைது செய்யப்பட்ட அவர்கள் இருவரும் கிளிநொச்சியில் உள்ள காஞ்சிசிவபுரம் என்ற இடத்திலுள்ள அவர்களது வீடுகளில் வைத்து த.வி.பு. இயக்க உளவுப் பிரிவின் தலைவர் செல்லு கலைவேந்தன் என்பவராலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். ''உங்களது மகன் ரெலோ உறுப்பினர் இல்லாது விடின் பயப்படுவது ஏன்?'' என்று செல்லு கலைவேந்தன் உறவினர்களிடம் கேட்டுள்ளார். இப்பேச்சு பயங்கரமானதாகும்.

தமிழ்த் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் தனிநாடொன்றை அமைத்து, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துத் தருவதாகவே த.வி.பு. இயக்கம் கூறுகிறது. அது நடைபெறாத ஒன்று என்பதற்கான சான்றே இக் கைதுகள். அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு சமதர்மம் தொடர்பாக சுதந்திரமாக ஜனநாயக வழியில் ஆர்ப்பாட்டம் செய்ய இடமளிக்காமல் அவர்களைக் கைது செய்வதாயின் தமிழ்த் தேசிய இனத்தின் எந்த ஜனநாயக உரிமைகளை அவர்கள் பாதுகாக்கப் பார்க்கிறார்கள். அது சந்திரிகா குமாரணதுங்கவின் அரசாங்கம் பாதுகாக்கும் ஜனநாயகம் போன்ற ஒன்றையா? அல்லது அதனையும் விட மோசமான ஒன்றையா? ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே ஐ.தே.கவின் 17வருட சாபத்தைக் கவிழ்த்தோம் என்றும், தாம் வந்து அதைப் பாதுகாப்பதாகவும், பொ.ஐ.முவும் கூறுகிறது. ஆனால் தொடர்பூடகவியலாளர் மீது தாக்குதல் நடாத்துகிறது. துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறது. நாம் அவற்றுக்கெதிராக போராடுபவர்கள் அல்லவா. எம்மைத் தாக்குவதன் மூலம் த.வி.பு. இயக்கம் தானும் ஒரு பொ.ஐ.முதான் என்று காட்டுகிறதா? 1994ல் பொ.ஐ.மு. கூறிய பச்சைப் பொய் ஒன்றை போலவே த.வி.பு.இயக்கமும் கூறுகிறதா?

உண்மையிலேயே நாம் த.வி.புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக ஏதாவது போராட்டத்தைச் செய்யும் என எதிர்பார்த்தோம். அவர்கள் விரும்பும், ஏற்றுக் கொள்ளும் முறையொன்றின்படி ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதானால், அதற்காக நடாத்தும் போராட்டத்துக்குச் சார்பாக இலங்கை அரசாங்கத்தினதும், படைகளதும், அவ்வொடுக்குமுறைக்கெதிராகவும் அன்றும் போராடினோம் இன்றும் போராடுகிறோம். அதே உரிமையைத் தான் இன்று த.வி.புலிகள் இயக்கம் எமக்குத் தர மறுக்கிறது.

எமது உறுப்பினர்கள் த.வி.புலிகள் இயக்கத்தால் இவ்வாறு கைது செய்யப்பட்டமை இதுவே முதற் தடவையாகும். அவ்வாறு கைது செய்யப்பட்டமையோ, படுகொலை செய்யப்பட்டமையோ, இதற்கு முந்திய காலப்பகுதியில் இடம்பெறவில்லை. அது தனியே த.வி.புலிகள்இயக்கம் எமக்கு மன்னிப்பு கொடுத்ததனால் ஏற்பட்ட ஒன்றல்ல. த.வி.பு. இயக்கம் பற்றி அறிந்து கொண்டு அவர்கள் மத்தியில் எவ்வாறு வேலை செய்வது என்று புரிந்து கொண்டு கவனமாக செயலாற்றியதால், தப்பிப் பிழைத்ததென்றே சொல்ல வேண்டும். த.வி.பு. இயக்கத்தின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருந்த போதும்,

—19

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்:

# கவனிக்க வேண்டிய விடயங்கள்!

அரசிற்கும், பேரினவாதிகளுக்கும் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் என்றால் வேப்பம்பெண்ணெயை பருகியது போல தொடர்ந்து கசக்கின்றது. அண்மையில், இந்தியாவுக்கு விஜயம் செய்த அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அங்கும் கூட, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்திற்கு அவசியமில்லை. இது உள்நாட்டுப் பிரச்சினை. இதனை நாமே தீர்த்துக் கொள்வோம் எனக் கூறியுள்ளார். பேரினவாதிகளோ அதற்கு ஒரு படிமேலே போய் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்படக்கூடிய அளவுக்கு இங்கு பிரச்சினை எதுவும் இல்லையெனப் பிரச்சாரம் செய்கின்றனர்.

ஆனால், உண்மை நிலை என்ன? உள்நாட்டு முயற்சிகளின் ஊடாக இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? இதுவரை அவ்வாறான முயற்சிகளுக்கு என்ன நடந்தது? பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என்பவை அழிந்து போனமைக்கு காரணம் என்ன? அவை கிழித்தெறியப்பட்டமையும், முடமாக்கப்பட்டமையும் எதனை வெளிப்படுத்துகிறது. அரசியல் யாப்பிலேயே கூறப்பட்ட 29ம் பிரிவு, தமிழ் மொழி அரச கரும மொழி என்பன நடைமுறையில் செயற்படாமை எதனைக் காட்டுகின்றது.

இவையெல்லாம் நிரூபிக்கும் விடயம் ஒன்று தான். அதாவது உள்நாட்டு முயற்சிகளினால் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதே அதுவாகும். பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கு மட்டுமல்ல. அதனை நடைமுறையில் செயற்படுத்துவதற்கும், பேரினவாதிகளினால் கபளீகரம் செய்து விடாமல், பாதுகாப்பதற்கும் கூட, மூன்றாம் தரப்பின் பங்கு அவசியமாக உள்ளது.

இதற்கு நல்ல உதாரணம் இலங்கை - இந்திய ஒப்பந்தமும், அதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை அரசாங்க முறையும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களது அபிலாஷைகளைத் தீர்க்காத, பலவீனமான தீர்வுகளாக அவை இருந்தபோதும், இந்தியாவின் பிரசன்னத்தினால், தான் அப்பிச்சை கூடக் கிடைத்ததென்பதே உண்மை நிலையாகும். தற்போது இந்தியா ஒப்பந்தக் கடப்பாட்டில் இருந்து நடைமுறையில் விலகியதும், ஒப்பந்தமும் மாகாண சபையும் தமிழர்களைப் பொறுத்தவரை செத்துக் கிடக்கின்றது.

இது தான் உண்மை நிலையாயின், பேரினவாதிகளும், அரசும் மூன்றாம் தரப்பை ஏன் எதிர்க்கின்றனர். இதற்கான பதில் வெளிப்படையானது. எல்லோரும் அறிந்தது. அதாவது, மூன்றாம் தரப்பு தலையிட்டால் பேரினவாதிகளின் அபிலாஷைகளுக்கு ஏற்ப ஒரு அரைகுறைத் தீர்வினை தமிழ் மக்களின் தலையில் கட்டிவிட முடியாது. ஜீ.எல்.பீரிசின் வெட்டிக் குறைக்கப்பட்ட தீர்வுப்பொதியும், இந்தியாவின் அதிகாரம் இல்லா மாகாண சபையும் கூட பேரினவாதிகளுக்கு கசக்கும் போது அவற்றிலும் கூடுதலாக வரப்போகின்ற தீர்வுகளை எவ்வாறு தான் ஜீரணிக்க முடியும்.

**பரந்தாமன்**

தீர்வினைப் பொறுத்தவரை மட்டு மல்ல, அதன் நடைமுறைச் செயற்பாட்டிலும், பாதுகாப்பிலும் கூட, தமது முன்னைய விளையாட்டுக்களைத் தொடர முடியாது என அவர்கள் கருதுகின்றனர். முன்பென்றால், தமிழர்களின் அபிலாஷைகள் சட்டமாக வராது. வந்தாலும் நடைமுறையில் செயற்படாது. அதனையும் மீறி செயற்படுத்த வேண்டும் என்று நிர்ப்பந்தம் வந்தால், தமது பெரும்பான்மையைப் பயன்படுத்தி சட்டத்தையே நீக்கிவிடுவது. இதுதான் தமிழர்கள் கண்ட அனுபவ வரலாறு. சோல்பரியின் 29வது பிரிவிலிருந்து ஜே.ஆரின் அரச கருமமொழிவரை இதுதான் நிலை.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் தீர்வுகள் வரும்போது இவ்விளையாட்டுகள் விளையாடுவது கடினம். தீர்வுகள் தொடர்பா செய்த, செய்யாது விடப்பட்ட எல்லாக் கருமங்களுக்கும் சர்வதேச ரீதியாக பதிலளிக்க வேண்டிய கடப்பாடு அரசுக்கும், பேரினவாதிகளுக்கும் ஏற்படும்.

இப்பிரச்சினைக்கெல்லாம் பேரினவாதிகளுக்குள்ள ஒரேஒரு வழி மூன்றாம் தரப்பு என்ற குசுகுசுப்பே வரவிடாமல், அமுக்கி விடுவது தான். ஜயசிக்குறு என்ற போர்வையில், புலிகளை அழித்து, கைது, சித்திரவதை, விசாரணை என தமிழ் மக்களையும், தமிழ்ப் பத்திரிகையாளர்களையும், அடக்கி, பிச்சைகளின் மூலம் தமிழ்க் கட்சிகளை அரவணைத்து இதற்கு வழிதேட அவர்கள் முற்படுகின்றனர்.

எனினும், இவற்றை எல்லாம் மீறி மூன்றாம் தரப்பை நோக்கி, இலங்கையின் இன அரசியல் நகர்கின்றது என்பதே இன்றைய உண்மை நிலை. இந்நிலையில் தமிழ் மக்களின் கடப்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும். என்பது இன்று எழுந்துள்ள முக்கிய வினா.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தைப் பொறுத்தவரை, தமிழ் மக்கள் இரண்டு விடயங்களில் கவனமாக இருத்தல் மிக அவசியமானது. ஒன்று மூன்றாம் தரப்பாக வரப்போகிறவர் யார் என்பது? இரண்டாவது, தனது அரசியல் பலத்தினை உறுதிப்படுத்துவது.

முதலாவது விடயத்தினைப் பொறுத்தவரை, மூன்றாம் தரப்பாக வரப்போகின்றவர் யார்? தமது சொந்த நலன்களின் அடிப்படையில் இப்பிரச்சினையில் தலையிட விரும்புகின்றவர்களையும், இலங்கை அரசுக்குச் சார்பானவர்களையும் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இந்த அடிப்படையில் இந்தியாவையோ, அமெரிக்காவையோ, அவர்களின் ஆதிக்கத்தின் உள்ள நிறுவனங்களையோ நடுவர்களாக அனுமதிக்க முடியாது. அவர்களுக்குத் தமிழ் மக்களின் அபிலாஷைகள் என்பது இரண்டாம் பட்சம். அவர்களின் சொந்த நலன்களே முதன்மையானதாக இருக்கும். இந்திய தலையீட்டில் வந்த இலங்கை- இந்திய ஒப்பந்தம் இதற்கு நல்ல உதாரணம். அதில் இந்தியா தனது நலனுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தில் பத்து வீதத்தினைக் கூட தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக் கொடுக்கவில்லை என்பதே கசப்பான உண்மை.

புலிகள் முன்வைத்தது போல இப்பிரச்சினையில் எவ்வித சொந்த நலன்களும் இல்லாத நோர்வே, சுவீடன் போன்ற ஸ்கண்டிநேவிய நாடுகளை நடுவர்களாக அனுமதிக்கலாம். ஒரு நாட்டினை மட்டும் அனுமதிப்பதை விட பல நாடுகளின் கூட்டை நடுவர்களாக அனுமதிப்பது பயனுடையதாக இருக்கும். நாடுகளை அனுமதிப்பது, நாடுகளுக்கிடையேயான உறவுகளுக்குப் பிரச்சினையாக இருக்குமானால், சர்வதேச நிறுவனங்களை அங்கீகரிக்கலாம். இதிலும் கூட, பல நிறுவனங்கள் கூட்டாக செயற்படுவதே அதிக நடுநிலையைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

இரண்டாவது விடயம் மிக முக்கியமானது. எந்த நடுவர்கள் பிரச்சினையைத் தீர்க்க வந்தாலும், தீர்வுகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் முழுமையாக உள்ளடக்கப்படுவதற்கு தமிழ் மக்களது அரசியல் பலத்தினை உறுதிப்படுத்துவது அவசியமானதாகும். துரதிருஷ்டவசமாக உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் தமிழ் மக்களின் அரசியல் பலம் போதுமானளவு உறுதிப்படுத்தப்படவில்லை. புலிகளைத் தவிர ஏனைய அரசியல் சக்திகள் இக் கடப்பாட்டில் இருந்து விலகி எத்தனையோ வருடங்களாகி விட்டது. எந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் நடக்காத நிகழ்வுகள் இங்கு நடக்கின்றன. சொந்த மக்களை நசுக்கி அழிக்கும் அரசுடன், கட்டிப்பிடித்து சரசமாடுபவர்களாக தமிழ்க் கட்சிகள் உள்ளன. எனவே, அரசியல் பலத்தினை உறுதிப்படுத்தும் கடப்பாட்டினை அவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. தமிழ்ப் பத்திரிகைகளும், சுயேட்சை

—19

---



## செ.யோகநாதன் — 1997:

# அயோக்கியத் தனத்திற்கு கிடைத்த சாகித்திய விருது!

வெளிவராத பதிப்பிக்கப்படாத ஒரு நாவலுக்கு எங்கேயாவது விருது வழங்கப்பட்டதை அதுவும் சாகித்திய விருது வழங்கப்பட்டதை யாராவது அறிவீரோ?

சொல்கிறேன். கேளும். இந்த அவலம், இந்த அயோக்கியத்தனம் 97 தமிழ் நாவலுக்கான சாகித்திய விருது செ.யோகநாதனின் துன்பக்கேணி க்கு வழங்கப்பட்டதில் இருந்து நடந்தேறி விட்டிருக்கிறது.

துன்பக்கேணி வீரகேசரியில் ஒவ்வொரு ஞாயிறு இதழிலும் தொடராக இன்னும் வந்து கொண்டிருக்கிறது. நாவலே இன்னும் அச்சு உருவாக்கம் பெறவில்லை. எந்தப் புத்தகசாலையிலுமோ யாரின் கைகளிலுமோ இன்னும் துன்பக் கேணி நாவல் இல்லை.

வெளியிடப்படாத, பதிப்பிக்கப்படாத நாவலுக்கு எப்படி சாகித்திய விருது வழங்கப்பட முடியும்?

பின் கதவால் நுழைந்து அங்கீகாரமும், விருதும் அரச பதவிகளும் பெறுவது நீண்டகாலமாய் எமது தமிழ்ச் சூழலில் நடந்து வருகிறது. இது முற்போக்கு கூட்டத்திற்கு கை வந்த கலை என்று பல தடவை குற்றம் சாட்டப்பட்டே வந்திருக்கிறது. ஆனாலும் அக்கூட்டத்தில் உள்ள எல்லோரையும் இதற்குள் அடக்கவும் முடியாது!

ஏனெனில், முற்போக்குக்காரர்களே செ யோகநாதனின் இன்னும் பதிப்பிக்கப்படாத இந்த நாவலுக்கு பரிசு வழங்க முடியாது என எதிர்த்து நின்றும் செ. யோகநாதன் வழமையான பாணியில் பின் கதவால் நுழைந்து இரண்டு அமைச்சர்களின் காலில் விழுந்து - முப்பதாயிரம் ரூபா (30,000/=) பண முடிப்பையும் வெள்ளியில் செதுக்கிய பரிசுப் பேழையையும் தூக்கி வந்துவிட்டார்!

97 தமிழ் நாவலுக்கான சாகித்திய விருது செ.யோகநாதனுக்கு கிடைத்து அமைச்சரிடமிருந்து பரிசு பெறும் செ.யோகநாதனின் புன்னகையுடன் கூடிய படமும் பத்திரிகைகளில் பிரசுரமாகி விட்டது.

நடந்தது என்ன?

1997 சாகித்திய விருதுக்கான நூல்கள் மதிப்பீட்டுக்காக கோரப்பட்டவுடன் அவசர அவசரமாக கணனியில் எழுத்துக் கோர்க்கப்பட்ட புத்தகத்தை Print Outஇல் எடுத்து தேர்வுக்கு சமர்ப்பித்திருக்கிறார். 1997 டிசம்பரில் புத்தகம் வெளியிடப்பட்டதாகவும் அதில் குறிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் சாகித்திய மதிப்பீட்டுக் குழுவில் இருந்தவர்கள் தமிழ் நாவல்களை தேர்வுக்குட்படுத்தும் போது அச்சில் தானே இருக்கிறது. செ.யோகநாதன் மோசடியில் ஈடுபடமாட்டார், என்பதன் அடிப்படையில் செ.யோகநாதனின் படைப்பும் தேர்வுக்கு உட்படுத்தினார்கள்.

சாகித்திய தமிழ் நாவல் குழுவில் இருந்த சிவகுருநாதன், சோமசுந்தரம், சோமகாந்தன் என்போர் செ.யோகநாதனின் துன்பக் கேணிக்கு முறையே 70,73,30 புள்ளிகளை வழங்கி இருந்தனர். செ.யோகநாதனுக்கு அடுத்ததாக அப்துஸ் ஸமதுவின் தர்மங்களாகும் தவறுகள் நாவல் தெரிவாகியிருந்தது. துன்பக் கேணி இன்னும் நூலுருவாக்கம் பெறவில்லை என்ற உண்மை புள்ளிகளை வழங்கிய பின்பே அவர்களுக்குத் தெரிய வந்தது.

அரச சாகித்திய விருதின் 8வது விதியான **கையெழுத்துப் பிரதிகளும், பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் மட்டும் பிரசுரமாகி இதுவரை நூலுருப்பெறாத ஆக்கங்களும் கவனத்திற் கொள்ளப்பட** என்ற விதிக்கமைய செ.யோகநாதனின் துன்பக்கேணி நாவலுக்குபரிசு வழங்கப்பட முடியாதன் காரணமாய் - இம்முறை தமிழ் நாவலுக்கு பரிசு வழக்கப்படுவதில்லை எனப் பின்னர் தீர்மானிக்கப்பட்டு பத்திரிகைகளில் விசயமும் வெளிவந்தது.

விட்டனா சிங்கன்! இருக்குதே கைவரப் பெற்றகலை. ஒடி அஷ்ரஃப் அமைச்சரின் காலில் விழுந்தான். சாகித்திய விருதுக்குப் பொறுப்பான அமைச்சரின் கீழலிலும் விழுந்தான். கிடைத்தது முப்பதாயிரம் ரூபா காசும், பரிசுப் பேழையும் - காணாததற்கு பத்திரிகையில் வேறு கம்பீரச் சிரிப்பு. மார்தட்டல்கள்

உண்மையில், நூல் வெளிவரவில்லையே, வெளிவந்ததாகக் காட்டவேணுமே, அதற்குத்தானே இருக்கிறது தினகரன் பத்திரிகை - நூல் அறிமுகம் பகுதியில் மாத்தளை வடிவேலன் என்பவர் துணையோடு நூல் அறிமுகம் எழுதப்படடது. *(98 செப்டெம்பர் 20 ஞாயிறு தினகரன்)*

இது என்ன அயோக்கியத் தனம் 1,2,3 என செ.யோகநாதன் செய்வதைப் பார்த்து கொதித்து நின்கின்றனர். - 1997 சாகித்திய குழுவில் இருந்தவர்கள் இதற்கு எதிராக தங்கள் சாகித்திய மதிப்பீட்டுக் குழு உறுப்புரிமையை இராஜினாமாச் செய்ய முன் வந்திருக்கின்றனர் சோமசுந்தரம், சோமகாந்தன் போன்றோர். முன்னாள் தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன் இராஜினாமாச் செய்யாமல் இதற்கு எதிராக சாகும்வரை சாகித்திய மதிப்பீட்டுக் குழுவில் உள்ளிருந்து போராடப் போவதாக தமிழ்க் கட்சிகளின் அறிக்கைகள் போல் காண்பவர்களிடமெல்லாம் அழுது கொண்டு வீரம் சொரிய பேசித் திரிகின்றார்.

தினகரன் ஆசிரியர் அச்சுருவாக்கம் பெறாத புத்தகத்திற்கு, செ.யோகநாதனின் அயோக்கியத்தனத்தை மறைப்பதற்கு ஏரிக்கரைப் பத்திரிகையை பயன்படுத்தி முற்போக்கு அணிக்கு புது இரத்தம் பாய்ச்சி இருக்கிறார். சாகித்திய விருதுக் குழுவில் (நாவல்) இருந்த ஒருவர் சொன்ன மொழியில் சொல்வதாக இருந்தால், செ.யோகநாதனின் துன்பக் கேணியை பதிப்பு அச்சு வடிவில் பார்த்ததாக ஏமாற்ற முனையும் தினகரன் ஆசிரியர் ராஜ ஸ்ரீகாந்தனின் கண்ணும் நூல் விமர்சனம் எழுதிய மாத்தளை வடிவேலனின் கண்ணும் குருடாகிப் போகட்டும்!

- சத்திய பாரதி பதிப்பகம், 202/1 காலி வீதி, கல்கிசை என்ற முகவரியில் அச்சுப்பதிப்புப் பெற்ற துன்பக்கேணி நாவலின் ஒரு பிரதியையாவது யாராவது ஒருவர் பெற்று அச்சில் வந்ததை நிரூபிப்பார்களேயானால் - அவர்களுக்கு உண்மையை நிலைநாட்டிய மாபெரும் பரிசு வழங்கப்படும் என்பதை இத்தால் அறியத் தருகிறோம்.

-சோமண்ணை

# "தாயக மண்ணுக்கான ஏக்கமே எங்களிடம் உள்ளது!"

பி. ஏ. எஸ். சுபியான்

*(வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் செயலாளர்)*

**நேர்காணல்: எம்.கே.எம்.ஷகீப்**

*எட்டாண்டுகள் நிறைவையெட்டும் வடக்கு முஸ்லிம்களின் அகதி வாழ் நிலை இன்று எவ்வாறுள்ளது? ஓர் அமைப் பென்ற ரீதியில் அதனை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்? அவர்கள் தொடர்பான செயற் பாடுகள், இன்று வரையான வளர்ச்சிகள் எவ்வாறு இருக் கிறது என்பதைப்பற்றிச் சொல்வீர்களா?*

வடக்கு முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டுகளை விட இவ்வாண்டில் விஷேட மாற்றங்கள் ஏதும் நிகழ்ந்துள்ளதாக குறிப்பிட்டுச் சொல்ல ஒன்றுமில்லை. முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் குறிப்பிட முடியாது. வருடங்கள் செல்லச் செல்ல அகதிகளுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய எந்த ஆக்கபூர்வ நடவடிக்கையையும் அரசாங்கமோ, அல்லது பொது ஸ்தாபனங்களோ எடுக்கவில்லை. எனவே அகதிவாழ்வே பழக்கப்பட்ட வாழ்வாகி விட்டது. இதுவே தொடர் நிகழ்வாகவும் இருந்து கொண்டிருக்கிறது.



பி.ஏ.எஸ். சுபியான்

*அண்மைக் காலமாக மேலெழுந்து வரும் மீள்குடியேற்றச் சிந்தனைகள், உணர்வுகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

உண்மையிலேயே, ஒவ்வொரு வடக்கு முஸ்லிமும் தன் தாயக மண்ணில் மீண்டும் வாழ்ந்து விட வேண்டும் என்ற ஏக்கத்திலேயே இருக்கிறான். தற்போது சில பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கக் கூடிய சூழ்நிலையில், மக்கள் மீளமர்வதற்கு சாத்தியங்கள் உண்டென்ற அபிப்பிராயம் நிலவுகிறது. இருந்தபோதிலும், பெரும்பாலான மக்கள் இந்த வெளியேற்றத்திற்கு யார் அடிப்படைக் காரணமோ அவர்களுடனான - விடுதலைப் புலிகளுடனான - பேச்சுகளூடாக கிடைக்கப்பெறும் சம்மதம் மூலமே அங்கு மீண்டும் போய் வாழலாம் என்ற கருத்துக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் வாழ்க்கைக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தையே மக்கள் தற்போது அதிகம் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

*விடுதலைப் புலிகளுடன், இணக்கப் பாடுகள் காண்பது தொடர்பாக நீங்கள் ஓர் அமைப் பென்ற ரீதியில் இதுவரை ஏதும் நடவடிக் கைகள் எடுத்துள்ளீர்களா?*

மீள்குடியேற்றம் தொடர்பாக புலிகளுடன் பேச வேண்டும் என்ற ஆணையும், ஆலோசனையும் அமைப்பென்ற ரீதியில் எமக்கு மக்களால் தரப்பட்டிருந்தது. நாம் ஆரம்ப நாட்களிலிருந்தே அதற்கான முயற்சிகளை எடுத்து வந்துகொண்டிருந்தோம். ஆனால், எமக்கு குறிப்பிட்ட காலம் வரை சரியான பதில்கள், சமிக்ஞைகள் கிடைக்கவில்லை. வடக்கு முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்துகிற அமைப்பென்ற வகையில் எமது அமைப்பின் நடவடிக்கைகளை ஏற்றிருப்பது போன்ற ஒரு சில சமிக்ஞைகளை காண்பித்திருக்கிறார்கள்.

இவ்வாறிருக்கையில், ஐ.நா. பிரதிநிதி ஒலாரா ஒட்டுன்னு இலங்கை வந்தவேளை புலிகளைச் சந்திக்க வன்னிக்குச் சென்றிருந்த போது வடபுல முஸ்லிம்கள் பற்றியும் அங்கு பேசப்பட்டிருக்கிறது. அந்தச் சந்தர்ப்பததிலே "முஸ்லிம்களின் மீள்வருகைக்கு நாங்கள் தடையாக இருக்கமாட்டோம்" எனப் புலிகள் இவரிடம் தெரிவித்ததாக இவரின் அறிக்கையிலிருந்தும், புலிகளின் வானொலிச் செய்தியிலிருந்தும் அறிய முடிந்தது.

இந்நிலைமைக்குப் பிறகு மக்களிடையே "மீள்குடியேற்ற உற்சாகம்" அதிகரித்ததென்றே சொல்லலாம். ஒரு சிலர் போகலாம் என்ற முடிவுக்கே வந்தனர். இன்னும் சிலர் இதை நாங்கள் உடனே ஏற்றுக்கொண்டு போகமுடியாது என்ற கருத்தில் இருந்தனர். இதற்குத் தான் பலமான ஆதரவும் இருந்தது. எனவே இதனைத் தொடர்ந்து, NMRO ஒரு ஒருமித்த முடிவை எடுக்கவேண்டும் என்ற அடிப்படையிலேயே பல கூட்டங்களை பரவலாக நடத்தியது. இதில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் பேராளர் மாநாட்டையும் நடத்தி இது விடயமாக ஆழமாக ஆராய்ந்தது. இறுதியிலேயே புலிகளுடன் பேசி இணக்கப்பாட்டுக்கு வந்ததன் பின்னர்தான் மீள்குடியேற வேண்டும் என்றும், புலிகளுடன் பேசுவதற்கான ஒரு அங்கீகாரத்தை மீண்டும் வடபுல முஸ்லிம்கள் எமது அமைப்பிற்கு வழங்கினர். பேச்சுவார்த்தை இடம் பெறுகையில் ஒரு சர்வதேச கண்காணிப்பு இருக்க வேண்டும் என்ற ரீதியில் சர்வதேச ஸ்தாபனங்கள் மூலமாக தொடர்புகள் மேற்கொள்கிறோம். இதுதொடர்பில் அதிகம் சொல்ல முடியாததையிட்டு மனம் வருந்துகிறேன். ஏனென்றால், இந்த ஸ்தாபனங்களின் முயற்சிகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் வெளியிட வேண்டாம் என்று நாங்கள் கேட்கப்பட்டிருக்கிறோம். இந்த முயற்சி நல்ல சைக்கினைகளுடன் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

*அகதி வாழ்வின் எட்டாண்டு நிறைவையொட்டிய உங்களது நிகழ்ச்சித் திட்டங்கள் என்ன?*

1995லும், 97லும் ஆண்டு நிறைவுகளையொட்டி எழுச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இம்முறை ஒரு தீர்மானத்துக்கு வந்துள்ளோம். அதாவது, நாட்டில் யுத்தம் தொடர்ந்து இருக்கும் வரையிலும் வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் சாத்தியப்படாது. அதற்கு பாதுகாப்பு உத்தரவாதமும் இருக்காது. எனவே, யுத்தத்திற்கு முடிவு காணப்படவேண்டும். இம்முடிவில் அரசு, எதிர்க்கட்சி, புலிகள் என முத்தரப்பின் சம்மதம்/ உடன்பாடு இருக்க வேண்டும். இதற்காக இவர்களை வற்புறுத்துவதுடன், புலிகளையும் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைச் சூழலுக்கு வருமாறான வேண்டுகோளை முன்வைத்தே இந்நிகழ்வை முன்னெடுக்கலாமென்று இருக்கின்றோம். கடந்த கால நிகழ்வுகள் கூட சமாதானத்திற்கான வேண்டுகோளாகவே இருந்தன. தொடர்ந்தும் அவ்வாறே இருக்கப்போகின்றன.



அத்துடன் வழமையான கண்காட்சி, போட்டி நிகழ்வுகளோடு, புத்தளத்தில் ஒரு மக்கள் பேரணியை திரட்டி, சமாதானத்திற்கான நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்துள்ளோம். அதில் அரசியல்வாதிகளைத் தவிர்த்து சமாதானத்தை விரும்பக்கூடிய சர்வசமயப் பெரியார்களை அழைப்பதுடன், சமாதானத்திற்கான முயற்சி எடுத்து வரும் ஸ்தாபனங்களையும், தனிநபர்களையும் அழைத்து அந்நிகழ்ச்சியை நடத்த எத்தனிக்கின்றோம். வடக்கு முஸ்லிம்கள் - இவ்வளவு இன்னல்கள் பட்டபின்னும் - சமாதானத்தைத் தான் விரும்புகிறார்கள் என்ற ரீதியில், சமாதானத்தின் மூலமே தங்கள் சொந்த மண்ணுக்குத் திரும்ப விரும்புகிறார்கள் என்ற செய்தியை இந்நாட்டு

— 19

## இறந்துபோன ஈழத்துப் பெண்கவிஞர்கள் நால்வர்

அடையாளப்படுத்திச் சொல்லக்கூடிய, சிறந்த கவிஞைகளாய் இனங்காணப்பட்ட, இருந்திருந்தால் சிறந்த பெண் கவிஞர்களாய் ஆகியிருக்கக் கூடிய நான்கு பெண் கவிஞர்கள் பற்றிய குறிப்பு இது.

இந்த நால்வர் பற்றிய குறிப்புக்கள் என் கிடைப்பிற்கும், அறிவுக் கெட்டியதுமானதாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பெண் கவிஞர்களின் இருப்பு, இறப்புப் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெறாமையினால் அவர்களைப் பற்றிய குறிப்பை இணைத்துக் கொள்ள முடியவில்லை. வானதி, கஸ்தூரி, பாரதி போன்ற விடுதலைப் புலிக் கவிஞைகளின் கவிதைகளை அவ்வப்போது பார்த்திருந்தாலும், அவர்களை இந்தக் குறிப்பில் சேர்ப்பதற்கான - முன்சொன்னது போலவே - சான்றுகள், தகவல்கள் போதுமானதாகக் கிடைக்கவில்லை. எனினும், இவர்களும் இறந்துபோய்விட்டதாகவே அறியமுடிகிறது.

* *"எனது கைக்கெட்டியவரை/ எனது அடையாளங்கள் யாவற்றையும்/ அழித்துவிட்டேன் - சிவரமணி*

* *என் கனவுகள் / கனவுகளாகவே இருந்துவிடப் போகின்றனவா/ நான் கூடக் கனவாகி விடுவேனோ - கிருஷாந்தி ரட்ணராஜா*

* *என் கனவுத் தாஜ்மஹால்/ சாயத்தொடங்கியது/ காவல் காத்த அன்னமும் பறந்து விட்டது - மஃப்கூரா*

என்று தங்கள் இறப்புப் பற்றிய முன்னறிவிப்புக்களாக கவிதைகளை எழுதிவிட்டுச் சென்றுள்ளார்கள் மூவர். நான்காமவர் செல்வி. புலிகளால் கடத்தப்பட்டு இல்லாமல் செய்யப்பட்டவர். செல்வியும், சிவரமணியும் ஈழத்து அரசியல் சூழல் உருவாக்கிய சிறந்த கவிஞைகள். நன்கு அறியப்பட்டவர்கள். இவர்களின் கவிதைகள் தொகுப்புகளாக வந்துள்ளன.

மற்றைய இருவரான கிருஷாந்தி ரட்ணராஜாவும், மஃப்கூராவும் இறப்புவரை அறியப்படாதவர்களாகவே வாழ்ந்து, இளவயதிலேயே (கிருஷாந்தி 25 வயதிலும், மஃப்கூரா 19 வயதிலும்) நோய்வாய்ப்பட்டு இறந்துபோனவர்கள். இறப்பின்பின் இவர்கள் எழுதிவைத்திருந்த குறிப்பிட்டுச் சொல்லும்படியான கவிதைகளே இவர்களை இனங்காட்டின.

திருமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட கிருஷாந்தியின் சின்னச் சின்னக் கவிதைகளையும், டயரிக் குறிப்புக்களையும் திருமலை, 'கூடல் பதிப்பகம்' 'காலங்கள்' எனும் தலைப்பில் நூலாக்கியிருக்கிறது.

தென்னிலங்கையின் திக்வெல்லையைப் பிறப்பிடமாகக் கொண்ட முஸ்லிம் கவிஞையான மஃப்கூராவின் கவிதைகள் பற்றிய கட்டுரையொன்றை எம்.எச்.எம்.ஷம்ஸ் தினகரனில் எழுதியிருந்தார்.

இறப்பின் பின் இவர்களை அறிமுகஞ் செய்ததில் சு. வில்வரத்தினமும், எம்.எச்.எம்.ஷம்ஸும் பாராட்டுக்குரியவர்கள். இவர்களின் கவிதைகளைப் பார்க்கையில் நல்ல கவிஞைகளாக உருவெடுக்கக் கூடிய வீச்சுக்கள் தெரிகிறது.

*"நாளையும் இன்றும்*
*அழுவதற்கு கண்ணீர் கிடையாது;*
*வார்த்தைகள் மட்டும்*
*எதிர்காலம் குறித்த தேடலில்*
*நுழைய ஆரம்பிக்கையில்*
*பிணம் - எரிந்து கொண்டிருந்தது..." - கிருஷாந்தி.*

*"என் இலட்சியங்கள்*
*எனைவிட்டும் வெகு தூரம் ஓடிக் கொண்டிருக்கின்றன.*
*அதனைத் துரத்திப் பிடிக்க திராணியற்ற பொம்மையாய்*
*அனுங்கி, அனுங்கி நடக்கின்றேன் - மஃப்கூரா.*

ஷம்ஸின் குறிப்பொன்று இங்கு பொருத்தமானது. "...இனித் தனது வாழ்வு நிச்சயமில்லை என்றாகிவிட்ட ஒருவருக்கு தன் கவிதைகளின் சிறப்பை யார் போற்றினாலென்ன? அவர்தான் கேட்பதற்கு இருக்கப் போவதில்லையே! ஆம். அத்தகைய ஒரு சூழ்நிலையில் பிறக்கும் கவிதைகள் வித்தியாசமாக மிளிர்வதுண்டு. ஏனெனில், அவற்றில் எந்தவித எதிர்பார்ப்பும் இருப்பதில்லை...."

எதிர்பார்ப்பில்லாமல் பிறந்த இவர்களின் கவிதைகளும், இவர்களின் இறப்பும் துயர் பரப்புகின்றன. நல்ல ஆளுமையுள்ள பெண் கவிஞைகளது இளவயது இறப்புக்கள் கவலை தருகின்றது. செல்வி, சிவரமணி, பாரதி, வானதி, கஸ்தூரி, கிருஷாந்தி ரட்ணராஜா, மஃப்கூரா என்று பட்டியல் நீள்கிறது. (இருந்தும் இவர்களின் படைப்புக்களை அவர்களின் இல்லாமையின் பின் நூல்வடிவில் வாசிக்கக் கிடைப்பது ஆறுதல் அளிக்கிறது.)

'காலங்கள்' தொகுப்பிலுள்ள சு. வில்வரத்தினத்தின் முன்னுரை பற்றியும், அதிலுள்ள சில கவிதைகள் பற்றியும் சில குறிப்புகள்;

80களில் வந்த பெண்களின் கவிதைத் தொகுதி 'சொல்லப்படாத சேதிகள்' என பதிவாகியுள்ளது. அது 'சொல்லாத சேதிகள்'. - நிருபா எனும் புகலிட கவிஞை 'நிருபமா' எனத் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளார். கிருஷாந்தியின், தொகுப்புகளாக வெளிவந்துள்ளவற்றில் சில கவிதைகள் அவருடையதல்ல என்கிறார் அவரின் ஆசிரியரும் நெருங்கிய நண்பருமாயிருந்த மதுசூதனன். இத்தொகுப்புத் தொடர்பாய் தான் தொடர்பு கொள்ளப்படல் நல்லது எனத் தெரிவிக்கப்பட்டிருப்பினும் தன்னுடன் தொடர்பு கொள்ளப்படவில்லை என்கிறார் மது.

இத்தொகுப்பைக் கொண்டுவர வேண்டும் என்பதில், சு.வியின் ஈடுபாடு மெச்சத்தக்கது தான். இருப்பினும், இவ்வாறான தவறுகள் தொகுப்பின் நோக்கத்தையே சிதைத்து விடுமல்லவா?

***'காலங்கள்'***

*தொடர்புக்கு,*
*கூடல் பதிப்பகம்,*
*198/2, கிளை வீதி, உவர்மலை,*
*திருகோணமலை.*




# எல்லைக் கிராமங்களில் என்ன நடக்கிறது?

## ஆராய்கிறது பிரஜைகள் ஆணைக்குழு

இனப்பிரச்சினை காரணமாக வடக்கு கிழக்கு யுத்தத்தில் சிக்குண்டுள்ள எல்லைப்புற கிராமங்கள் பற்றிய விபரங்களைத் திரட்டுவதற்கான பிரஜைகள் ஆணைக்குழு எனும் பெயரில் ஒரு அமைப்பொன்று அண்மையில் மேர்ஜ் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எல்லைப்புற கிராம மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், அப்பிரச்சினைகளுக்கான காரணிகள், அதன் விளைவுகள் என்பவற்றை ஆராய்வதற்காகவே இந்த திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எல்லைப்புற தமிழ், சிங்கள, முஸ்லிம் கிராம மக்களிடையேயான பரஸ்பர புரிந்துணர்வை வளர்ப்பதற்கும், சமாதானத் தீர்வொன்றை அவசியப்படுத்துவதற்காக மக்களை விழிப்பூட்டுவதற்கும் தடையாக இருக்கின்ற காரணிகளை இனங்காண்பது இதன் முக்கிய நடவடிக்கையாக உள்ளது.

இவற்றை செய்வதற்கு நிச்சயமாக வெளியிலுள்ள வெகுஜன இயக்கங்களின் பணி போதுமானதாகவும், சாத்தியமானதாகவும் இல்லை. எனவே அவ் எல்லைப்புறங்களைச் சார்ந்த மக்களைக் கொண்டே இதற்கான பிரஜைகள் குழுவை அமைத்து, அவற்றிற்கிடையான தொடர்பு வலைப்பின்னலை ஏற்படுத்தி அதனை ஒரு ஆணைக்குழுவாக செயற்படுத்துவது பலனைத் தருமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற எல்லைப்புற கிராமங்கள் இருக்கின்ற அனுராதபுரம், புத்தளம், வவுனியா, திருகோணமலை, பொலன்னறுவை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை போன்ற பிரதேசங்களுக்கு இந்த ஆணைக்குழு விஜயம் செய்யவிருக்கிறது.

இப்பிரதேசங்கள் போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், மற்றம் பொது வசதிகள் போன்ற சேவைகள் கிடைக்காத பிரதேசங்களாக இருந்து வருகின்றன. தினசரி தொழில் செய்வதில் முகம் கொடுக்கின்ற தடைகள், அரச அதிகாரிகள், ஊழியர்கள் என்போருடன் தொடர்புறுகையில் முகம் கொடுக்கின்ற சிக்கல்கள் பாதுகாப்புத் துறையினராலும் ஆயுதக் குழுக்களினாலும் ஏற்படுக்கின்ற இன்னல்கள், மனித உரிமை மீறல்கள், இவற்றினால் விசேடமாக பெண்கள், சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள், ஊர்காவற் படைக்கு இளைஞர் யுவதிகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற போது அவர்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல்கள் மற்றும் மரணங்கள், விபத்துகள் என்பவற்றினால் பாதிக்கப்படும் போது அவர்களுக்கான நட்டஈடு, நிவாரணங்கள் பெறுவதில் உள்ள சிக்கல்கள் என்பவற்றை ஆராய்வதில் ஆணைக்குழு விசேட கவனம் செலுத்தவிருக்கிறது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தின் 50வது வருட பூர்த்தியைக் கொண்டாடுகின்ற 1998 டிசம்பர் 10ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ள மக்கள் பிரதிநிதிகள் மாநாட்டில் இந்த ஆணைக்குழுவின் சாராம்ச அறிக்கையும், அதன் பிரேரணைகளும் வெளிப்படுத்தவிருக்கிறது.

இவ் ஆணைக்குழுவில் வழக்கறிஞர் எஸ்.ஜீ.புஞ்சிஹேவா, பேராசிரியர் திருமதி. லீலா அய்சக் ஆகியோர் தலைவர்களாக இருக்கின்றனர். அத்துடன் பேராசிரியர் காலோ பொன்சேகா, பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம, பேராசிரியர் பீ.வி.ஜே.ஜயசேகர, கலாநிதி ஸ்ரீஸ்புல்லாஸ்ரீ, பேராசிரியர் சிவச்சந்திரன், கலாநிதி சுமனசிறி லியனகே, டொக்டர் ஜோயெல் பேர்ணாண்டோ, கலாநிதி தீபிகா உடுகம, கலாநிதி.சித்திரலேகா மௌனகுரு, மொஸ்ரீமட் சமீம்( முன்னாள் கல்வி இயக்குனர்), பர்னடீன் சில்வா (சமூக சமய நிலையம்), பத்மா சிவகுருநாதன் (ஓய்வுபெற்ற பேராசிரியர்), நீர்வை பொன்னையன் (தமிழ் எழுத்தாளர்), மொஹான் சமரநாயக்க (சுதந்திரப் பத்திரிகையாளர்) போன்றோர் இவ் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

கடந்த செப்டம்பர் 23ஆம் திகதி இவ் ஆணைக்குழு பற்றிய விளக்கமளிப்பதற்கான பத்திரிகையாளர் மாநாடொன்று தேசிய நூகல சேவை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் இது தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டன.

இதன் அமைப்புக் குழுவினர் இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் ஒரு கோரிக்கையும் விடுத்துள்ளனர். இதில் இவ் ஆணைக்குழு செல்கின்ற எல்லைப்புற பிரதேச மக்களின் கையெழுத்தையும் திரட்டி வருகின்றனர். அந்தக் கோரிக்கையில் பின்வருவன அடங்குகின்றன.

### கோரிக்கை

1. போரை மிக விரைவில் முடிவுக்கு கொண்டு வரும் வகையில் அரசியல் தீர்வு நடவடிக்கைகளை மேற் கொள்ளும்படியும்,
2. அத்தகைய ஒரு தீர்வை ஏற்படுத்தி மீண்டும் சமாதானத்தை நிலைநாட்டும் வரை எல்லைக் கிராமவாசிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உயர்ந்தபட்ச நடவடிக்கை எடுக்குமாறும்,
3. போரின் விளைவாக மரணத்தைத் தழுவியோர், காணாமற் போனோர், அங்கவீனமுற்றோர் பொருட்டு நட்டஈடு வழங்கும்படியும்,
4. போரின் விளைவாக பாதிப்படைந்துள்ள சீவனோபாயத் தொழில்கள், சுகாதாரம், கல்வி போன்ற வசதிகளை மீண்டும் சுமுக நிலைக்குத் திரும்பும்படியும் விவசாயப் பயிர்கள் சேதமடைந்தமையால், பாதிக்கப்பட்ட விவசாயக் கடன்களை மீளச் செலுத்துமாறு தொடரப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெறுமாறும்,
5. போரின் விளைவாக தாம் பரம்பரையாக வாழ்ந்துவந்த இருப்பிடங்களை விட்டு வெளியேற நேர்ந்த அனைத்து மக்களுக்கும் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குச் செல்வதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்குமாறும்,
6. இப்பிரதேசத்தில் வாழும் தமிழர்களுக்கு சுயமொழியில் கடமையாற்றும் உரிமைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும்,
7. இப்பிராந்தியத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்களை மனித நேயத்துடன் கடமையாற்றுவதற்கு ஊக்குவிக்கும்படியும்
8. இப்பிரதேசங்களைச் சார்ந்த பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகள் சீர்குலையாதவாறு பாடசாலைகள் சிறந்த முறையிலும் ஒழுங்காகவும் நடைபெறுவதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்,
9. யுத்தத்தை சாட்டாக வைத்து நாளுக்கு நாள் இப்பிரதேசங்களில் அழித்தொழிக்கப்படும் காடுகளை அழிவிலிருந்து பாதுகாத்துத் தருமாறும்,
10. இத் தேவைகளின் பொருட்டு அவ்வவ் பகுதிகளைச் சேர்ந்த பிரஜைகள் குழுக்கள் மக்கள் அமைப்புக்கள் பங்குபற்றுவதற்கு இடமளிக்கும்படியும்

வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

---

விக்ரமபாகு எழுதுகிறார்...

# ஜே.வி.பி. பற்றிய மனக்குழப்பம் ஏன்?

# புலிகள் மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாடு என்ன?



இன்று பரந்தளவிலான இடதுசாரி முன்னணியை அமைப்பது அவசியம் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அப்படியானதொரு முன்னணி ஒன்றிற்கு மேற்பட்ட கட்சிகளையும், அமைப்புகளையும் கொண்டதாகவே இருக்கும். அப்படியான கட்சிகள், அமைப்புகள் எல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய பொதுவான வேலைத் திட்டத்தைக் கொண்டதொரு முன்னணியாகவே அது அமையுமேயொழிய அவை எல்லாம் ஒத்த கொள்கையைக் கொண்டதாக இருப்பதில்லை என்பது சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல.

இடதுசாரி முன்னணி ஒன்றினை உருவாக்கும் முயற்சிகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்தபோது, ஏன் இடதுசாரிகள் ஐக்கியப்பட வேண்டும் என்னும் விடயம் பற்றி ஜே.வி.பியும் ஒரு விவாதத்தினை ஆரம்பித்து எமது கட்சிக்கும் அழைப்பு விடுத்திருந்தது. ஜே.வி.பிக்கும், எமது கட்சிக்கும் முரண்பாடுகள் இருந்த போதும் அவ் அழைப்பினை ஏற்று நாம் கலந்துரையாடல்களை நடத்தி வருகிறோம். ஜே.வி.பியில் நான் நம்பிக்கை வைத்திருப்பதாகவும், ஜே.வி.பி., ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி மற்றும் தியச கல்வி வட்டம் ஆகிய கட்சிகளோடு சேர்ந்து பொதுப் போராட்டங்களில் ஈடுபடுவது தொடர்பாகவும், என்மீது பழி சுமத்தப்பட்டு வருகிறது. அதாவது, குறிப்பாகக் கூறினால், ஜே.வி.பி. இனவாதம் கொண்டதாகவும், சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினை ஏற்றுக் கொள்ளாதிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

சுயநிர்ணய உரிமையினை தெளிவாக ஏற்றுக்கொள்ளும் நிலையில் ஜே.வி.பி. இல்லையென்பது உண்மைதான். அது எமக்கு நன்கு தெரியும். ஆனால், அது சுயாட்சி, சமத்துவம் என்னும் கொள்கைகளை ஏற்றுக் கொள்கிறது என்பதை காணக் கூடியதாயுள்ளது. ஜே.வி.பியினர் கூறுவது யாதெனில், சுயநிர்ணய உரிமை என்பது தேசங்கள் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுதலைப் பெறுவதற்கான சுலோகமே ஒழிய சக இனங்களுக்கிடையிலான உரிமையைப் பொறுத்தது அல்ல என்பதாகும். இந்த சந்தர்ப்பத்தில் பழைய இடதுசாரி கட்சிகள் எவ்வாறான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளன என்று பார்ப்போம். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை சுயநிர்ணய உரிமை விடயம் தொடர்பாக அதன் நிலைப்பாடு தெளிவற்றதாக உள்ளது. எக்காரணம் கொண்டும் பிரிந்து செல்லும் உரிமையை அக்கட்சி ஏற்றுக் கொள்ளவேயில்லை. எனவேதான், ஜே.வி.பி. இவ்விடயம் தொடர்பாக கடைப்பிடிக்கும் நிலைப்பாடானது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினர் நிலைப்பாட்டினைக் காட்டிலும் சிறப்பானதோ மோசமானதோ அல்ல. மறுபுறத்தில் லங்கா சமசமாஜக் கட்சியை எடுத்துக் கொண்டால், அது எவ்விதமான சுயநிர்ணய உரிமையினையும் ஆதரித்து நிற்கவில்லை. அது தமிழ்த் தாயகம் என்ற கோட்பாட்டினையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு வலதுசாரி நோக்கு நிலையிலிருந்து சந்திரிகாவின் அரசியல் தீர்வுப் பொதியினை விமர்சிக்கும் ல.ச.ச.கட்சி காணிக் கொள்கை விடயத்தில் பொதி தெளிவற்றதாகவுள்ளது எனக் கூறுகிறது.

என்மீது விமர்சனம் வைப்பவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ல.ச.ச.க. ஆகிய கட்சிகளில் காணப்படும் ஓட்டை உடைசல்களைப் பற்றிக் கவலைப் படுவதில்லை. இக்கட்சிகள் விரும்பினால், அவற்றோடு எமது விமர்சகர்கள் ஐக்கிய முன்னணியாக இணைந்து கொள்வதற்கும் சித்தமாயிருக்கிறார்கள். ஆனால், மேற்படி கட்சிகள் தானே தமிழ் மக்களுக்கெதிராக இனக் கொலை யுத்தமொன்றினை நடத்திக் கொண்டிருக்கும் அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

அனுருத்த ரத்வத்த யுத்தமய பேரினவாத சக்திகளின் கதாநாயகனாக விளங்குகின்றார். அவரோடு கூட முரண்பாடின்றி கூட்டு அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதானது, அன்றைய ஜே.வி.பி., டி.ஜே.வி.பி. என அழைக்கப்பட்டு வந்த தேசபக்த இயக்கத்துடன், அதாவது மாதுலுவாவே சோபித்த தேரர், சம்பிக்க ரணவக்க, சிறிமாவோ பண்டாரநாயக்கா, முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ஆகியோர் சார்ந்திருந்த அமைப்பு ஒன்றுடன் கூட்டுச் சேர்ந்திருந்ததைக் காட்டிலும் சிறப்பானதோ மோசமானதோ அல்ல. மேற்படி போலியான ஏகாதிபத்திய விரோத இந்திய மேலாதிக்க விரோத சக்திகளுடன் ஒன்றிணைந்ததன் காரணமாக அன்றைய ஜே.வி.பி. பொசுக்கித் தள்ளப்பட்டது. ஜே.வி.பியின் அன்றைய தவறான தந்திரோபாயத்தின் காரணமாகவே அத்தகைய பெரிய விலையைக் கொடுக்க வேண்டியிருந்தது.

மேற்படி தேசபக்த சக்திகள் இன்று முன்னெப்போதும் இல்லாதவாறு செயற்பட்டுக் கொண்டிருப்பது கண்கூடு. இன்று அவை வேறு நாமங்களைச் சூட்டி கொண்டு அதாவது பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் அல்லது சிங்கள வீரவிதான பதனம . எனும் வேடத்தைத் தரித்துக் கொண்டு நாடகம் நடத்தி வலம் வருகின்றன. உண்மையில் இந்த சக்திகள் மிகுந்த ஒருங்கமைப்புடன் இரகசியமான முறையிலும் சதிக் கும்பல்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

பலர் மனதில் உள்ள குழப்பம் யாதெனில், அன்றைய ஜே.வி.பி. தான் இன்றைய ஜே.வி.பி. என்பதாகும். அது ஒரு சரியான மதிப்பீடு அல்ல. இன்று தெளிவாகக் காணக்கூடியது யாதெனில், ஜே.வி.பி. மேற்படி தீய சக்திகளிடமிருந்து விடைபெற்றுள்ளது என்பதாகும். அதுமட்டுமல்லாமல் தேசபக்த இயக்கம் என்றழைக்கப்பட்டு வரும் பிற்போக்குச் சக்திகளை எதிர்த்துப் போராடுவதற்கும், ஜே.வி.பி. தயாராயுள்ளது. ஜே.வி.பியினருக்கும், மேற்படி சக்திகளுக்குமிடையில் பல்கலைக்கழகங்களிலும், கிரிபத்கொடை போன்ற நகரங்களிலும் பலத்த மோதல்கள் இடம்பெற்று வந்துள்ளதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அத்தோடு நின்று விடாது ஜே.வி.பி. வெளியீடாகிய நியமுவ எனும் பத்திரிகையின் மூலம் இனவாத சக்திகளும், அனுருத்தவின் ஆதரவாளர்களும் அம்பலப்படுத்தப்பட்டு வருகின்றனர். இப்படியாக இன்று ஜே.வி.பி. செயற்பட்டு வருவதானது ஓரளவு சாதகமான நிலைமை என இனங்காணப்படுவது அவசியமாகும்.

ஜே.வி.பியின் நிலைப்பாட்டுக்கும் ந.ச.ச.கவின் நிலைப்பாட்டுக்கும் இடையில் இன்னும் பாரிய வித்தியாசம் உண்டு. ஆனால், அதனைக் காட்டிலும் கூடிய வேறுபாடுகள் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ல.ச.ச.கவுக்கும், ந.ச.ச.கவுக்கும் இடையில் உள்ளது என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலிருந்து கம்யூனிஸ்ட் கட்சியோ, ல.ச.ச.கவோ வெளியேறினாலும் கூட அவை தமிழ்த் தாயகம் அல்லது சுயநிர்ணய உரிமையினை ஏற்றுக் கொள்ளாதபடியால் புதிய இடதுசாரி முன்னணியில் சேர்ந்து கொள்வதற்கும் லாயக்கற்றவையாகும்.

ந.ச.ச.க. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் வெற்றியீட்ட வேண்டும் எனும் பற்றுறுதியுடன் உழைக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளினால், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தினை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல இயலாது. அது தான எமககும், அவர்களுக்கும் இடையில் வேறுபாடுகள் இருப்பதற்கான காரணமாகும். அவர்கள் முதலாளித்துவ சார்பான கொள்கைகளிலிருந்து விடுபட வேண்டும். அவற்றை மாற்றிக் கொள்ள வேண்டும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலாளித்துவ சக்திகளை அவர்கள் நம்பவும் கூடாது. அத்தோடு வெகுஜனப் போராட்டங்கள் வளர்ச்சியடைவதற்கு இடமளிக்க வேண்டும். விடுதலைக்காகப் போராடும் கட்சிகளை அனுமதிக்க வேண்டும். இவ்வாறான திருத்தங்களை அவர்கள் செய்து கொண்டால், சிங்களப் பேரினவாத சக்திகளை தோற்கடித்து தமிழ்த் தாயகத்திலிருந்து விரட்டலாமென நாம் நம்புகிறோம். அது மட்டுமல்லாமல், தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டமானது சிங்கள முற்போக்கு சக்திகளுக்கு ஏன், இந்திய உபகண்டம் முழுவதற்கும் ஒரு கலங்கரை விளக்காக விளங்கும்.

## உறுதி தர எவரால் இயலும்?

செப்டம்பர் 9ஆம் திகதி இரத்தினபுரியில் தோட்டத் தொழிலாளர்களின் லயன்கள் பல தாக்கப்பட்டு அவர்களின் உடமைகள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்ட சம்பவம் குறித்து சென்ற சரிநிகரில் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. மிகுந்த சிரமங்கள் மத்தியில் வேவல்வத்தை. அலுப்பொல. ஹேரக்கிஸ்லேன், வெல்லவெல (திக்கு-முக்குலான). இராசகல்ல. போன்ற பிரதேசங்களுக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களிடம் நேரடியாக எடுக்கப்பட்ட விபரங்கள் இந்த இதழில் தரப்படுகின்றன.

புகைப்படங்கள் எடுப்பது பொலிஸாரால் தடுக்கப்பட்டது. பின்னர் களவாக எடுக்கப்பட்டதனால் பல முக்கிய புகைப்படங்களை எடுக்க முடியவில்லை. கலபொட பகுதி அதிக பாதிக்கப்பட்ட பகுதியாக சொல்லப்பட்ட போதும் எம்மால் சகல பிரதேசங்களுக்கும் செல்ல அங்குள்ள நிலைமைகள் சாதகமாக இருக்கவில்லை.

கலபொடையில் மூன்று லயன்கள் எரிக்கப்பட்டுள்ளன. ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார். நான்கு பெண்கள் இருந்த வீடொன்றில் புகுந்த காடையர், ஒரு பெண்ணை பாலியல் வல்லுறவு புரிந்து கடும் வதைக்குள்ளாக்கியுள்ளனர். இவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இறந்து போனார் என்று தெரியவருகிறது. மாத்தம்பையில் ஒருவரை கூட்டிச் சென்று அடித்துக் கொன்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இப்பகுதிகளிலுள்ள தோட்ட லயன்கள் அடிமைக் குடில்களாகவே உள்ளன. இவர்கள் இதனை விட்டு குறிப்பிட்ட ஒரு எல்லை மட்டும் தான் போக முடியுமாம்.

வேவல்வத்தை பகுதியைத் தவிர ஏனைய பகுதிகள் வேவல்வத்தையைச் சேர்ந்தவர்களைத் தேடி வந்தற்காகவும், அவர்களுக்குப் புகலிடம் அளித்ததற்காகவுமே தாக்கப்பட்டுள்ளன.

இன்று பல தலைவர்கள் அந்த இடத்தை தமது அரசியல் பிரச்சாரத் தளமாக பாவித்து வருகின்றனர். சம்பவம் நடந்து பல நாட்கள் சென்ற பின்னர் தான் அதிகாரத்திலுள்ள தலைவர்களே போய் வந்தார்கள். இத்தனை கொடுமைகளும் அரசாங்கத்தைச் சேர்ந்த அரசியற் தலைவர்களின் மேற்பார்வையிலேயே இடம்பெற்றிருக்கின்றன. சொந்த மக்களை இவ்வளவு பெரிய வெறிக்கு பலியாக்கியதில் அரசாங்கத்துக்குள்ள பின்னணி தெரிந்தும், அரச படையினரின் பங்களிப்பு தெரிந்தும், சம்பவம் நடந்து இரண்டு நாளில் பாராளுமன்றத்தில் நடந்த அவசரகாலச் சட்டத்துக்கு இ.தொ.கா. வைச் சேர்ந்தவர்கள் சகலரும் ஆதரித்து வாக்களித்தனர். இந்திய-வம்சாவளி மக்கள் பேரணி என்று அண்மையில் அமைக்கப்பட்ட அமைப்பைச் சார்ந்தவர்கள் பலர் இதனை கண்டித்து மலையகமெங்கும் அடையாள வேலை நிறுத்தம் செய்யும்படி பேரணியைக் கேட்டுக் கொண்டும் தொண்டமானால் அது நிராகரிக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும், தொண்டமான் தனது இறுதிக் காலத்தில் தனது மக்களுக்கு தான் மிச்சம் வைத்து விட்டுப் போனவற்றை கடந்த 11ஆம் திகதி நேரடியாகச் சென்று பார்த்து விட்டுத் தான் வந்தார்.


தமிழ்ப் பத்திரிகைகளில் மட்டும் தான் இது குறித்த செய்திகள் வெளிவந்தன. சிங்கள ஊடகங்களில் இரு வாரங்களுக்குப் பின்னர் தான் செய்திகள் வெளியாகின. அதுவும் உண்மைகளை வெளிக்கொணர்வதாகவோ. இவ்வளவு பெரிய அவலத்தின் முக்கியத்துவத்தை அம்பலப்படுத்தவோ இல்லை என்றே கூற வேண்டும். இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை தான். சில ஊடகங்களுக்கு அரசாங்கத் தரப்பில் இவற்றை பிரசுரிக்க வேண்டாம் என்று கூறப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வளவு பெரிய விபரீதங்கள் நடந்தும் இவை உலகுக்குத் தெரியாமல் இருந்தது பெரிய அதிர்ச்சி-யூட்டுகின்ற துரதிருஸ்டவசமான நிலமையாகும். இவை வெளிக்கொணரப்பட்டால் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டி விட்டதாகவும், சமாதானம் குறித்த கருத்தியலை ஊட்டுவதாகக் கூறி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட "வெண்தாமரை இயக்கம்", "தவலம" போன்றவற்றின் தோல்வியும், போலியும் உலகத்தின் முன் அம்பலப்பட்டுவிடும் என்ற காரணத்தாலேயே அரசாங்கத்தால் திட்டமிட்டு இவை மூடி மறைக்கப்பட்டன.

இத்தனை நாட்களாகியும் இவ்வளவு அநியாயங்களையும் புரிந்த எவருக்கெதிராகவும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக தமிழ் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இத்தனையும் திட்டமிட்டு நடந்திருக்கின்றன என்பதை நன்றாக அறிய முடிகிறது. சகல இடங்களிலும் வாகனங்கள் பல ஒழுங்கு செய்யப்பட்டு அதே வாகனங்களே எல்லா இடங்களுக்கும் சென்றுள்ளன. பாவிக்கப்பட்ட ஆயுதங்கள் எல்லாமே தயாரிக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன். (பெற்றோல் குண்டு போன்றவை). எல்லா இடத்திலும் சொத்துக்கள் அத்தனையையும் அழிப்பதில் தான் அக்கறை காட்டியுள்ளனர். கொலை புரியவோ, கொள்ளையடிப்பதிலோ அவ்வளவாக அக்கறை காட்டப்படவில்லை. (பின்னர் வந்த சூழ உள்ள சனங்களால் தான் கொள்ளைகள் நிகழ்ந்துள்ளன). இவ்வளவையும் நிச்சயமாக அரசியல் பலமில்லாத ஒருவரால் செய்ய முடியாது. பொலிஸாரையும் பார்த்து நிற்க வைத்துக் கொண்டு, இவ்வளவு சனங்களையும், நிறைய பணச் செலவு செய்து, இவ்வளவு ஆட்களையும் ஆயுதங்களையும் திரட்டி வந்து செய்யக் கூடியவராக இருப்பவராயிருந்தால் நிச்சயம் இவ்வளவையும் அதிகாரத்திலில்லாத ஒருவரால் செய்ய முடியாது என்பதை யாரும் ஊகிக்க முடியும்.

இதனை விசாரிக்க இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாததன் மர்மம் தான் என்ன? அதற்கு இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி போன்ற அமைப்புகளும் துணை நிற்பதன் பின்னணி என்ன?

சரி, எல்லாவற்றையும் விடுவோம். "இனிமேல் இப்படி எதுவும் நடக்காது. இதுவே இறுதியானது. இனி உயிருக்கும், உடமைகளுக்கும் உத்தரவாதம்." என்று எவரால் ஏன் எந்த ஜனாதிபதியால் உறுதியளிக்க முடியும்?



# இரத்தினபுரி: பொலிசாரின் உதவியுடன் திட்ட

### வேவல்வத்தை பகுதியில்...

*விஸ்வநாதன் (20 வயது) இளைஞன்*



முதலில் 8ஆம் திகதி இரவு ஒன்பது மணியளவில் கொலை நடந்ததாக கேள்விப்பட்டிருந்த போதிலும் எங்களுக்கு அடுத்த நாள் காலையில் தான் உறுதியாகத் தெரிந்தது. பந்துவின் சடலத்தை பார்த்து விட்டு இந்த வழியால் வரும் சிங்களவர்கள் பலர் எமது லயன்களைப் பார்த்து தூஷணங்களால் திட்டித் திட்டிச் சென்றார்கள். "தீ வைப்போம்", "இரவு பார்த்துக் கொள்கிறோம்", "இன்று ஒருவரும் மிஞ்ச மாட்டீர்கள்", "இன்று உதைபட தயாராயிருங்கள்" என கத்திக் கொண்டே சென்றார்கள். சிறிது நேரத்துக்குப் பின்னர் தான் அசித்தவும் கொல்லப்-பட்டிருக்கிறான் என்ற சேதி வந்தது என்று கூறினார். இதன்பின் மேலும் நிலமை மோசமானது.

அதனால் தான் மத்தியானம் 12 மணிக்கெல்லாம் நாம் தேயிலை ஸ்டோருக்குச் சென்று விட்டோம். அங்கு புஞ்சி மாத்தையாவிடம் (நாணயக்கார பத்மசிறி) நாங்கள் விடயத்தை எடுத்துக் கூறியதும் அவர் எல்லோரையும் அழைத்து வரும்படி கூறி ஏறத்தாழ 900க்கும் மேற்பட்டோரை ஸ்டோருக்கு அழைத்து அங்கு புகலிடம் அளித்தார். அவரை அடிக்க அன்று எவ்வளவோ முயற்சி செய்தார்கள். இன்ன-மும் அவர் மீது பலருக்கு கோபமுண்டு. அன்று இரவு 7 மணியளவில் தாக்கத் தொடங்கிவிட்டார்கள். இங்கு இரவு நடந்தவை ஒன்றும் எங்களுக்குத் தெரியாது.

இது எங்களுக்கு புதிய ஒரு 1996 ஒக்டோபர் 10 அன்றும் இதே போன்று தான் இந்த வேவல்வத்தை லயம் மீது ஏறத்தாழ 400க்கும் மேற்பட்டோர் வந்து தாக்கினர். தமிழ்க் கடைகள் அனைத்தையும் தீயிட்டுக் கொளுத்தினர். பலரைத் தாக்கிவிட்டு, அவர்களது உடமைகளை சேதப்-படுத்தி விட்டுச் சென்றனர். ஆனாலும் இந்த அளவு மோசமாக அப்போது நாம் பாதிக்கப்படவில்லை. அந்த முறையும் இப்படித் தான் அரசாங்கம் 2000 ரூபா நட்டஈடு கொடுத்து விட்டுப் போனது. ஆனால் நட்டஈட்டால் எங்களின் எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்த முடியவில்லை.

அது போல கடந்த இரு வருடங்களுக்கு முன்னரும் நெல்சன் எனும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த கசிப்பு வியாபாரி பணம் வசூலிக்கச் சென்ற இடத்தில் சண்டித்தனம் செய்த போது தோட்ட இளைஞர்கள் தாக்கியுள்ளனர். அதில் நெல்சன் கண்ணை இழந்தார். அதனைத் தொடர்ந்து 3 லயன்கள் எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன. அப்போதும் இவ்வளவு மோசமாக நாம் பாதிப்படையவில்லை.

தற்போது கொல்லப்பட்டவரின் சகோதரர் இங்குள்ள ஒருவரைக் கொல்ல வந்த போது முந்திக்கொண்ட இங்குள்ள தமிழ் இளைஞர்கள் அவரைக் கொன்று-விட்டார்கள். அதனைத் தொடர்ந்தே எல்லோரும் திரண்டு வந்து எங்கள் குடியிருப்பை நாசமாக்கினார்கள்.

*எஸ்.உதயகுமார் (28வயது)*

இரவு 7 மணியளவில் பஸ், லொறி, வான்கள், என்பவற்றில் வந்திறங்கிய நூற்றுக்கணக்கானோர் திமுதிமுவென வந்து வேகமாக இறங்கி எமது லயன்களை நொறுக்கித் தள்ளினர். கண்ணுக்கெட்டிய வரை வாகனங்-கள் தான் தெரிந்தது. வெளியில் பார்த்தால் ஓவென சத்தங்கள் நெருங்கிக் கொண்டிருந்தன. எல்லோரது கைகளிலும் ஏதாவது ஆயுதங்கள் இருந்தன. இரும்புக் கம்பிகள், கத்திகள், கம்புகள், கோடறிகள், துவக்குகள் கூட இருந்தன. பெற்றோல் குண்டுகள் கொண்டு தான் பல வீடுகள் தாக்கப்பட்டுள்ளன. அது வெடிக்கும் சத்தத்தை தொடர்ந்-தும் கேட்க முடிந்தது. ஒரு காம்பராவுக்குள் மாத்திரம் 25 பேரளவில் போயிருப்பார்கள். அந்தளவு கூட்டம் வந்திருந்-தது. இங்குள்ள ஒரு வீடு மிச்சமில்லாமல் அழிக்கப்பட்டது.

நாம் 83இல் கூட இந்தளவு பாதிக்கப்படவில்லை. கொள்ளையடிக்கப்பட்டோம், தான், தாக்கப்பட்டோம் ஆனால் எங்களைத் தவிர அனைத்தும் அழிக்கப்பட்டது இந்தத் தடவை தான்.

பெக்டரியிலும் நாங்கள் தொடர்ந்து இருக்கவில்லை. அங்கும் மிரட்டிச் சென்றார்கள். எனவே அங்கிருப்பதும் ஆபத்தென்று பாங்கொடைக்கும் காடுகளை நோக்கியும் சென்றோம். எனது குடும்பத்தினர், மூன்று தினங்களுக்குப் பின்னர் தான் உண்ண ஆகாரமின்றி, பட்டியினியுடன் வந்து சேர்ந்தனர். இன்னமும் பலர் வந்து சேரவில்லை. எவரெவர் இருக்கின்றனர்- இல்லை என்பது கூட வந்து சேர்ந்ததன் பின் தான் தெரியும்.

*சின்னத்துரை (56வயது)*

எங்களைத் தொடர்ந்தும் இம்சித்து வருகின்றனர். பஸ்களில் போக முடிவதில்லை. தாக்கப்படுகிறோம். எங்கள் பெண் பிள்ளைகளை தொடர்ந்து இம்சிக்கின்றனர். இதனாலேயே பல சிறுமிகள் படிப்பை இடைநிறுத்தி விடுகின்றனர். பஸ்ஸில் உட்கார்ந்திருந்தால் இழுத்துவிட்டு மற்றவருக்கு இடம் கொடுக்கின்றனர். இடையிலேயே வலுக்-கட்டாயமாக இறக்கிவிட்டுச் செல்கின்றனர். எங்களை கேலி செய்கின்றனர். பஸ்காரர்களும் இதனைத் தட்டிக் கேட்ப-தில்லை. அவர்களும் கூடச் சேர்ந்து சிரித்து மகிழ்வது வழக்கமான ஒன்று. இவ்வளவையும் பொறுத்துக்கொண்டு தான் வாழ்க்கை நடத்தி வருகிறோம். ஒரு போதும் இதனை எதிர்த்தது கிடையாது. எதிர்க்கவும் முடியாது. எதிர்த்து விட்டு நாங்கள் நிம்மதியாக இருந்து விடவும் முடியாது. அப்படிப்பட்ட எங்களுக்குத் தான் இன்று...

இனிமேலும் எங்களுக்கு இதே கதி தொடரத்தான் போகிறது. அரசாங்கம் பாதுகாப்புக் கொடுத்தாலும் அது எந்தளவு, எத்தனை தூரம் தாக்குப் பிடிக்கும் என்பது தெரியாது.

நான்கு பெண்கள் இருந்த வீடொன்றில் ஒரு பெண்ணை பாலியல் வல்லுறவு புரிந்து கடும் வதைக்குள்ளாகினார். அவர் பின்னர் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இறந்து போனார்.

முன்கூட்டியே பலர் தப்பிப் போய் விட்டதால் பல உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

*கே.பாலகிருஷ்ணன்* (சிங்களப் பெண்ணை மணமுடித்திருக்கும்- தமிழில் பேசவராத ஒரு பெட்டிக் கடை வைத்திருக்கும் இளைஞர்) இவரது கடை முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது.

அன்றாடம் ஒரு வேளை உணவுக்குக் கூட கஷ்டப்படும் ஒன்றுமறியாத அப்பாவித் தொழிலாளர்களின் சொத்துக்கள் தான் இப்படி அழிக்கப்பட்டுள்ளன என்பதை நாங்கள் அறிய வேண்டும்.

இங்கிருந்து தப்பி அலுப்பொல போனால் அங்குள்ளவர்கள் அடித்து விரட்டுகின்றனர். அங்கிருந்து ராசகல்ல போனால் அங்கிருந்து அடித்து விரட்டுகின்றனர். இந்தப் பக்கத்தால் போக வழியேயில்லை. அமுனுதென்ன பக்கம் தான் போகமுடியும். அங்கு போனால் அங்கும் அடித்து விரட்டுகின்றனர். முழுக்க முழுக்க சுற்றி வளைத்து சிறைப்படுத்தப்பட்ட ஒரு மூடுண்ட பிரதேசமாக இருக்கிறது. ஒரு வகையில் இது ஒரு திறந்த வெளி சிறைக்கூடம் தான்.

சம்ப தினத்தன்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தப்பிச் சென்று கொண்டிருந்த போது கையிலிருந்த குழந்தையைப் பறித்து ஆற்றில் போட்ட சம்பவமும் இங்க தானுங்க நடந்தது. பின்னர் குழந்தையைக் காப்பாற்றி விட்டார்கள்.

மூன்ற நாட்களாக வெளியில் வரவில்லை. தெருவுக்கு வந்தால் அடி விழும் என்ற பயத்தில் பட்டினியோடு இருந்தோம்.

இத்தனை வெறித்தனத்தையும் செய்து விட்டுச் சென்றவர் கூட கைது செய்யப்படவில்லை.... இங்கு ஆஸ்பத்திரியில் குழந்தை பிறந்தால் "வேவல்வத்தை புலி பிறந்து விட்டது" என்று தான் கூறுகின்றனர். வேவல்வத்தையைச் சேர்ந்தவர்களென்றாலே புலிகள் என்று தான் பார்க்கிறார்கள். பாதைகளில் எங்களை புலி... புலி என்று அழைக்கிறார்கள். இன்று பல புலிகளை தயாராக்கி விட்டுள்ளார்கள். இது தான் உண்மை.

'அவுப்பே'வில்காட்டுக்குள் ஒளிந்திருந்த பொது குளிரினால் ஒரு வயது குழந்தையொன்று இறந்து போனது அதனைப் பார்க்க நானும் சென்றிருந்தேன். 11ஆம் திகதி பஸ்ஸில் தப்பிப் போன தமிழர்களை ஜட்டியுடன் இறக்கிவிட்டனர்.

*வள்ளியம்மா பெண் தொழிலாளி (ஒரு தாயார்)*

சிங்களவர்களுக்கு பல வேலைகளையும் செய்து கொடுக்கப் போவது நாங்கள் தான். காலையில் வேலை வாங்கியவர்கள் மாலையில் எங்களைத் தாக்குகின்றனர். எங்களைத் தாக்கியவர்கள் வேறு யாரும் அல்ல எங்களை நன்றாக அறிந்தவர்களே!

இனிமேல் நாங்கள் அவர்களின் வேலைக்குப் போகக் கூடாது என்று பேசிக் கொண்டுள்ளோம்.

சம்பவம் நடக்கும் போது 12 பொலிஸார் இருந்தனர். அவர்கள் இதனைத் தடுத்து நிறுத்த ஒன்றும் செய்யவில்லை. இங்குள்ள 13 கடைகளை நெருப்பிலிட்டு விட்டார்கள். ஒன்று கூட மிச்சமில்லை. ஒவ்வொரு வீட்டிலும் நிச்சயமாக ஒரு லட்சத்துக்கும் மேல் பெறுமதியான சாமான்கள் இருந்தன. அவையனைத்தும் பல வருட கடும் உழைப்பால் சேர்க்கப்பட்டவை.

ஆண்கள் இல்லாத வீட்டில் வந்து அதிக சேட்டைகள் புரிந்துள்ளனர். முடிந்தால் அவர்களின் உஷாரை "அங்க" (வடக்கிலே) காட்டனுங்க.

*ஐயன் பெருமாள் வீரய்யா (38 வயது)*

எங்களது சகல பொருட்களையும் ஒரு இடத்தில் வைத்து நொருக்கி அதிலேயே தீமூட்டிக் கொளுத்தி-யுள்ளனர். ஒன்றும் மிச்சமில்லை. பணம் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டு விட்டன... ஆனால் இனி இந்தத் தோட்டமே வேண்டாம். பேசாமல் இந்தியாவை நோக்கிப் போய்விடலாம். ஆனால் அதற்கு இந்த அரசியல்வாதிகள் விட மாட்டார்கள். நாங்கள் இல்லாவிட்டால் இவர்களுக்கு வேலை செய்ய எவருமில்லை என்ற பிரச்சினை, எங்களின் தலைவர்களுக்கோ எங்களைக் காட்டி அரசியல் செய்யவும், சந்தா எடுக்க முடியாத பிரச்சினை. எங்களின் தலைவர்களை பாதுகாக்க நாங்கள் உதைவாங்கிக் கொண்டு இருக்க வேண்டும். அவர்கள் எங்களைக் காட்டி பாதுகாப்பாக பஜிரோக்களில் திரியட்டும். இதனை எத்தனை நாள் தொடர்ந்து பொறுத்துக் கொண்டிருப்பது. பொலிஸா, பவித்ரா, பந்துல போன்ற அரசியல் தலைவர்களின் முன்னிலையில் தான் இவை நடந்தன. பின் யாரிடம் நாங்கள் போய் தீர்வு கேட்பது. எல்லா அரசியற் தலைவர்களும் வந்தார்கள் ஆனால் எவராலாவது இனி இது நடக்காது என்ற உத்தரவாதத்தைத் தர முடியுமா?


எஸ்டேட்டில் வேலை இல்லாத சில நாட்களில், அவர்களின் தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து எடுத்து, புல் வெட்டி, அவர்கள் கூறும் அத்தனை வேலைகளையும் செய்ததன் பின்னர் அவர்களின் குண்டி கழுவாத ஒரு குறையாக நாங்கள் சகலதையும் அவர்களுக்கு செய்து விட்டு வருகிறோம். காலையில் இவ்வளவையும் செய்து விட்டு இரவு எங்களை தாக்குகிறான் என்றால் அவன் என்ன மனிதன் கூறுங்கள். அவர்கள் எங்களை என்ன செய்தாலும் நாங்கள் அதனைச்...
தைரியம் தானே.


இந்தியாவுக்குப்...
யுடன் இருக்க நேர்ந்த...
இப்படியொரு ஆபத்து...
அவர்கள் வைத்திரு...

"வெல்லவல"...
மறைந்திருந்தார்கள்...
கள் அங்கிருந்து ஓட்...
கம (நிவித்திகலவில்...
சகோதரியின் வீட்டு...
போது அங்குள்ள சிங்...
சேர்ந்தவர்கள் இங்கி...
அடித்துள்ளனர். என...
எனும் இடத்திலுள்...
முனைந்த போது அ...
அங்கிருந்து மீண்டும்...
சிறிது நிலமை தன...
கையில் பிடித்தபடி...
இரண்டு நாட்களுக்கு...

நாங்கள் மிச்ச...
பிள்ளைகளின் கல்வி...
கொள்ள முடிவதில்...
உடுத்து திரிவதை...
இவர்களை எங்களை...
பயமுமே எரிச்சலுமே...
கொள்ள வைத்திரு...
தங்களின் அடிமை...
உறுதிப்படுத்துவதற்...
வருடத்துக்கும் ஒரு மு...
கொண்டிருக்கிறோம்.

பொலிஸாரில்...
இத்தனை அநியாய...
இரவு வேளைகளில்...
மிடுகிறார்கள். பொலி...
எதுவும் நடக்கலாம்.





# ...ட வெறியாட்டம்!

— மாடாசாமி

...டிருக்கிறோம் என்கின்ற
...நாங்கள் பசி பட்டினி-
...தம் உடமைகளுக்கும்
...களை ஒரு நாய் போல
...வில்லை.
...மனைவி பிள்ளைகள்
...ங்கு வந்து அடித்தார்-
...அங்கிருந்து கொழும்பு-
...ல் இருக்கும் எங்களது
...ாகவே போய் சேர்ந்த
...வேவல்வத்தையைச்
...எனக் கூறி, கூடி வந்து
...போய் அப்புகஸ்தன்ன
...க்கு கூட்டிச் செல்ல
...ந்து விரட்டியுள்ளனர்.
...த வந்து சேர்ந்த போது
...ஆனாலும் உயிரைக்
...ந்து விட்டு இப்போது
...வீடு வந்து சேர்ந்தனர்.
...ரிப்பவையும், எமது
...வர்களால் பொறுத்துக்
...கொஞ்சம் நன்றாக
...ள்ள முடியவில்லை.
...ா என்ற சந்தேகமும்,
...வறித்தனமாக நடந்து
...கள் என்றைக்குமே
...வேண்டும் என்பதை
...வருடத்துக்கும், 5
...படி தட்டிவிடப்பட்டுக்


...ம்பிக்கை இல்லை.
...தவர்களோடு தான்
...குடித்து கும்மாள-
...ணையுடன் மேலும்

## அலுப்பொல பகுதியில்,

*விஜயா இரு குழந்தைகளின் தாய்*


வேவல்வத்தையைச் செர்ந்த மூன்று பேரை நாங்கள் வைத்திருந்ததாகக் கூறியே இதனை வந்து தாக்கினர். அழித்து விட்டுச் சென்றுவிட்டனர். இவ்வளவு காலம் வீட்டோடு இருந்த நான் தற்போது வேலைக்கு போகத் தொடங்கியிருக்கிறேன். ஒன்றும் மிச்சம் வைக்கவில்லை.

ஒரு *மாணவியும்* (இவர்கள் எதிர்த்து நின்றிருக்கிறார்கள்)



அன்று இரவு 7.30 மணியிருக்கும் 200க்கும் மேற்பட்டவர்கள் பல வாகனங்களில் வந்து சேர்ந்தார்கள். நானம் அப்பாவும் தான் இருந்தோம். வந்த வேகத்தில் தாக்கத் தொடங்கினர். அப்பாவும் தாக்கினார். என்னை எரிப்பதற்காக பெற்றோல் ஊற்றி எரிக்க முற்படுகையில் அப்பா அதனைத் தடுத்து நிறுத்தி சண்டையிட்டார். ... பஸ்ஸில் எல்லாம் சுதந்திரமாக போக முடிவதில்லை. போக முடிந்தால் நானும் பாடசாலை போய் தொடர்ந்து கற்றிருப்பேன்.

*மாணவியின் தகப்பனார்*



என்னங்க 1957இலிருந்து தொடர்ந்து அடி வாங்கிக்கொண்டிருக்கிறோம் இனி ஓட ஏலாது. எப்படிப் பொறுத்துக் கொள்வது.இரும்புக் கம்பிகள், பொல்லுகள், பெற்றோல், மண்ணெண்ணெய், எல்லாவற்றையும் கொண்டு வந்து தாக்கினர். அருகிலிருந்தவர்கள் எல்லோரும் ஓடி விட்டிருந்தனர். என்னை கம்பியால் தலையில் தாக்கினர்.

பின்னர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றேன். இத்தனை நாள் வேறெங்கும் போக முடியவில்லை. இன்று தான் பலாங்கொடைக்குப் போய் வந்தேன்.

*வீரப்பன் (34)*

முதலில் வந்து தீயிட்டுக் கொளுத்தி விட்டு போனதன் பின்னர் நாங்கள் அதனை அனைத்துக் கொண்டிருந்த போது மீண்டும் 8.30க்கு வந்து தியிட்டுக் கொளுத்தினர். அனைய, அனைய சூழ உள்ளவர்கள் வந்து திரும்பத் திரும்ப தீயிட்டனர்.

## ஏக்கஸ்லேன்

*ராமையா குமரன்* (30) (ஏக்கஸ்லேன்-மரத்தோட்டம்-இ.தொ.கா.வின் தோட்டத் தலைவரொருவர்)

இங்கு அடித்தவர்களில் பலர் வேறு யாருமல்ல இவர்களைத் தெரிந்த சிங்களவர்கள் தான். சூழ உள்ளவர்கள் தான். ஊர் முழுக்க அடிபட்டுக் கொண்டிருந்த போது நாங்கள் உடனேயே அறிவிக்க வேண்டிய இடங்களுக்கு அறிவித்துவிட்டு சில சிங்களவர்களின் அதரவுடன் தோட்டத்துக்கு காவல் நின்று பாதுகாத்துக்கொண்டோம்.

*வீரய்யா* (ஏக்கஸ்லேன் லோவர் டிவிஷன் இ.தொ.கா. தலைவர்)

எங்கள் லயன்களும் வேவல்வத்தைக்காரர்களை பாதுகாத்திருக்கிறோம் என்று தான் 9ஆத் திகதி இரவு தாக்கப்பட்டோம். இங்கிருக்கும் 77 வீடுகளில் 57 வீடுகள் முற்றாக நாசமாக்கப்பட்டு விட்டன. வேவல்வத்தைக்-காரர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடாது என்று அன்று மத்தியானமே எங்களுக்கு துரையிடமிருந்து உதத்தரவு வந்துவிட்டது. அன்று நாங்கள் தோட்டத் தலைவர்மார் கூட்டமொன்றுக்குப் போய்விட்டு வரும் வழியில் இங்கு தாக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் கேள்விபட்டோம். தூரத்திலேயே நெருப்பைக் கண்டோம். ஒரே கதறல் சத்தமும் ஓட்டமும், நெருப்புமாக ஒரே கலவரமாக இருந்தது. கண்ணில் கண்டவர்களை அடித்தனர். எல்லோரும் ஓடினர். பெண் பிள்ளைகளை உடனேயே ஒரு இடத்துக்கு அழைத்து காப்பாற்றினோம். ஆனால் கல்லால் எறிந்து காயப்படுத்தினார்கள். இங்குள்ள ஆண்கள் பலரை கத்தியால் வெட்டிக் காயப்படுத்தினார்கள்...

பஸ்களில் எங்களால் பயணம் செய்ய முடிவதில்லை. எங்களை கேலி செய்து, இருக்கையிலிருந்து இழுத்துப்போட்டு "தெமலா" என திட்டிப் பேசுவது, தூஷனத்தால் எம்து பெண் பிள்ளைகளை ஏசுவது என்பன இங்கு சகஜமான ஒன்று.

ஒரு *இளைஞரிடம்* இதனை பொறுத்துக்கொண்டு எப்படி இருந்தீர்கள் என வினவியபோது.

தொண்டமானும் கூட நீங்கள் ஏன் திருப்பித் தாக்கவில்லை என்று எங்கிளிடம் கேட்டார். திருப்பி எதையாவது செய்திருந்தால், அவர்கள் மிச்சம் வைத்துவிட்டுப் போனது எங்கள் உயிர் ஒன்றை தான், அதையும் இழக்க நேரிட்டிருக்கும்.

*கே.சண்முகராஜா* (38) அந்த டிவிஷனிலேயே பெரிய கடை வைத்திருந்தவர் தற்போது இவருக்கு எஞ்சியிருப்பது இவர் ஓடும் போது அணிந்திருந்த உள் பனியனும், சரமும் தான்.

"பணத்தையோ எனது ஆவணங்களையோ, உடுதுணிகளையோ எத....னையும் எடுக்கவில்லை. உயிர் ஒன்றை காப்பாற்றுவது தான் ஒரே நோக்கமாக இருந்தது.... பேசாம நம்ம ஊரைப் பாத்து போறது தானுங்க சரி. இனிமேல் இங்க இருக்க முடியாதுங்க...."

இந்தியாவை அவ்வளவு நம்புறீங்களா?

"வேறென்னங்க இங்க தமிழருக்கு ஏதாச்சுன்னா, அவங்க அங்க மறியல் செய்யிறாங்கல்ல... அது அந்த அக்கறையினால தானுங்களே... அந்த துடிப்பினால தானுங்களே... நாங்க யாரை நம்புறதுங்க... உசுர மட்டுமாவது காப்பாத்திக்க வேணாமுங்களா...?"

தர்மதாச. இ.ரஞ்சித், தபிராஜா (படையிலிருந்து தப்பியவர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்) ஆகிய இந்த டிவிசனைச் சேர்ந்த சிங்களவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதை பலரிடமிருந்து அறியக்கிடைத்தது.

---

## தீக்குமுக்குலான

ஒரு *இளைஞன்.*

9ஆம் திகதி இரவு 8.00 மணியிருக்கும், பல வாகனங்களில் இருந்து 400க்கும் மேற்பட்டவர்கள் வந்திறங்கி ஓடி வந்தனர். அவர்கள் சுற்றி வளைத்து வந்தனர். அவர்களைக் கண்டவுடன் ஓடினோம். இதில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இப்பிரதேசத்தைச் சூழ உள்ள சிங்களவர்களே. முதலில் பல வாகனங்களில் வந்தவர்கள் தாக்கி சின்னாபின்னப்டுத்திவிட்டுப் போனதன் பின்னர் அடுத்த அணி வந்து மிகுதியை கொள்ளையடித்துவிட்டு இருந்ததை நாசம் செய்து விட்டுப் போயுள்ளது. எல்லோரும் தப்பியோடி மலைக் காடுகளில் மறைந்திருந்திருந்து தங்களின் குடியிருப்புகள் நாசமாவதை பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றனர். இங்கு ஏறத்தாழ 40 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

*பழனியம்மாள்*

வேவல்வத்தையில் கொலை செய்த நபரை என் தம்பி லாசர் தான் அழைத்து வந்ததாக ஓரு கதையைப் பரப்பி 8.30 அளவில் இங்கு வந்து பரையும் தாக்கி லாசரைத் தேடிர். லாசரிடமே வந்து யார் லாசர் என்று கேட்டனர். லாசரை முந்திக் கொண்டு நானும், லாசர் இந்த வழியால் போனார் என்றோம். வெளியில் வந்தவுடன் லாசர் தப்பிப் போனார். பின்னர் தான் இங்கு எல்லோரும் தான் தாக்கப்பட்டோம். உண்மையில் எனது தம்பியிடம் ஒரு வான் உள்ளது. ஆனால் அவர்கள் கூறும் எந்த நபரையும் என் தம்பி கூட்டிவரவில்லை. இங்குள்ள கணக்குப்பிள்ளை தான் இந்த பகுதியில் நடந்த தாக்குதலுக்கு வழிகாட்டியுள்ளார்.

*தேவநேசம்* (27)

வான் அன்று வெளியில் எடுக்கப்படவே இல்லை. பொலிஸார் வந்து இப்போது வானையும் கொண்டு போய்விட்டனர். கணக்குப்பிள்ளை ஜெயசேன தான் இங்கு தாக்கப்பட வெண்டிய வீடுகளை குறித்துக் கொடுத்துள்ளார். முதலில் வசதியான வீடுகள் தான் தாக்கப்பட்டன. பின்னர் தான் ஏனையவையும் தாக்கப்பட்டன.

இந்த வெறியாட்டத்தில் ஈடுபட்டவர்களில் அடையாளம் காணப்பட்டவர்கள் பலரது விபரங்களடங்கிய பட்டிய-லொன்றையே சரிநிகருக்குக் கொடுத்தனர் தொழிலாளர்-கள். இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் வந்த வாகனங்களில் சிலவற்றின் வாகன இலக்கங்களையும் எம்மிடம் கொடுத்தனர். (சுபேஸ் முதலாளியின் வாகனம் 58-6157)

---

## இராசகல்ல

*யோகநாதன்* (25) (தேசிய தொழிலாளர் காங்கிரசின் தோட்டத் தலைவர்)

200க்கும் மேற்பட்டவர்கள் அன்று இரவு 8.30 மணியளவில் வந்து எல்லோரையும் தாக்கினர். எல்லாமாக 39 காம்பராக்கள் அத்தனையும் நொறுக்கப்பட்டுள்ளன.

*சந்தனமேரி* (38வயது)

துவக்குகள், வாள்கள் என்பவற்றைக் கொண்டு வந்தனர். என் கனவரைத் தாக்கினர், தலையில் வாளால், தாக்கியதில் இதோ பாருங்கள் தையல் போட்டிருக்கிறது. அன்று இரவு நாங்கள் எல்லோரும் காடுகளுக்குள் ஒடி ஒளிந்து பின்னர் இரண்டவது நாள் துரை எங்களை அழைத்து ஸ்டோரின் வைத்திருந்தார். நான்கு நாட்களின் பின்னர் தான் வெளியில் வந்தோம்.

# வேவல்வத்தை: சில பின்னணிகள்

***சம்பவம் நடந்த இடம்:***

சம்பவத்துக்கு உடனடிக் காரணமாக இருந்த இரண்டு கொலைகள் இங்கு தான் நடந்துள்ளன. கொலை செய்ததாகக் கூறப்படும் முகுந்தன் இந்த லயனைச் சேர்ந்தவர். இந்த லயனை குட்டி யாழ்ப்பாணம் எனக் கூறுவார்களாம்.

***சேதங்கள் — இழப்புகள்:***

15 லயன்கள் பாதிக்கப்பட்டுள்ளது. (ஒவ்வொரு லயன்களிலும் ஏறத்தாழ 10 தொடக்கம் 20 காம்பராக்கள்-வீடுகள்) எல்லாமே பெரும்பாலானவை தரைமட்டமாக்கப்பட்டுவிட்டன. மொத்தம் 226 லயன்களின் உடமைகள் அனைத்தும் உடைத்து நொருக்கப்பட்டு, கொளுத்தப்பட்டுள்ளன. இந்தப் பகுதியைப் பொறுத்தவரை பலர் சம்பவம் நடக்க முன்னமேயே பாதுகாப்பாக ஸ்டோரில் இருத்தப்பட்டதனால் உயிர்ச் சேதம் இல்லை. ஆனால், அவ்வாறு போய் பதுங்குவதற்கு முன்னர் அகப்பட்டுக் கொண்டவர்கள் பலர் தாக்கப்பட்டுள்ளனர். பெண்கள் மீது பாலியல் சேட்டைகள் புரியப்பட்டிருக்கின்றன. 22 தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ராஜேந்திரன் நிர்மலா எனும் 16 வயது அங்கவீனச் சிறுமி தலையிலும் மற்றும் ஐந்து இடங்களில் வாளால் வெட்டப்பட்டு இன்னமும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்து வருகிறார்.

உடுத்த உடுப்புகளைத் தவிர எதுவும் மிச்சமில்லை. ஏறத்தாழ 150 வருடங்களுக்கும் மேலாக சிறுகச், சிறுக சேமித்து பாதுகாத்த அத்தனையும் சில நிமிடங்களில் வேற்றோரால் அழிக்கப்பட்டு விட்டன. உடுதுணிகள், வீட்டுப் பொருட்கள், முக்கிய தஸ்தாவேஜுக்கள் (பிறப்பு அத்தாட்சி, வீட்டு ஆவணங்கள், பாடசாலைக் கடிதங்கள், தொழில் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்) என எல்லாமே அழிக்கப்பட்டுவிட்டன.

ஏறத்தாழ 250க்கும் மேற்பட்ட லயன் காம்பராக்கள் உள்ள இந்தத் தமிழ்க் குடியிருப்பில், ஒரேயொரு சிங்களக் கடையைத் தவிர அதனைச் சூழ்ந்துள்ள அத்தனையும் அழிக்கப்பட்டுள்ளன. சில காம்பராக்கள் தரைமட்டமாகாத நிலையில் இருக்கின்றன. அதுவும் அவற்றின் கூரைகள் இரும்பினால் அமைக்கப்பட்டிருந்ததால் அவ்வீடுகள் தரைமட்டமாகியிருக்கவில்லை.

***சம்பவத்துக்கான பின்னணிக் காரணம்:***

காரணத்தைக் கூற தயங்குகின்றனர். கூறுவதிலிருந்து தவிர்த்துக் கொள்கின்றனர். வெல்ஹேனகே பந்துசேன (38), அப்பகுதி "பிரகத்தி தொழிற்சங்க"த்தின் தலைவர். கடந்த யூன் மாதம் 17ஆம் திகதி ஸ்டோரில் ஏற்பட்ட தகராறில் பந்துசேனவால் தொழிலாளர்கள் சிலர் தாக்கப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து தோட்ட அதிகாரியால் திட்டப்-பட்டுள்ளார். அதிலிருந்து பந்துசேன தொழிலுக்குச் செல்வதில்லை. அவர் முன்னர் சிறிய அளவில் செய்து வந்த கசிப்பு வியாபாரத்தைத் தொடர்ந்தும் சுதந்திரமாகச் செய்து வந்துள்ளார். அவரது அடாவடித்தனங்கள் கசிப்பு வாடிக்கை யாளர்-களிடம் மாத்திரமன்றி, வாடிக்கையாளர்களிடம் பணம் வசூலிக்கச் செல்லும் போது அவர்களின் வீட்டில் உள்ள பெண்களின் மீதும் காட்டப்படுவது வழக்கம். சம்பவ தினத்தன்றும் பழைய கோபத்தில் முகுந்தன் என்று அழைக்கப்படுபவரை தேடிச் சென்ற இடத்தில் பந்துசேனவும், அவரது சகாவான அசித்தகுமாரவும் (வயது24) முகுந்தனின் வீட்டிலுள்ள பெண்களை பலாத்காரம் புரிய முற்பட்டதன் விளைவாகத் தான் 8ஆம் திகதி இரவு அவர்கள் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர். கொலை நடந்த தினத்துக்கு முன்னைய தினம் தொடக்கம் பந்துசேனவுக்கும் கொலை புரிந்த இளைஞருக்கும் இடையில் சண்டை நடந்துள்ளது. சில தொழிலாளர்கள் தெரிவித்த கருத்தின்படி பந்துசேன, முகுந்தனைக் கொல்லத் தான் போனான். ஆனால் அவனை முந்திக் கொண்டு விட்டனர் என்கின்றனர். இந்தக் கொலையில் ஈடுபட்டதாகக் கூறப்படுபவர்களில் இருவர் திலிப்குமார், கருணாநிதி ஆகியோர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். நீலமேகம் உட்பட இன்னும் சிலர் இன்னமும் தலைமறைவாகியுள்ளனர்.

***சிங்களப் பிரதேசங்கள் சூழ***

சிங்களப்பிரதேசங்கள் சூழ உள்ள தோட்டம் இது. சூழ உள்ள பிரதேசங்களில் சிங்களவர்கள் பலர் இங்கு குடியேறி அருகிலுள்ள காணிகளை ஆக்கிரமித்து அதில் தோட்டம் செய்து வருகின்றனர். இவர்களது தேயிலைத் தோட்டங்க-ளுக்கு இந்த தமிழ்த் தொழிலாளர்களே பணிக்கமர்த்தப்படுகின்றனர். தோட்டத் தொழிலாளர்களும் இவர்களிடம் நாட் கூலிக்கு (கிட்டத்தட்ட நாளைக்கு 75 ரூபா தொடக்கம் 100 வரையான கூலி) வேலை செய்கின்றனர். வேல்வத்தை தமிழ் மகா வித்தியாலத்துக்கே இங்குள்ள மாணவர்கள் கல்வி கற்கச் செல்கின்றனர். இந்தப் பாடசாலை உட்பட ஏறத்தாழ 15 பாடசாலைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்ப் பிரதேசங்களுக்கிடையில் எந்தவிதத் தொடர்பும் இல்லை. இரத்தினபுரி பகுதியில் பல தோட்டக் குடியிருப்புகள் தள்ளித் தள்ளியே உள்ளன. ஏறத்தாழ 10, 15 கிலோ மீற்றர் தொலைவிலேயே அடுத்தடுத்த தோட்டங்கள் உள்ளன. எனவே இவற்றுக்கிடையில் நிலத்தொடர்ச்சியோ அல்லது வலைப்பின்னலோ இல்லை.

இவ்வாறு சிங்களமய சூழலில் வாழும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் சிங்கள மயமாகி இருப்பதற்கான வாய்ப்புகள் இருந்த போதும் அவ்வாறு நடக்கவில்லை. தமிழ் பாடசாலைகள் அப்படியே இயங்கி வருகின்றன. தமிழ்க் கோயில்கள் அப்படியே இயங்குகின்றன. அவர்கள் பண்பாட்டளவில் அவ்வாறான மாற்றத்துக்குள்ளாகவில்லை. கலப்புகளும் நிகழ்ந்தில்லை. அதற்கான முக்கிய காரணம் அவர்களை அவர்களாக இருத்தி வைப்பதிலேயே கூடிய கவனம் செலுத்தப்பட்டு வந்திருப்பதே. இதனை மீறி கலப்பு ஏதேனும் நிகழ்ந்தால் அதன் விளைவு இன்னொரு கலவரமாக இருக்குமோ என்கின்ற அச்சத்தை இனங்காணக் கூடியதாக இருந்தது.

***கொலை செய்யப்பட்டவர் — பின்னணி***

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு பிரகத்தி தொழிற்சங்கத்தின் தலைவர். அப்பகுதியின் சண்டியர். தனது சகாக்களுடன் அப்பகுதி பெண்களின் மீது பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டு வருபவர். அரசாங்கத்தின் அமைச்சரவை-யிலுள்ள அம்மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சரின் முக்கிய ஆதரவாளர். இரத்தினபுரி பிரதேச சபைத் தலைவர் பந்துல கரவிட்டவின் வலது கரம். (இந்த பந்துல கரவிட்ட 1994 பொதுத் தேர்தலுக்கு முன்னர் தோட்டத்துக்கு அனுப்பப்படும் நீர் தாங்கிக்குள் விஷம் கலந்தவரென எல்லோராலும் பேசப்படுபவர். அந்த விஷம் கலந்த நீரை அருந்தியிருந்தால் அன்று பெரிய ஒரு விபரீதம் ஏற்பட்டிருக்கும். ஆனால் உடனே கண்டுபிடிக்கப்பட்டு அந் நீர் சுத்தப்படுத்தப்பட்ட கதை அங்கு சகலரும் அறிந்த விடயம்) இச் செல்வாக்கினைப் பயன்படுத்தி தடையின்றி கசிப்பு வியாபாரத்தை நடத்தி வருபவர்.

***கொலைஞர் — முகுந்தன்***

அப்பகுதியில் எந்தச் சண்டையென்றாலும் அதனை அடக்கச் செல்பவர். அப்பகுதி தமிழ் வீடுகளில் சண்டைகள் நடநதால் தீர்க்கச் செல்பவர். வெளியிலிருந்து சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களால் இழைக்கப்படும் சண்டித்-தனங்களை முறியடிப்பவர். வன்முறைக்குத் தயங்காதவர்.

பாலினம் மற்றும் தேச வழமைச் சட்டம் பற்றி ...

# பெண்களுக்கான வறுமை எதிர்ப்புக் கொள்கைகள்!?

முத்துகிருஷ்ணா சர்வானந்தன். வேல்ஸ் பல்கலைக்கழகம். இங்கிலாந்து.

*(சென்ற இதழின் தொடர்ச்சி..)*

### வறுமையின் பாலினப் பகுப்பினை போக்குவதற்கான கொள்கைகள்:

வறுமைப் பழுவில் பாலின வேற்றுமை உள்ளதால், வறுமை எதிர்ப்புக் கொள்கைகள் பாலினச் சார்புடையதாக மையமானதாக இருக்க வேண்டும். இது 'சமத்துவம்' (Equality) மற்றும் 'வினைத்திறன்' (Efficiency) ஆகிய அடிப்படைகளில் பிரேரிக்கப்படுகின்றது. (Quibria, 1993)



ஆகவே, வறியவர்களுக்குள், பெண்களுக்கு எதிரான பால் வேறுபாடு நிலவுவதற்கான கணிசமான ஆதாரம் இருப்பதால் இந்த ஒழுங்கீனத்தை நிவர்த்தி செய்வதற்கு வறுமை எதிர்ப்புக் கொள்கைகள் பெண்கள் மீது இலக்கு வைக்க வேண்டும்.

சமூக, பொருளா தார, கலாசார மற்றும் தகவல் போன்ற மேலும் கூடிய இடையூறுகளுக்கு பெண்கள் முகம் கொடுக்கவேண்டி யுள்ளதால், பாலின - நடுநிலைக் கொள்கைகள் பெண்களுக்கு கணிசமா ன அளவு நன்மை செய்வதில்லை (Quibria, 1993). இதிலிருந்து, பாலினம் சார்ந்த வறுமை எதிர்ப்புக் கொள்கைக ள், 'சமத்துவம்' எனும் தார்மீக மற்றும் சமூக இலட்சியத்திற்கமைய பெண்கள் மீது சலுகை காட்டக் கூடியனவாக உபாயம் செய்யப்பட வேண்டும்.

பாலின வேற்றுமையானது சமூக அளவுகோல்களாகிய சுகாதாரம், கல்வி, போஷாக்கு போன்றவற்றில் நிலவுகிறது என்று கண்டோம். அதே வேளை, பெண்கள் மீதான சமூக முதலீட்டின் சமூக பலன்வீதம் (Social rate of return), ஆண்களின் மீதான முதலீட்டின் சமூக பலன் வீதத்தை விட கூடியதாக இருக்கின்றது என வாதிடப்படுகிறது. உதாரணத்திற்கு, பெண்களின் போஷாக்கு தராதரத்தினை உயர்த்துவதால், தாயின் சுகாதாரத்தினை (உடல் நலத்தினை) மேம்படுத்துவது மட்டுமல்லாமல் சேயின் சுகாதாரத்தினையும் மேம்படுத்தலாம். மேலும், பெண்களின் சுகாதார வசதிகள் மற்றும் கல்வி ஆற்றலை விருத்தி செய்வதால், அவர்களின் வாழ்க்கை தராதரத்தினை விருத்தி செய்வது மட்டுமன்றி பிறப்புவீதக் குறைப்பிற்கும், மற்றும் பொதுவாக குடும்பத்தின் சுகாதாரம், சுத்தம், ஆரோக்கியம் ஆகியனவற்றிற்கும் அது திடமான பங்களிப்பு செய்யும். இதிலிருந்து, பெண்கள் மீதான சமூக முதலீடு ஒரு பெருக்கும் விளைவை (Multiplier Effect) கொண்டிருக்கும். குடும்பத்தின் இந்த மொத்த முன்னேற்றங்கள், காலப்போக்கில் சமூகத் துறையில் பொது முதலீட்டை குறைக்கச் செய்யும் (Quibria, 1993 & 1995; Agarwal 1994 a). ஆகவே, பெண்கள் மீது இலக்கு கொண்ட சமூக முதலீட்டினை 'வினைத்திறன்' அடிப்படையிலும் மேற்கொள்ள வேண்டும் என வாதிடப்படுகிறது.

இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், பாலின மையமான வறுமை எதிர்ப்புக் கொள்கைகள், சமூக நியாயம் மட்டுமன்றி பொருளாதார நியாயமும் கொண்டுள்ளவை என்பதாகும். வறுமையின் பாலின வேற்றுமைக்கு காரணம், பொருளாதார மற்றும் சமூக கலாசார காரணிகள் மற்றும் பெருமளவு குடிமனைக்குள் நிலவும் செல்வப் பகிர்ந்தளிப்பில் உள்ள பாரபட்சம் என்பனவாகும் என பல நடைமுறைக் கற்கைகள் அம்பலப்படுத்தியுள்ளன. பொருளியல் காரணிகளைக் கொண்ட பாலின பாரபட்சத்தினை பொது நடவடிக்கை (Public Action) சரிப்படுத்தினாலும், விஷேடமாக குடும்பத்திற்குள் நிலவும் சமூக - கலாசார காரணிகளை திருத்துவதில் இது மிக சிறிதளவே பங்களிக்கக் கூடியதாக இருக்கும் (Quibria, 1995, P 382). இதிலிருந்து, வறுமையின் பாலினப் பகுப்பிற்கு உதவும் சமூக - கலாசார காரணிகளை மேம்படுத்தும் பொது நட்வடிக்கைகளுக்கு உறுதுணையாக சமூக நடவடிக்கைகள் (Community Action) மேற்கொள்ளப்பட வேண்டும்.

வழக்கமாக, பெண்களுக்கு ஊதிய வேலை கிடைப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துவதே பால் சமத்துவத்திற்கான அதிமுக்கிய நடவடிக்கையாகும் என வாதாடப்பட்டு வந்தது. பல அபிவிருத்தியடைந்து வரும் ஆசிய நாடுகள் பெண்களுக்கு ஊதிய வேலை வழங்குவதில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ள பொழுதிலும், பால் சமமின்மை பிடிவாதமாக நிலைத்து நிற்கின்றது. இதற்கான பெரும் காரணி எதுவெனில், தற்பொழுது பெண்களுக்கு ஊதிய வேலை பெறுவதற்கு கூடிய வாய்ப்பு கிடைக்கப்பெறினும், அவர்கள் ஊதிய பாரபட்சத்தினால் குறைந்த வேதனம் பெறுபவர்களாகவும், அவர்கள் தாழ்வான இலிகித (Clerical) மற்றும் கீழ்த்தர உத்தியோகங்களில் செறிந்து காணப்படுபவர்களாகவும், மேலும் பெண்கள் மேன்மையாக பங்களிக்கும் தொழில்களின் சுகாதார, பாதுகாப்பு நிலைமைகள் தராதரம் குன்றியதாகவும் இருப்பதே ஆகும். இவை Cho (1994) இனால் கொரியாவில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இது உயர்பொருளாதார வளர்ச்சி வீதத்தினையும், மொத்த வருமான பகிர்ந்தளிப்பில் நியாயமான சமத்துவத்தினையும் இணைத்து அனுபவிக்கும் ஒரு நாடாகும். உதாரணத்திற்கு, கொரியாவில் பெண்களினது சராசரி வேலை நேரம் ஆண்களினதையும் விட அதிகமானது. மற்றும் பெண்களின் சராசரி ஊதியம், ஆண்களின் சராசரி ஊதியத்தின் அரைப்பங்கு ஆகும். (Ibid, P102)

*இலங்கை உட்பட பல ஆசிய நாடுகளில் வறுமை மற்றும் சமத்துவமின்மை (வருமான ஏற்றத்தாழ்வு) - தொடர்பாக, பால்ரீதியாக தயாரிக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் அவ்வளவாக இல்லை. ஆகவே, வெற்றிகர வறுமைஒழிப்பு உபாயங்களைஆக்க மற்றும் அமுலாக்க பாலின பரிமாணத்தினை பிரதிபலிக்கக்கூடிய வறுமை மற்றும் சமத்துவமின்மையை (வருமான ஏற்றத்தாழ்வை) பிடிக்கக்கூடிய ஒரு பூரண ஆராய்வு முன் - தேவை ஆகும்.*

'ஊதிய வேலை ஊடான பாலின சமத்துவம்' கொள்கையின் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றியினால், பால் சமத்துவத்தினை அடைவதற்கும், மற்றும் வறுமையின் பால் பகுப்பைப் போக்குவதற்கும் உற்பத்திப் பொருட்கள் (விஷேடமாக நிலம்) மீதான பெண்களின் சொத்துரிமையும், அதிகாரமும் இன்றியமையாததாகும் என தற்பொழுது வாதாடப்படுகிறது.

தென் ஆசியாவில், சமூகத்தில் நிலவும் பாலின பாகுபாட்டிற்கும், நிலம் மீதுள்ள சொத்துரிமைக்கும், அதிகாரத்திற்கும் உள்ள தொடர்பினை ஒரு தரைபுரட்டும் கற்கையில் எடுத்துக் காட்டி, பொருளாதார, சமூக, மற்றும் கலாசாரத் துறைகளில் நிலவும் பால் சமமின்மைக்கான அதிதீர்மான காரணி சொத்துரிமையில் உள்ள பாலின பாகுபாடே (ஆண்கள் சார்பான) ஆகும் என Agarwal, (1994) வாதாடுகிறார் (P 1458). இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் மேற்கொண்ட பரவலான செயல் ஆராய்ச்சி (Field Research) மூலம் இந்த முடிவு எய்தப்படுகிறது (Agarwal, 1994 b).

ஆகவே, பெண்களுக்கு நிலம் மீது சுதந்திரமான சொத்துரிமையும், அதிகாரமும் தேவையென்பதனை (அ) 'நலம்' (Welfare), (ஆ) 'வினைத்திறன்' (Efficiency), மற்றும் (இ) 'சமத்துவமும், அதிகாரம் வழங்களும், (Equity and Empowerment) ஆகிய கொள்கைகளின் பிரகாரம் வாதாடப்படுகிறது (Agarwal, 1994 a).

#### *(அ) நலவாதம்* (Welfare argument)

பெண்களின் நிலம்மீதான சுதந்திரமான சொத்து ரிமையும், அதிகார மும் குடிமனைக்குள் செல்வப் பகிர்ந்தளிப்பில் நிலவும் பால் சமமின்மை யை நிவர்த்தி செய்ய உதவுதோடு மற்றும் இதிலிருந்து மொத்த நலனையும் அதிகரிக்கும். வறிய கிராமத்து குடிமனைகளின் பெண்கள் தமது அதிகாரத்திற்கு உட்பட்ட செல்வத்தை அதிகமாக குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளுக்கே செலவிடுகின்றனர் என்பதனை எடுத்துக் காட்டக் கூடிய நடைமுறை சான்றுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அப்படி இருக்கையில் ஆண்கள் புகையிலை, மதுபானம் போன்ற தனிப்பட்ட நுகர்வுப் பொருள்களிலேயே அதிகமாக செலவிடுகின்றனர். குழந்தைகளின் போஷாக்கு தராதரம் தகப்பனினதைவிட தாயின் உழைப் புடனேயே பெருமளவுக்கு தொடர்பு பட்டுள்ளது எனவும் கண்டுபிடிக்க ப்பட்டுள்ளது (Ibid, P 1461). கிராமத்து பிலிப்பைன்சில் தாயின் வருமானம் ஆனது தனக்கும் தனது குழந்தைகளுக்கும் ஒப்பீட்டு (Relative) கலோரி ஒதுக்கீட் டில் நன்மையான விளைவை உண்டு பண்ணியுள்ளது என Senaueretal (1988) ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, பெண்களுக்கு சுதந்திர நில உரிமை வழங்குதல் சார்பான வாதம் 'நலன்' அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

#### *(ஆ) வினைத்திறன் வாதம்* (Efficiency Argument)

பெண்களுக்கு சுதந்திர நில சொத்துரிமை வழங்கினால், (1) நில அளவு சிறிதாதல் - இது வினைத்திறன் அற்றது (2) நிலம் துண்டாடப்படல் அதிகரிக்கும் - இது உற்பத்தித் திறனை பாதிக்கக்கூடியது போன்றவை நடைபெறும் என வாதிக்கப்படலாம். ஆயினும், இருக்கும் சான்றுகள் சிறிய அளவு நிலங்கள் அவசியமாக குறைந்த உற்பத்தியளவை விளைவிக்கும் என பிரேரிக்கவில்லை (ஜப்பான் ஒரு உதாரணம்), மற்றும் நிலத் துண்டாடல் ஆண், பெண் ஆகிய இருபாலாரினதும் உரிமையாட்சியின் கீழ் இடம்பெறலாம் (Agarwal, 1994 a, P 1463). ஆகவே, பெண்களுக்கு சுதந்திர நிலவுரிமை 'வினைத்திறன்' அடிப்படையில் கேட்கப்படுகிறது.

#### *(இ) சமத்துவம் மற்றும் அதிகாரமூட்டல் வாதம்* (Equity and Empowerment Argument)

பெண்களுக்கு சுதந்திர நிலவுரிமை வழஙகுவதன் மூலம் அவர்கள் சமஸ்தானத்தில் நிற்கும் அதிகாரத்தை வழங்க முடியும். குடிமனைக்குள்ளும், பரந்த சமூகத்திலும் நிலவும் ஆண் ஆதிக்கத்தையும், மேலாதிக்க வெறியையும் கேள்விக்குள்ளாக்க உதவும். (Ibid, P 1464). இது பொருளியலடிப்படை சார்ந்தவாதம் என்பதை விட சமூக மற்றும் சமூகவிழுமியங்கள் சார்ந்த வாதமாகவே விளங்குகின்றது எனலாம்.

துரதிருஷ்டவசமாக, இலங்கை உட்பட பல ஆசிய நாடுகளில் வறுமை மற்றும் சமத்துவமின்மை (வருமான ஏற்றத்தாழ்வு) - தொடர்பாக, பால்ரீதியாக தயாரிக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் அவ்வளவாக இல்லை. ஆகவே, வெற்றிகர வறுமை ஒழிப்பு உபாயங்களை ஆக்க மற்றும் அமுலாக்க பாலின பரிமாணத்தினை பிரதிபலிக்கக்கூடிய வறுமை மற்றும் சமத்துவமின்மையை (வருமான ஏற்றத்தாழ்வை) பிடிக்கக்கூடிய ஒரு பூரண ஆராய்வு முன் - தேவை ஆகும்.

மற்றைய எல்லா இலக்கு குழுமையமான (Target Group - Oriented) வறுமை எதிர்ப்பு உபாயங்களையும் விட பால் மையமான வறுமை எதிர்ப்பு உபாயங்கள் தான் வறுமை போக்குதலுக்கான அதியுயர்ந்த தாக்கத்தினைக்கொண்டிருக்கும். ஏனெனில், எல்லா நாடுகளிலும், பெண்கள் மொத்த சனத்தொகையில் ஐம்பது வீதத்தினை சுற்றிவர இடம்பெறுகின்றனர். மேலும், இதே காரணத்திற்காக, ஒரு நாட்டிற்குள் நிலவும் வருமான ஏற்றத்தாழ்வினைக் குறைப்பதற்கான அதிமுக்கிய உபாயம் குடிமனைக்குள்ளும், பரந்த சமூகத்திலும் வருமான பகிர்ந்தளிப்பில் நிலவும் பாலின சமமின்மையை சரிப்படுத்தலே ஆகும்.

(அடுத்த இதழில் முடியும்)

# யாழ்.நூலக எரிப்பும், எனது தாயாரின் மரணமும் பேனாவின் ஊற்றை வற்ற வைத்து விட்டன!

-அ.செ.முருகானந்தம்



*இலங்கையின் சஞ்சிகை வரலாற்றில் 'மறுமலர்ச்சி' சஞ்சிகைக்கு ஒரு முக்கியமான பங்கிருக்கிறது. அந்த மறுமலர்ச்சி சஞ்சிகையின் மூலவர்களுள் ஒருவரான எழுத்தாளர் அ.செ.முருகானந்தம் அவர்களை தற்போது அவர் தங்கியிருக்கும் வயோதிகர் பராமரிப்பு இல்லத்தில் சந்தித்து உரையாடியதிலிருந்து முக்கியமான பகுதிகளை இங்கு தருகிறோம்.*

*ஆ-ர்*

***உங்கள் ஆரம்பகால இலக்கிய ஈடுபாடு பற்றி கொஞ்சம் கூறுங்கள்?***

மகாஜனக் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்திலேயே நான் இலக்கியத்தில் ஈடுபாடு கொள்ள ஆரம்பித்தேன். அ.ந. கந்தசாமி, மகாகவி, கதிரேசன்பிள்ளை மாஸ்ரர் ஆகியோர் எனது இலக்கிய நண்பர்களாக விளங்கினர். சோ. சிவபாதசுந்தரம் நிர்வாக ஆசிரியராகவும் நா. பொன்னையா பிரதம ஆசிரியராகவும் இருந்த காலப்பகுதியில் எழுத்துலகில் புதியவர்களை ஊக்குவிக்கும் முகமாக இளைஞர்களுக்காக இரண்டு பக்கங்களை ஒதுக்கியிருந்தார்கள். ஈழகேசரி இளைஞர் சங்கம் ஒன்றையும் ஆரம்பித்திருந்தது. அதில் நான் சேர்ந்திருந்தேன். இவ்விளைஞர் சங்கத்தூடாக இலக்கிய மாநாடுகளும் நடத்தப்பட்டன. வெளியேயிருந்து எழுத ஆரம்பித்த நான் ஈழகேசரியில் 1941ல் உதவியாசிரியராக இணைந்து கொண்டேன். இதேவேளை நானும், வரதர், அ.ந.கந்தசாமி ஆகியோரும் ஒன்று சேர்ந்து ஒரு சங்கத்தை ஆரம்பித்திருந்தோம். அதன் பெயர் மறுமலர்ச்சிச் சங்கம். மறுமலர்ச்சிச் சங்கத்தினுடைய இதழாக 'மறுமலர்ச்சி' சஞ்சிகை வெளிவந்தது. ஆரம்பத்தில் அதில் என்னுடன் வரதர், அ.ந. கந்தசாமி ஆகியோர் சேர்ந்து பணியாற்றினர். பின்னர் பஞ்சாட்சரசர்மா அதில் இணைந்து கொண்டார். சு.வேயும் எங்களுடனிருந்தார். இன்று யாழ்ப்பாணத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் எழுத்தாளர்களில் பெரும்பாலானோர் அன்று அதில் எழுதினார்கள்.

***பத்திரிகையில் சமகாலத்து நிகழ்வுகள் பற்றிய அலசல்கள் பலவற்றை நீங்கள்***



***எழுதியி ருப்பீர்கள். அவற்றிற்குப் புறம்பாக சிறுகதை, நாவல் போன்ற படைப்பிலக்கி யத்துறையிலும் நீங்கள் ஈடுபாடு காட்டி வந்திருக்கிறீர்கள். ஏறத்தாழ எத்தனை சிறுகதைகள் எழுதியிருப்பீர்கள்?***

ஈழநாடு பத்திரிகையில் சேர்ந்தபின் ஏராளமான சிறுகதைகள் எழுதியிருக்கிறேன். அவற்றை என்னால் கணக்கிட முடியாது.

***நாவல்கள்?***

புகையில் தெரிந்த முகம், யாத்திரிகன் இதுவும் ஈழநாட்டில் தொடர்ந்து வந்தது. ''ஜெயந்தி'' இது முற்றுப்பெறாத ஒரு குறுநாவல். என்றாலும் கூட, அதனை அந்தளவிலேயே முழுமையாகக் கொள்ள முடியும். அதற்கான பண்பை அக் குறுநாவல் கொண்டிருந்தது. இவற்றைத் தவிர, பத்திரிகைக்குத் தேவையான போது எல்லாம் ஏராளமான விடயங்களை எழுதியுள்ளேன். தொடர்ந்து ஒரே எழுத்துத் தான்.

***உங்களுக்கு கவிதையில் நாட்டம் இருக்கவில்லையா?***

இல்லை. எனக்கு அதில் அதிகளவு ஈடுபாடு இருந்ததில்லை. ஈழநாட்டிற்கு வரும் கவிதைகளை பிரசுரிப்பதோடு எனது பணி முடிவடைந்து விடும். க.இ.சரவணமுத்து, பஞ்சாட்சரசர்மா ஆகியோர் அப்போது கவிதைகளை எழுதி வந்தனர்.

***யாழ்ப்பாணத்தில் வெளியான பத்திரிகைகளில் தான் பெரும்பாலான உங்களது எழுத்துக்கள் வெளிவந்திருக்கின்றனவா?***

ஓம். ஈழகேசரி, ஈழநாடு, மறுமலர்ச்சி ஆகியவற்றிலேயே எனது படைப்புகள் வெளிவந்தன. வீரகேசரியிலும், சுதந்திரனிலும் நான் பணியாற்றியிருக்கிறேன். சுதந்திரனில் 1949 - 50ல் சிவநாயகம் அவர்கள் ஆசிரியராக இருந்தபோது பணியாற்றியிருக்கிறேன். அ.ந.கந்தசாமி தாளையடி சபாரத்தினம், சில்லையூர் செல்வராஜன், கே.கணேஷ், கி.பாக்கியநாதன் ஆகியோர் அப்போது சுதந்திரனில் எழுதி வந்தனர். வானொலிக்காகவும் நிறைய எழுதியிருக்கிறேன். நாவற்குழியூர் நடராசன், சிவபாதசுந்தரம் போன்ற இலக்கிய நண்பர்கள் தான் அங்கும் இருந்தார்கள். இது தவிர முற்போக்கு எழுத்தாளர்களான கணேஸ், இராமநாதன் போன்றோரோடும் எனக்கு நல்ல தொடர்பிருந்தது. அவர்கள் வெளியிட்ட 'பாரதி' என்ற சஞ்சிகையிலும் நான் எழுதியிருக்கிறேன்.

***தமிழகத்து எழுத்தாளர்களுடனான உங்கள் தொடர்பு எவ்வாறிருந்தது?***

பெரிதாகத் தொடர்பிருக்கவில்லை. நாங்கள் எங்களுக்கென்றொரு பத்திரிகையைத் தொடங்கி எழுதி வந்ததால் அந்தத் தொடர்பு பற்றி அக்கறை காட்டவில்லை.

***இன்று வளர்ந்து வந்துள்ள தமிழ் தேசியம் என்ற அம்சம் உங்கள் எழுத்துக்களில் ஊடுபாவாக இருந்துள்ளதா?***

அப்படிக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. நான் அதில் ஈடுபாடு காட்டவில்லை. பெருமளவில் மிதவாதியாகவே இருந்தேன். சுதந்திரனில் கூட வேலை பார்த்திருக்கிறேன். ஆனால் அதன் அரசியலில் ஈடுபாடு கொள்ளவில்லை. சாதாரண தமிழ் எழுத்தாளனுக்குரிய தமிழுணர்வு தான் இருந்தது.

***மறுமலர்ச்சி எழுத்தாளரான நீங்கள் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினுடைய அரசியற் சார்புத் தன்மையை எப்படிப் பார்த்தீர்கள்?***

ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் அவர்களுக்கு ஒரு அரசியல் இருந்தது. அந்தக் கட்சிக்காக உழைத்தார்கள். அவர்களுடைய எழுத்து, வாழ்வெல்லாம் கட்சிக்காகவே இருந்தது. நாங்கள் சுதந்திரனில் சேவையாற்றியும் கூட அந்தளவுக்குப் போகவில்லை. சமஷ்டிக் கட்சிக்காக வேலை செய்யவில்லை.

***அதை ஒரு கட்சி விசுவாசமாகப் பார்க்கிறீர்களா?***

அவர்கள் மொஸ்கோ சார்பானவர்களாக இருந்தார்கள். ரஷ்யாவில் பழைய எழுத்தாளர்களைப் பின்பற்றித் தான் ரஷ்ஷிய இலக்கியம் வளர்ந்தது. அந்த ரஷ்ஷிய எழுத்தாளர்களைப் பின்பற்றித் தான் முற்போக்கு எழுத்தாளர்கள் எழுதினார்கள். எனக்குக் கூட தல்ஸ்தோயை நன்றாகப் பிடிக்கும்.

***யாழ். இலக்கிய வட்டத்துடன் எந்தளவிலான தொடர்பு இருந்தது?***

கனகசெந்திநாதனுடன் நல்ல தொடர்பு இருந்தது. அவர்களது கூட்டங்களில் எல்லாம் போய்ப் பேசியிருக்கிறேன்.

***'மறுமலர்ச்சி' இதழின் இணையாசிரியர் பதவியிலிருந்தும், நீங்கள் இடை நடுவிலேயே நீங்கிக் கொண்டதாகத் தெரிகிறது. ஏதும் பிரச்சினை காரணமாகவா?***

இல்லையில்லை. சுகவீனம் காரணமாக, எனது தாய்மாமனார் அழைத்ததன் பேரில் திருகோணமலை சென்று தங்க நேரிட்டது. அதனால் தொடர்ந்து பணிபுரிய முடியவில்லை. எனினும், மறுமலர்ச்சிக்காக எனது விடயதானம் தொடர்ந்தது. அதன் சந்தா சேகரிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டேன். எனவே அதனுடன் தொடர்பு விட்டுப் போகவில்லை.

***திருகோணமலையிலிருந்தும் நீங்கள் பத்திரிகை ஒன்றைக் கொண்டு வந்தாக அறிகிறோம்?***

ஓமோம். சும்மாவிருக்க சோம்பலாகவும் பொழுது போக்கில்லாமலும் இருந்தது. எனக்குள்ளிருக்கும் பத்திரிகையாளனும் என்னை அரித்துக் கொண்டேயிருந்தான். எனவே 'எரிமலை' என்னும் பத்திரிகையை , தாழையடி சபாரத்தினத்தை இணையாசிரியராகக் கொண்டு ஆரம்பித்தேன். திருகோணமலையை மையமாகக் கொண்டு முதலில் வெளிவந்த பத்திரிகை இதுவாகத்தானிருக்கும் என்பது என் எண்ணம்.

***'எரிமலை' எப்போது ஆரம்பிக்கப்பட்டது?***

'மறுமலர்ச்சி'யை விட்டு வந்து நான் திருகோணமலையில் தங்கியிருந்த காலம் தான். அநேகமாக 1947ம் ஆண்டாயிருக்கலாம். (உண்மையில் 'மறுமலர்ச்சி கதைகள்' என்ற தலைப்பில் அண்மையில் வெளிவந்த நூலின் முன்னுரையின்படி 1948ம் ஆண்டு தை மாதம் வெளிவந்த 'மறுமலர்ச்சி'யின் 18வது இதழிலிருந்து ச. பஞ்சாட்சரசர்மா அ.செ.முவுக்குப் பதிலாக இணையாசிரியராகப் பொறுப்பேற்றிருந்தார் என்ற குறிப்பிலிருந்து அ.செ. மு. மறுமலர்ச்சி இதழ் 17வது இதழின் வரையிலும் பணியாற்றியிருக்கிறார். எனவே 'எரிமலை' வெளிவரத் தொடங்கிய காலம் 1948ம் ஆண்டின் முற்பகுதியாக இருக்கலாம்)

***'எரிமலை' எத்தனை இதழ்கள் வரையில் வெளிவந்தது? வாசகர் மத்தியில் அதனுடைய தாக்கம் எவ்வாறிருந்தது?***

அதிகமில்லை. ஒரு ஐந்து அல்லது ஆறு இதழ்கள் மட்டுந்தான் வெளிவந்திருக்கும். மாதத்திற்கு இரண்டாக. போதிய ஆதரவிருந்தும், திருகோணமலையில் அதற்கு நல்ல வரவேற்பும் ஒத்துழைப்புமிருந்ததும், நிதிப்பற்றாக் குறைதான் அது நின்று போகக் காரணமாயிற்று. சிறந்த அச்சகம் ஏதும் இல்லாததால் அச்சு நேர்த்தியும் இல்லை. வாசகர்களின் மத்தியில் அதன் தாக்கம் பற்றி குறிப்பிட அதிகம் இல்லை. தொடர்ந்து வெளிவந்திருந்தால் அவ்வாறான தாக்கம் ஏதும் ஏற்பட்டிருக்கலாம்.

***நீங்கள் படைப்பாளி என்ற வகையில் ஏராளமான சிறுகதைகளையும், குறிப்பிடத்தக்க குறுநாவல்களையும் நெடுங்கதைகளையும் எழுதியிருக்கிறீர்கள். இதில் நீங்கள் எதில் உங்களை அதிகம் அடையாளம் காணப்பட வேண்டும் என விரும்புவீர்கள்.***

இரண்டிலுந்தான்.

***பத்திரிகைத்துறையில் நீங்கள் பல்வேறு பத்திரிகைகளில் பணிபுரிந்திருக்கிறீர்கள். இதில் எந்தப் பத்திரிகையில் பணியாற்றியதை சிறப்பான காலமாக கருதுகிறீர்கள்.***

'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றிய காலத்தைத் தான். 1963லிருந்து 4 வருடங்கள் அதன் ஆசிரிய பீடத்தில் பணியாற்றியுள்ளேன். அதன் பிறகு தொடர்ச்சியாக 15 வருடங்கள் 'ஈழநாடு' பத்திரிகைக்கு தொடர்ந்து விடயதானியாக இருந்து வந்துள்ளேன். பிரசுரத்துக்கான சிறுகதைகளின் தரம் கண்டு தேர்வு செய்பவனாகவும் இருந்துள்ளேன். 'யாத்ரீகன்', 'ஜீவபூமி', 'ஜயந்தி' என்னும் தொடர் நாவல்களை எழுதியுள்ளேன். அதிலே 'ஜயந்தி' சிங்கள நாட்டின் வாழ்புலத்தைப் பின்னணியாகக் கொண்டது. 1977இனக் கலவரத்தை மையமாகவும் கொண்டது. 'ஜயந்தி' என்பது அதில் வரும் சிங்களப் பெண் பாத்திரத்தின் பெயர் என்பது குறிப்பிடத்தக்கது.

***உங்களுடைய எழுத்துப்பணியை எப்போது கைவிட்டீர்கள்?***

1981ல் ஈழநாடு எரிக்கப்பட்டதுடன் எழுத்துப் பணியைக் கைவிட்டேன். அதன் பிறகு இலக்கிய உறவுகளெல்லாம் விடுபட்டுப் போய்விட்டன. அத்தோடு 85ல் எனது தாயாரும் காலமாகிவிட்டார் அதற்குப்பிறகு எனது பேனா ஊற்றெடுக்கவில்லை.



நேர்காணல் : வில்ஜார்

# தெருக்கீதம்

தாளையடி சபாரத்தினம்

அப்பொழுது நான் ஒரு பாடசாலை மாணவன். பட்டினத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அண்ணன் வீட்டிலிருந்து கொண்டு பாடசாலைக்குத் தினமும் போய் வந்தேன்.

கிறிஸ்மஸ் விடுமுறைக்காகப் பாடசாலைகளெல்லாம் மூடப்பட்டன. சொந்த ஊருக்குச் சென்றுகொண்டிருந்தேன். புகைவண்டி புகையைக் கக்கிக்கொண்டு நெளிந்து நெளிந்து சென்று கொண்டிருந்தது. எல்லோரும் கண்களை மூடுவதும் விழிப்பதுமாக இருந்தார்கள்.

அச்சம்பவம் இன்று நடந்ததுபோல் இன்னும் என் உள்ளத்தில் அப்படியே இருக்கிறது. கையில் தம்பூராவுடன், கிழிந்த - அழுக்குப் படிந்த உடையணிந்து கொண்டு பாட்டுப்பாட ஆரம்பித்தாள் அவள். அழுக்குப் படிந்த ஆடைக்குள்ளிருந்து யௌவனத்தின் பூரிப்புக் குமுறிக் கொண்டிருந்தது. சுமார் பதினேழு வயசிருக்கும். உற்று நோக்கிய என் கண்களுக்கு அவள் சரஸ்வதி தேவியாக மாறிவிட்டாள். ஒவ்வொரு சதத்திற்குமேல் பரிசு அளிக்க ஒரு மகனாவது முற்படவில்லை. ஆம், ஒவ்வொருவரும் பரிசு என்று தான் அளித்தார்கள். அந்த ஒரு சதப் பரிசை ஏழையின் துடித்த குடல் திருப்தியோடு அங்கீகரித்தது.

எனக்கு அருகில் உட்கார்ந்திருந்த ஒருவரிடம் தன் கரங்களை நீட்டினாள். ஒரு சதத்தை கையில் தயாராக எடுத்து வைத்திருந்த அவர், ஒரு இராகமாலிகை பாடு. தருகிறேன் என்றார்.

இராகமாலிகையா? அது எனக்குத் தெரியாதே என்றாள் அந்தப் பேதைப் பெண்.

இவ்வளவு நன்றாகப் பாடுகிறாயே; இராகமாலிகை தெரியாதா? சரி. ஒரு விருத்தம்பாடு

அவள் வாயைத் திறந்தாள். சுருண்டு சுருண்டு இருந்த அவளுடைய கூந்தல் நெற்றியில் புரண்டு விளையாடுவதுபோல அவளுடைய தொண்டையிலிருந்து உருண்டு உருண்டு வரும் தேவகானம் நாக்கில் துள்ளி விளையாடியது. ஆனால், தான்பாடுவது என்ன இராகம் என்பது அவளுக்கே தெரியாமல் இருந்திருக்கலாம். எல்லோரிடமும் ஒரு வித அமைதி குடிகொண்டது.

அவள் அடுத்த பெட்டிக்குப் போய்விட்டாள். சற்றுநேரம் கழித்து விதம்விதமான இராகங்களில் பாட்டுக்கள் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தன. ஆனால், என்னுள்ளத்தில் எளியவர்கள் வயிறார உண்ண வேண்டும் என்று அவள் பாடிய பாட்டுத் தான் திரும்பத் திரும்ப ஒலித்தது.

*

கிறிஸ்மஸ் விடுமுறை கழிந்துபோக மறுபடியும் பட்டினம் வந்து சேர்ந்தேன். படிப்பிலோ, விளையாட்டுக்களிலோ என் மனம் செல்லவில்லை. அந்த ரெயில் சம்பவம் சதா என் உள்ளத்தைவிட்டு நீங்காமலே இருந்தது.

பஸ் ஸ்ராண்டில் பஸ்சுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். சிறிது தூரத்திற்கப்பால் ஒரே கூட்டமாக இருந்தது கூட்டத்தை நாடி இன்னும் சனங்கள் ஓடிக்கொண்டு இருந்தார்கள். நானும் அவ்விடத்தை நோக்கி விரைந்து சென்றேன். இரண்டு பொலிஸ்காரர்கள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு நின்றார்கள். மெதுவாக உள்ளே எட்டி நோக்கினேன். குற்றுயிராக இரத்த வெள்ளத்தில் புரண்டு கொண்டிருந்த ஓர் நடுத்தர வயதுள்ள பெண்ணைப் பார்க்கப் பெரிய பரிதாபகரமாயிருந்தது. விஷயத்தை ஆராய்ந்த போது ஓர் ராணுவ லொறி அந்தப் பிச்சைக்காரியை அடித்துவிட்டது என்று தெரிய வந்தது.

தயாராக வந்து நின்ற ஒரு அம்புலன்ஸில் அந்தப் பிச்சைக்காரியை ஏற்றினார்கள். அம்மா என்று அலறிக்கொண்டு கூட்டத்திற்குள்ளால் ஒரு பெண் ஓடிவந்தாள். அவளுடைய கரங்களைப் பற்றி இழுத்து அப்புறப்படுத்தினான் ஒரு பொலிஸ். அம்புலன்ஸ் புறப்பட்டு விட்டது.

ஐயோ. அம்மா! அம்மா!.... என்று தொண்டை கிழியக் கத்திக் கொண்டே நிலத்தில் விழுந்தாள் அந்தப் பேதை. அவளுடைய கையிலிருந்த தம்பூரா தரையினொரு மூலையிலிருந்து என்னைப் பரிதாபத்தோடு பார்த்தது. அன்று அவளுடைய இனிய சாரீரத்தோடு ரீங்காரம் செய்த தம்பூரா அல்லவா அது?

என்னுள்ளம் துடிதுடித்தது. தரையில் அறிவின்றிக் கிடந்த பெண்ணைத் தூக்கி நிமிர்த்தினேன். அவளுடைய கண்கள் மூடியிருந்தன. கூட்டத்தில் இருந்த யாவரும் போய்விட்டார்கள். ஆனால், வேடிக்கை பார்க்கச் சில சிறுவர்கள் மட்டும் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒரு சிறுவன் நான் கொடுத்த காசைப் பெற்றுக்கொண்டு ஒரு பேணியில் கோப்பி கொண்டுவந்து கொடுத்தான். சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்த அந்தப் பெண் மறுபடியும் அம்மா, அம்மா என்று அலற ஆரம்பித்தாள்.

பிச்சைக்காரியாயிருந்தாலென்ன, சீமாட்டியாயிருந்தாலென்ன? பெற்றவள் தாய்தானே. அம்மாவை எங்கே கொண்டு போய்விட்டார்கள்? என்று தழுதழுத்த குரலில் கேட்டாள்.

பயப்படாதே, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கிறார்கள்!



ஐயா, உங்களுக்கு பெரிய புண்ணியமாக இருக்கும்; என்னையும் அந்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விடுகிறீர்களா? அம்மாவோடு நான் பக்கத்திலிருந்து...

சரி, வா! என்று அவளை அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனேன். ஆனால்....

அவள் அம்மா வைப் பார்க்க முடியவில்லை!



பார்க்க முடியாத உலகத்துக்கு அந்த அம்மா போய்விட்டாள்!

பாவம். இந்த ஏழைப்பெண்ணுக்குத் தேறுதல் கூறுவது பெரும்பாடாய் விட்டது! இது என்ன விந்தை! இந்தப் பிச்சைக்காரியோடு ஏன் என்னுடைய பொழுதை வீணாக்கிறேன்? ஜீவகாருண்யமா? இவளுடைய கோகில கானமா அல்லது அழகு ததும்பும் யௌவனமா...? சே..சே!

பெண்ணே, வீணே அழுதுகொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. இந்தா, இந்த ஐந்து ரூபாவை வைத்துக்கொள்; நான் போகிறேன்.

ஐயோ, நான் எங்கே போவேன்.? என்ன செய்வேன்? தன்னந் தனியாக இந்தத் தெருக்களில் அலையைப் பயமாக இருக்கிறதே! அம்மா இருந்தால்..

அவள் மறுபடியும் விம்ம ஆரம்பித்தாள்.

அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இதேதடா வீண் தொல்லையை விலைக்கு வாங்கி விட்டோமே! என்று ஒரு நினைப்பு. ஆனால், அவளுக்கு உதவி செய்வதில், அவளோடு பேசிக்கொண்டிருப்பதில் ஒரு இன்பம்.

அழாதே! தெருக்களில் இத்தனை நாளாய் அலைந்தவள் தானே, இப்போது என்ன பயம்...? அர்த்தமில்லாமல் பேசிக்கொண்டு வந்தவன். அவளுடைய முகபாவத்தைக் கண்டு நிறுத்திக் கொண்டேன். ஆம். அவள் பயப்படத்தான் வேண்டும்! அவள் வயது அழகு.... அவள் பயப்படத்தான் வேண்டும் ஆனால், நான் இவளுக்கு என்ன உதவி செய்ய முடியும்?

இவளைக் கல்யாணம் செய்து கொண்டால்....

இந்த எண்ணத்தில் ஒரு சிறு இனிப்பு. ஆனால் என் உதடுகள் லேசாக, கேலியாக மலர்ந்து இந்த எண்ணத்தின் நிலைமையை நிறைவேறாத நிலைமையை தெரிவித்தன. அதேடு அந்த எண்ணமும் காற்றில் கரைந்து விட்டது.

திடீரென்று ஒரு யோசனை!

எனது தமையனார்வீட்டில்நீவேலைசெய்வாயா?

அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வை மூலம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள்.

*

மாசங்கள் நான்கு மறைந்தன. பரீட்சைக்காகப் படித்துக்கொண்டு இருந்தேன். அன்று ஆசிரியர் கொடுத்த குறிப்பில் முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்த எனக்கு நேரம் போனதே தெரியவில்லை. எதிரே இருந்த கடிகாரத்தில் மணி ஒன்று அடித்தது. அறையினின்றும் வெளியே வந்தேன். சாப்பாட்டு மேசைக்கருகில் - அவள் நின்று கொண்டிருந்தாள்.

நீ இன்னுந்தூங்கவில்லையா?

நீங்களின்னும் சாப்பிடவில்லையே?

என்னுடைய சாப்பாடு இங்கே தானே மேசைமேல் இருக்கிறதே...! நீயுமின்னும் சாப்பிடவில்லையா?

பதில் சொல்லாமலே அவள் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள். அவளுடைய மார்பு ஒரு முறை விம்மித் தாழ்ந்தது. பாவம், என்மீது எவ்வளவு அன்பை வைத்திருக்கிறாள்!

இன்பத்தில் இருப்பவர்கட்கு இன்பத்தையும், துன்பத்திலிருப்பவர்கட்குத் துன்பத்தையும் மூட்டும் சந்திரன். அன்று எனக்கு என்னத்தை ஊட்டினானோ? அவசர அவசரமாக சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுக்கையில் படுத்துக் கொண்ட என் உள்ளத்தில் ஜன்னலூடாக வந்த சந்திரன் இறுமாப்புடன் ஆட்சி செலுத்த ஆரம்பித்தான். சிறிது நேரத்தில் உள்ளத்திலும், உருவத்திலும் முற்றாக மாறிவிட்டேன். வெறி பிடித்த நாயைப் போல் வெளிக்கிளம்பி என் கால்கள் தானாகவே அவள் தூங்கிக் கொண்டிருந்த அறையின் கதவருகில் போய் நின்றன. ஆனால் என் உள்ளம்...?

மூடனே! நீதானா சத்தியவாதி? உன் லட்சியம்தான் என்ன? காம வெறி கொண்ட மனித மிருகங்களிடமிருந்து என்னைக் காப்பாற்று என்று உன்னைச் சரண் புகுந்தாளே. அவளுக்கு நீ செய்யும் உதவி இது தானா? என்று இடித்து இடித்துக் கூறியது.

என் இருதயம் அமைதியை நாடியது. தனிமையில் தானே அமைதி? வீட்டின் பின்புறமுள்ள அடர்ந்த மாமரத்தின் கீழ் உட்கார்ந்தேன். ஜிலு ஜிலு என்று குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. சந்திரன் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தான். சந்திரனைப் பற்றிய செயல்களெல்லாம் கவிகளின் வெறும் கற்பனாசக்தி என்று எண்ணியிருந்த என்னுள்ளத்தில் அவன் திருவிளையாடல்கள் எல்லாம் எந்த மட்டில் உண்மை என்பது அன்றுதான் புலனாயிற்று. எனக்கும் என் உள்ளத்துக்குமிடையில் நீண்டநேரம் விவாதம் நடந்து கொண்டிருந்தது.

கிணற்றுக் கட்டில் ஓர் உருவம் உட்கார்ந்து கொண்டிருந்ததைக் கண்டு, அது யாரென்றறிய அவ்விடம் நோக்கிச் சென்றேன்.

என்ன,நீயா?

கொலைக் குற்றவாளியைப் போல் அவள் நடுநடுங்கினாள்.

இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்றேன் மறுபடியும்.

தண்ணீர் எடுத்துக் கொண்டு போக வந்தேன்.

இந்த நடுச்சாமத்திலா? அதுவும் குடமில்லாமலா?

அவள் பதிலொன்றும் பேசாமல் நின்றாள். அவள் நெற்றியில் துளிர்த்த வியர்வை நிலவில் மினுங்கியது.

பெண்ணே, நீ... இப்பொழுது பேசும்பொழுது என் குரலில் ஓசையில் கீறல்விழுந்தது. என்னுடைய நிலைமையை அவள் நன்றாக உணர்ந்து கொண்டு தான் இருக்க வேண்டும். நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். அவள் கண்களில் நிரம்பியிருந்த கண்ணீர் கன்னங்களில் வழிந்து கொண்டிருந்தது.

இந்த நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை.

சரி; நான்போகிறேன். என்று கூறிவிட்டுத் திரும்பி நடந்தேன்.

ஸ்வாமி! என்று கத்தினாள் அவள்.

திடுக்கிட்டுத் திரும்பி நின்றேன்.

அவள் ஓடிவந்து என் கால்களைப் பிடித்துக் கொண்டு ஸ்வாமி இன்னமும் என் மனதைத் தெரிந்து கொள்ளவில்லையா? என்று கூறிக் கொண்டே, தனது கண்ணீரால் எனது பாதங்களைக் கழுவினாள்.

நான் அவள் தோள்களைப் பிடித்துத் தூக்கினேன். வாடிய மலர்க்கொடிபோல என்முன் துவண்டு துவண்டு நின்றாள். இருவர் முகங்களும் ஒன்றையொன்று நோக்கின. வாய்ப்பேச்சில் என்ன பயன்? எங்கள் உள்ளம் ஒன்று கலந்தது போல்...

அவளை என்னோடு அணைத்துக் கொண்டேன்.

மறுநாள் விடிய விழிக்கும் போது ஒன்பது →

மணியிருக்கும். படுக்கையைவிட்டு வெளியே செல்ல என மனம் ஒப்பவில்லை. நான் எவ்விதம் அவளின் முகத்தில் விழிக்க முடியும்? படுக்கையிலிருந்தபடியே சிந்தனைக் கடலில் ஆழந்தேன்.

என்ன, உனக்கின்னுந் தூக்கமா? அவளைத் தேடிச் சென்ற அப்பா இன்னும் வரவில்லையே என்று அம்மா கலங்கிக் கொண்டு இருக்கிறாள். நீயின்னும் கொட்டாவி விட்டுக் கொண்டு இருக்கிறாயோ! என்று என் அண்ணனின் மகள் கூறியதைக் கேட்டவுடன் இடியேறு கேட்ட சர்ப்பம்போல் அப்படியே சமைந்து விட்டேன். நான் செய்தது துரோகம் என்பது எனக்கு அப்பொழுது நினைவிற்கு வந்தது. அவள் எங்கே போயிருப்பாள்?



கால்கள் தள்ளாட வெளியில் வந்தேன். எங்கும் ஒரே சூன்யமாய் என் கண்களுக்குத் தெரிந்தது. காமக் கண்களால் நோக்கும் மனித மிருகங் களிடமிருந்து அவளைக் காப்பாற்றி விட்டாயா? என்று யாரோ ஏளனமாகக் கூறி நகைப்பது போல என் உள்ளத்தில் பட்டது.

இவள் ஏன் சொல்லாமல் ஓடவேண்டும்? என்று என் அண்ணர் கேட்டார்.

எனக்கு எப்படித் தெரியும் என்று கூறினேன். வாயால் மட்டுந்தான் கூறினேன். ஆனால், என் உள்ளம்...? சகிக்க முடியாத- மன்னிக்க முடியாத ஒரு குற்றம் என் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருப்பதை அவர்களால் எப்படி அறிய முடியும்?

*

காலச் சக்கரத்தின் வேகத்தில் என் உள்ளத்திலிருந்த அந்த ஏழைப் பெண் சிறிது சிறிதாக அழிந்து கொண்டிருந்தாள். ஆனால், ஆசிரிய கலாசாலையில் படிக்கும்போது எனக்கும், வசந்தாவுக்கும் இடையில் காதல் உற்பத்தியான பின் முற்றாக அப்பெண் அழிந்துவிட்டாள் என்று தான் கூறவேண்டும். சில சமயங்களில் சந்தர்ப்பத்தையொட்டி அவளுடைய நினைவு வந்தாலும் அது வெகுதூரம் நிலைத்திருப்பதில்லை.

இந்த விடுமுறைக்கு ஊருக்குப் போகமுன் கட்டாயம் எங்களுடைய வீட்டுக்கு வந்துவிட்டுத் தான் போகவேண்டும் என்றாள் வசந்தா.

வசந்தா! என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கை இல்லையா? அண்ணனும், மனைவியும் கூடவரும் போது நான் எப்படி உன்னிடம் வர முடியும்? எனக்கு மட்டும் உன்னோடு ஒரு நாளை ஆனந்தமாய்க் கழிப்பது இஷ்டமில்லையா?

எங்களுடைய வழியில் இந்த அண்ணனும், தம்பியும் எங்கிருந்து தான் முளைக்கிறார்களோ? என்று கூறி அவள் அலுத்துக் கொண்டாள். பிறகு,

அடுத்த மாசம் இருபத்தோராந் திகதி! இந்தச் சனியன் எத்தனை நாட்களைக் கவ்விக் கொண்டிருக்கிறது. இந்த விடுமுறையே இல்லாவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றாள்.

அப்படிக் கூறமுடியுமா வசந்தா? எத்தனை பேர் இந்த விடுமுறையை ஆனந்தமாய் கழிக்க ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாளை பொழுது புலர்ந்தால் அவர்கள் உள்ளங்கள் புகையிரதத்திலும் பார்க்க வேகமாக ஓடிக் கொண்டிருக்குமே! இன்று எங்கள் விடுதி அமர்க்களப்படுவதை பார்த்தாயா? அதோ வண்டியும் வந்து விட்டது!

ஏன் நீ இன்றைக்கே புறப்படுகிறாயா?

ஆம். நான் இன்றைக்கே போய்விட்டால் நீங்கள் நாளை வரும்போது வரவேற்க வசதியாகயிருக்குமென்று நினைத்து அதிபரிடம் நான் இன்றைக்கே போகவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஆனால், நாம் நினைத்தபடி எதுவும் நடக்கிறதா?

உண்மையில் வசந்தாவைப் பிரிவதென்றால் என்னவோ போலத்தான் இருந்தது. அவள் கண்கள் கலங்குவதைப் பார்க்கும் போது என் கண்களிலிருந்து குமுறிக்கொண்டு வரும் கண்ணீரை எப்படி என்னால் அடக்க முடியும். வாரத்திற்கு இரண்டு கடிதங்களாவது போடு என்று என் துக்கத்தை அடக்கிக் கொண்டு கூறினேன்.

சரி என்று தலையசைத்தாள் அவள். பேச முடியாமல் அவள் குரல் கம்மிவிட்டது. பிரிவுபசாரம் கூறி அவள் கையைப் பற்றினேன். நாணத்தின் மெல்லிய ரேகை அவள் நெற்றியில் படர்ந்தது. ஸ்படிகம் போன்ற கன்னங்கள் நாணத்தால் சிவந்தன. அவளுடைய ரோஜா இதழ் போன்ற உதடுகள் என்னிடமிருந்து எதையோ பெறத் துடித்தன...

பின்பு, கலகலவென்ற சத்தத்தோடு ஓடிக்கொண்டிருந்த வண்டிக்குள்ளிருந்து கண்ணீர் நிறைந்த இரு கண்கள் என்னை நோக்கிக் கொண்டிருந்தன.

பாடசாலை தொடங்க இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே ஊரிலிருந்து புறப்பட்டேன். வசந்தாவின் வீட்டை அடையும்போது மாலை சுமார் நாலு மணியிருக்கும். முன் அறிவித்தல் இல்லாமல் வந்துவிட்டீர்களே! என்று அன்பு ததும்பக் கூறிக்கொண்டு என்னை வரவேற்றாள் வசந்தா.

நான் வருவதை முன்கூட்டியே உனக்குத் தெரிவித்தால் நீ என்ன செய்வாய்?

செய்வதென்ன? நீங்கள் வந்தால் உள்ளேயே வரக்கூடாது என்று கூறி ஒரு காவற்காரனை வாசலிலேயே நிற்கவிட்டிருப்பேன்.

நல்லவேளையாக உனக்கு அந்தச் சிரமங் கொடுக்காமல் விட்டேனே. அதுபோதும்

எந்தச்சிரமம்

காவற்காரனை நியமிக்கும் சிரமந்தான்!

கலகல வென்று சிரித்துக் கொண்டு உள்ளே ஓடிய அவள், பிறகு நிமிஷத்திற்கு ஒருதரம் உள்ளே போவதும், வெளியே வருவதுமாக இருந்தாள். நான் வெளியே போடப்பட்டிருந்த ஓர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

என்னை மன்னிக்க வேண்டும். உங்களை வெகுநேரம் தனிமையில் இருக்க விட்டுவிட்டேன்

பரவாயில்லை; இப்பொழுதாவது நீ உன் வேலைகளை முடித்து வந்தாயே!

என் வேலைகள் இன்னும் முடியவில்லையே! எழுந்திருங்கள்; உங்கள் உடைகளை மாற்றவேண்டாமா? என்று கூறிக்கொண்டு எனக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட ஓர் அறைக்கு என்னை அழைத்துச் சென்றாள்.

சுமார் அரை மணிநேரம் கழித்து வசந்தா வரும் காலடி சத்தத்தைக்கேட்டு நித்திரைபோற் பாசாங்கு செய்தேன். கலீன் என்ற சத்தத்தைக் கேட்டு கண்ணை விழித்தபோது பரக்கப்பரக்க விழித்துக் கொண்டு கைகால்கள் வெடவெட என நடுங்க அவள் நின்று கொண்டிருந்தாள். நிலத்தில் நூறு துண்டுகளாக வெடித்துப் போய்க் கிடந்த தேநீர் கோப்பை என் உள்ளத்திற்கு ஓர் உதாரணமாகக் கிடந்தது. துக்கமும் பயமும் அவள் முகத்தில் மாறி மாறிக் காட்சியளித்தன. என்னையே சற்று நேரம் உற்று நோக்கிய வண்ணம் நின்ற அவள் அவசர அவசரமாக உடைந்த துண்டுகளைப் பொறுக்க ஆரம்பித்தாள். சத்தத்தைக் கேட்டு உள்ளே நுழைந்த வசந்தா, கீழே போட்டு உடைத்து விட்டு அழுகிறாயா? கழுதை முகத்தைப் பார்! என்று வசைமாரி பொழிய ஆரம்பித்தாள்; அப்பொழுது சுமார் மூன்று வயசுக் குழந்தையொன்று தடுத் தடுமாறி உள்ளே நுழைந்து தன் குஞ்சுக்கரங்களால் அவளின் சேலையைப் பிடித்துக்கொண்டு ஏம்மா அழுறா என்று கொஞ்சும் பாவனையில் கேட்டது.

விக்கி விக்கிப் பலத்து அழுதுகொண்டு வாஞ்சையோடு குழந்தையைக் கட்டி மார்போடு அணைத்துக் கொண்டாள் அவள்.

என் வாழ்க்கையின் இன்பம் அஸ்தமித்து விட்டது. கொலைகாரனைப்போல் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

எழுந்திருங்கள்! சாப்பாடெல்லாம் தயாராகி விட்டது என்று கூறிக்கொண்டு மறுபடியும் உள்ளே நுழைந்தாள் வசந்தா.

நான் தலையை நிமிர்த்தினேன். வெளிறிப் போயிருந்த என் முகத்தில் இரு கண்கள் கண்ணீரில் மிதப்பதைக்கண்டவுடன் என்னஅது என்று ஏக்கம் நிறைந்த தொனியிற் கேட்டாள் வசந்தா.

வசந்தா. இந்தப் பாவியை மறந்து விடு. நான் கொலைகாரன்; காமத்திற்கடிமைப்பட்ட பதிதன். மற்றவர்கள் துன்பத்தில் இன்பமனுவிக்கும் கசடன். பெண்மையின் தெய்வீகத்தன்மை அறியாத மூர்க்கன் - துரோகி; என்னை மன்னித்துவிடு வசந்தா

எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! அதற்குள் உங்களுக்கு என்ன நடந்ததுவிட்டது

வசந்தா நீ என்னை உண்மையாய் காதலிக்கிறாயா?

இது என்ன கேள்வி

நீ என்னைக் காதலிப்பது உண்மையானால் உண்மையான ஓர் இன்பத்தை நாடிச்செல்லும் உன் காதலின் உள்ளத்திற்கு ஒரு வழிகாட்டுவது உன் கடமையல்லவா?

இது என்ன விளையாட்டு. ஐயோ! இந்த இருதயம் மென்மையானது. அதில் சுமக்க முடியாத பாரத்தைச் சுமத்தி என்னைக் கொல்ல வேண்டாம். என் நெஞ்சைத் தொட்டுப்பாருங்கள். இந்தப் பேதையின் உள்ளங்கொதிப்பது உங்களுக்கு விளங்கும். அரை மணித்தியாலத்திற்குள் உங்களுக்கு என்ன பிடித்து விட்டதென்று தெரியவில்லையே! உங்கள் காலில் விழுகிறேன்; நடந்தது என்னவென்று கூறமாட்டீர்களா?

வசந்தா, நான் உன்னிடம் கூறாமல் ஒழிப்பதற்கு என்ன இருக்கிறது? நான் மகாபாவியென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். என்னையே கதியென நம்பி வந்த - என் அன்பிற்கு அடிமைப்பட்ட, பரிசுத்தமான மகாலட்சுமி போன்ற ஒரு ஏழைப் பெண்ணை என் காமக் கருவியாகப் பாவித்தேன். அவள் தியாக குணம் பெண்களுக்கே உரியது என்பதை நிரூபித்து விட்டாள். ஆனால்....

கூறி முடிப்பதற்குள் ஐயோ! ஐயோ! அம்மா! அம்மா! என்று யாரோ அவலக்குரலில் அலறுவதைக் கேட்டு இருவரும் வெளியே ஓடினோம்.

என்ன நடந்தது என்று படபடப்புடன் கேட்டாள் வசந்தா.

மேல்மாடியில்இருந்து தவறி...

என் முன் தெரியும் பொருட்களெல்லாம் சுழல்வதுபோல இருந்தது. ஐயோ என்றலறிக் கொண்டு இறக்குந் தறுவாயிலிருக்கும் அவளின் தலையைத் தூக்கி என் மடிமீது வைத்தேன். என் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகியது. என் கண்ணே. உன் பெருமையை உணராது உன் வாழ்க்கையைக் கெடுத்து அதற்கு முற்றுப்புள்ளியிட்ட இந்தப் பாவிக்குப் பாடங் கற்பித்து விட்டாயே! அழிய வேண்டியவன் நான் இருக்க, உன் பொன்னான உயிரை ஏன் மாய்த்துக் கொண்டாய். என் செல்வமே? உன் அருமைக் குழந்தையை யார் கையில் ஒப்படைத்து விட்டுச் செல்கிறாய்?

ஸ்வாமி, என் வாழ்வில் நான் என்றும் அடையாத இன்பத்தை இன்றுதான் அடைகிறேன். என் உயிர்க்குயிரான அன்புக் காதலரின் மடியில் உயிர்விட நான் எத்தனை ஜென்மங்களில் புண்ணியஞ் செய்தேனோ? என் உயிர் சாந்தி அடைவதற்கு உங்கள் வாயிலிருந்து வந்த என் கண்ணே என்ற அந்த ஒரு சொல்லே போதுமே! என் பிரபு. குழந்தையைப் பற்றிய கவலை எனக்கு எதற்கு..? உங்கள் குழந்தையைப் பாதுகாக்கும்படி நான் உங்களிடம் கேட்க வேண்டுமா? என்று அலறிக் கொண்டு அருகில் ஒன்றும் விளங்காமல் மிரள மிரள விழித்துக்கொண்டு நின்ற குழந்தையின் கரங்களைப் பிடித்து என்னிடம் ஒப்படைத்தாள்.


என் செல்வமே. இனி இதுதான் உனது அம்மா. இந்த ஏழை அம்மாவை மறந்துவிடு என்று கூறி வசந்தாவின் கரங்களை அன்போடு வருடினாள்.

எங்கேம்மா போறாய்! என்று கேட்டுக்கொண்டு வரண்ட முகத்தோடு நின்ற குழந்தையின் மெல்லிய கைகளைப் பிடித்துத் தனது மார்போடு அழுத்தினாள் அவள். பிறகு.....

அவளுடைய ஆத்மா. நிம்மதியான ஓர் உலகத்தை நாடிச் சென்றுகொண்டிருந்தது.

0

நன்றி: மறுமலர்ச்சி கதைகள்



சுக்குநூறாகின வெல்லாம்!
வெறுமைக்குள் வந்து குந்திக்கொண்டது
மிக மிக நோவு தருகிற கவலை.

முகம் கூட எனதல்லாது
வெடித்துத் துகள் துகள்களாகிப்போன
கண்ணாடியில் தெரிகிற விம்பங்களாய் ஆனது.
கூவிக் கொண்டு அடித்துச் சாய்க்கிற
புயலாய்
எல்லோரும் என்னில் மாறி மாறி இன்பம் கண்டனர்.
பூமியெங்கும் சிதறிக் கிடந்தேன்
பொறுக்கிச் சேர்ப்பாரற்ற
கைக்குக் குத்துகிற கூர்த்துகள்களாய்.

நானல்லாது போகிற நாட்களிளெல்லாம்
நேர்கிறது இக் கொடுமை.

17121996

இப்ரான்

*ஒலிபரப்பாளராக, வானொலிக் கலைஞராக, தொலைக்காட்சி நாடக இயக்குநராக மற்றும் இலங்கை ரூபவாஹினியின் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவின் படைப்பாளராக பல துறைகளிலும் பணியாற்றிய பி. விக்னேஸ்வரன் அவர்களின் ''வாழ்ந்து பார்க்கலாம்'' எனும் வானொலி நாடக நூல் செப்டெம்பர் மாதம் கனடாவில் வெளியிடப்பட்டது. நூலில் பி.விக்னேஸ்வரன் அவர்கள் 'வானொலி நாடகங்களும் நானும்' எனும் தலைப்பில் எழுதியுள்ள முன்னுரையொன்றின் சில பகுதிகளை இங்கு தருகிறோம்.*

*ஆ-ர்*



எனது இளமைப் பருவத்தில் அவ்வளவாக வானொலி நாடகங்கள் கேட்டது கிடையாது. சந்தர்ப்பங்கள் கிடைத்த போது கேட்டதெல்லாம் திருச்சி, சென்னை, பாண்டிச்சேரி வானொலி நிலையங்களில் இருந்து ஒலிபரப்பான நாடகங்கள். அநேகமாக இலக்கிய நாடகங்கள் தான். மண்டைதீவு ஒலிபரப்பி அறுபதுகளின் பிற்பகுதியில் இயங்கத் தொடங்கும் முன் எம் பகுதிகளில் இந்திய வானொலி அதிலும் திருச்சி நிலையம் மிகத்தெளிவாகக் கேட்கும் என்பதால், அதைக் கேட்பது தான் வழக்கமாக இருந்தது. மற்றும் விடுமுறைக்கு நான் பெற்றோரிடம் மலையகம் சென்ற வேளைகளில் இலங்கை வானொலி நாடகங்கள் சிலவற்றைக் கேட்டிருக்கின்றேன். அவையும் பெரும்பாலும் இலக்கிய நாடகங்களே. சில சமயங்களில் மாலையில் வர்த்தக சேவையில் ஒலிபரப்பான சானாவின் 'லண்டன் கந்தையா' நாடகத்தைக் கேட்டதுண்டு. இது யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் அமைந்த-நாடகம். எனவே வானொலி நாடகம் என்றால் இலக்கியச் சொல் நடையில் அல்லது தூய தமிழில் இருக்கும் - இருக்க வேண்டும். சாதாரண பேச்சு வழக்கில் அமைந்திருந்தால் அது நகைச்சுவை நாடகம் என்ற ஒரு மேலோட்டமான எண்ணம் தான் எனக்கு இருந்தது. அறுபதுகளின் நடுப்பகுதிவரை தயாரிக்கப்பட்ட சினிமாப் படங்களில் இந்த நிலை இருந்ததை அறிவீர்கள். கதாநாயகன், நாயகி அது சமூகப்படமாக இருந்தால் கூட தூய தமிழில் தான் பேசுவார்கள். நகைச்சுவை நடிகர்கள் சாதாரண பேச்சுவழக்கில் பேசுவார்கள்.

வானொலி நாடகங்கள் பற்றி இத்தகையதொரு கண்ணோட்டத்துடன் நான் 1970ஆம் ஆண்டு நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளனாக இலங்கை வானொலியில் சேர்ந்து கொண்டேன். எனது பணி, நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்வது பல்வேறு மொழிகளில், பல்வேறு நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்யும் சந்தர்ப்பம். ஒலிபரப்பின் நுணுக்கங்கள் முதல் கலை இலக்கியத் துறை வரை மிக நுணுக்கமாக - விரிவாக அவதானிக்கக் கூடிய சந்தர்ப்பம். அப்போது தமிழ் நாடகத் துறைக்குப் பொறுப்பாக சானா அவர்கள் இருந்தார்கள். அவரது சகல ஒலிப் பதிவுகளையும் பெரும் பாலும் கே.எம். வாசகர் செய் வது வழக்கமாக இருந் தது. கொழும்பு தமிழ் மேடை நாடகத் துறையில் பிரபலமாக இருந்த கே.எம். வாசகர் அவர்கள், நான் பணி யில் சேர்வதற்கு ஒரு சில மாதங்கள் முன்பு நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளராகச் சேர்ந்திருந்தார். அப்போது தான் இந்த புதிய பதவி முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு முன்னர் தொழிநுட்பவியலாளர்களே ஒலிப்பதிவை மேற்கொண்டனர்.

மேடை நாடகத்தில் பிரபலமான கே.எம்.வாசகர் வானொலியில் சேர்ந்ததும், தயாரிப்பு உதவியாளர் என்ற அந்தப் புதிய பதவியை ஏற்படுத்திய நோக்கத்துக்கமைய அவரே சானா அவர்களின் நாடகங்களை ஒலிப்பதிவு செய்யும் பொறுப்பில் ஈடுபடுத்தப்பட்டார். அவர் ப்ணி செய்யாத சில சமயங்களில் எனக்கும் மற்றும் என்னுடன் பணியில் சேர்ந்த மற்றும் தமிழ் நிகழ்ச்சித் தயாரிப்பு உதவியாளர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அப்போது சானா அவர்கள், கிரமமாக ஒவ்வொரு கிழமையும் ஒலிபரப்பாகும் நாடக நிகழ்ச்சிகளைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அப்போது மெல்ல மெல்ல யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் அமைந்த நாடகங்கள் தயாரிக்கப்படத் தொடங்கிய காலம். அதற்கு முந்திய கால கட்டங்களில் அநேகமாக இலக்கிய நடையில் அல்லது தூய தமிழில் அல்லது இந்திய பேச்சுவழக்கில் அமைந்த நாடகங்களே தயாரிக்கப்பட்டன. அந்தக் கால கட்டத்தில் பிரபலமாக இருந்த நடிகர்கள் அநேகமாக கொழும்பைச் சேர்ந்த ரி.வி. பிச்சையப்பா, ரோசாரியோ பீரிஸ், ஜபார், ராஜேஸ்வரி பிச்சாண்டி (பின்பு சண்முகம்), பிலோமினா சொலமன், விசாலாட்சி குகதாசன் போன்ற இந்திய வம்சாவளி நடிகர்களே. நான் சேர்ந்த காலகட்டங்களில் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் அமைந்த பிரதான நாடகங்கள் தயாரிக்கப்படத் தொடங்கியதால், சுப்புலக்ஷ்மி காசிநாதன், கே. மார்க்கண்டன், எஸ்.கே.தர்மலிங்கம், எஸ்.எஸ். கணேசபிள்ளை, ரி. ராஜேஸ்வரன் போன்ற நடிகர்கள் பிரபலமாகத் தொடங்கியிருந்தார்கள். உணர்ச்சிகரமான நாடகங்கள் இந்தியச் சாயலுடன் கூடிய தூய தமிழில் இருந்தால் தான் (அக்கால சமூகப் படங்களின் பாணி) இரசிக்க முடியும் என்ற எண்ணத்தில் இருந்த எனக்கு இந்த வானொலி நாடகங்கள் வித்தியாசமான உணர்வை ஏற்படுத்தின. ஆனால், கதம்பம் நிகழ்ச்சியில் இடம்பெற்ற யாழ்ப்பாணப் பேச்சுப் பாணியில் அமைந்த நகைச்சுவைத் துணுக்கு நாடகங்கள் மிகைப்படுத்தப்பட்ட பேச்சுப்பாணியாக இருந்த போதிலும் இயல்பாக இருந்தன. கே.எம்.வாசகர் யாழ்ப்பாணப் பேச்சுவழக்கு, உணர்ச்சிகர சமூக நாடகங்களுக்குப் பொருந்தவே பொருந்தாது என்ற திட்டவட்டமான அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார். அவரது பிரபலமான 'சுமதி' போன்ற மேடை நாடகங்கள் இந்திய பாணியிலேயே உரையாடலைக் கொண்டிருந்தன.

இந்தக் காலகட்டம் இலங்கைத் தமிழ் இலக்கிய உலகு, மண்வாசனை, யதார்த்தம் என்னும் கோட்பாடுகளைக் கொண்டு தீவிரத்துடன் தனித்துவமாக வளரத் தலைப்பட்ட காலம். ஏனவே எமது எழுத்தாளர்கள் புனையும் வானொலி நாடகங்களும், எமது மண்ணுக்குரிய தனித்துவத்துடன் மிளிரத் தொடங்கியமை தவிர்க்க முடியாததொன்று மட்டுமல்ல, ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதும் ஆகும் என்று எனது சிந்தனை மாற்றமடையத் தொடங்கியது. ஆனால், எமது பேச்சுவழக்கில் யதார்த்தமாக உணர்வுகளை வெளிக்காட்டுவதற்கு நடிகர்களுக்கு சற்று சுதந்திரம் வேண்டும் என்று நான் உணர்ந்தேன். சானா ஈழத்துத் தமிழ் வானொலி நாடகத் துறையின் முதல்வர். தயாரிப்பு நுணுக்கங்களை நன்கு பயின்றவர். ஒலிபரப்புக் கலையின் புனித ஸ்தலம் என்று போற்றப்படுகின்ற பி.பி.சி.யில் தயாரிப்புப் பயிற்சி பெற்றவர். வானொலி நாடகங்கள் தயாரிக்கும் இலக்கணத்தை, சூத்திரத்தை இம்மியளவும் பிசகாமல் கடைப்பிடித்தவர். வானொலி நடிகர்கள் ஒப்பந்தக் கடிதத்திற்கு உரிய வேளையில் பதில் அளித்து, ஒத்திகைகள், ஒலிப்பதிவு முதலியவற்றுக்கு குறித்த நேரத்திற்கு இன்றுவரை வருகிறார்கள் என்றால், அதற்கு சானா அவர்கள் அன்று மிகுந்த கண்டிப்புடன் கடைப்பிடித்த ஒழுக்கம் தான் காரணம். அவரது தயாரிப்புப் பிரதியை பார்த்தால் நாடகத் தயாரிப்பு இலக்கணங்கள் சம்பிரதாயங்கள் அப்படியே கடைப்பிடிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஒவ்வொரு வசனமும் இலக்கமிடப்பட்டிருக்கும். பல்வேறு நிற மைகளினால் தயாரிப்புக் குறிப்புகள் இடப்பட்டிருக்கும். ஒவ்வொரு பக்கமும் எவ்வளவு நேரம் எடுக்குமென்று நிறுத்தல் கடிகாரம் கொண்டு கணிக்கப்பட்டு அடியில் குறிப்பிடப்பட்டிருக்கும். முதல் நாள் ஒத்திகை, அடுத்தநாள் மீண்டும் ஒத்திகை, ஒலிபரப்பு அல்லது ஒலிப்பதிவு நடைபெறும். அந்தக் காலத்தில் எல்லாமே நேரடி ஒலிபரப்பாக இருந்தமையால், நாடகம் போன்ற பெரிய தயாரிப்புக்களில் மிகுந்தளவு கண்டிப்பான தயாரிப்பு முறை கடைப்பிடிக்கப்பட்டது. பின்பு படிப்படியாக நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்யத் தொடங்கிய பின்பும் அதே கண்டிப்பு கடைப்பிடிக்கப்பட்டது. காரணம், ஆரம்பத்தில் ஒலிப்பதிவு இயந்திரங்கள் நிகழ்ச்சிகள் நடைபெறும் கலையகங்களுக்குள் இருக்கவில்லை. சற்றுத் தொலைவில் அமைந்துள்ள கட்டுப்பாட்டு அறைக்குள் தான் இருந்தன. எனவே, கலையகத்தில் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகள் நேரடியாக ஒலிபரப்பப்படுவது போன்றே சீராக நடைபெறவேண்டும். இல்லையெனில், மிகுந்த சிரமப்பட நேரும். ஒலிப்பரப்பில் நேரம் என்பது முதன்மையானதும், மிக முக்கியமானதுமான ஒரு விடயம், ஒத்திகை பார்த்து நேரம் கணிக்கப்பட்ட பின்பு நடைபெறும் இறுதி ஒத்திகையில் நடிகர் சற்று உணர்ச்சிவசப்பட்டு ஒரு சொல்லை திரும்பச்சொல்லிவிட்டால் கூட (உதாரணத்திற்கு முடியாது என்று சொல்லவேண்டியதை முடியாது, முடியாது என்று அழுத்தம் கொடுத்து சொல்லிவிட்டால்) சானா அவர்கள் உடனேயே ஒத்திகையை இடைமறித்து, அப்படிப் பிரதியில் இருக்கிறதா என்று கடுமையாக விசாரிப்பார். பிரதியில் இருப்பதைவிட ஒரு பெருமூச்சுக்கூட அதிகமாக விட முடியாது. ஏனெனில், ஒவ்வொரு நடிகரும் இப்படியே செய்தால் அவர் கணித்த நேரம் பிசகிவிடும். இத்தகைய தயாரிப்பு முறையினால் தான் அவர் குறித்த நேரத்தில் அச்சொட்டாக நிகழ்ச்சிகளை முடிக்கும் ஆற்றல் கொண்ட தயாரிப்பாளர் எனப் போற்றப்பட்டார். ஒலிபரப்பில் இது ஒரு முக்கிய திறமை. ஆனால், இது நடிகர்களை ஒரு இயந்திரம் போல் இயங்க வைப்பதாக நான் உணர்ந்தேன். இலக்கிய நாடகங்களில் அவ்வளவு பிரச்சினை இல்லாவிட்டாலும் சாதாரண பேச்சுவழக்கில் அமையும் யதார்த்தமான நாடகங்களை நடிப்பதற்கு நடிகர்களுக்கு சுதந்திரம் வேண்டும்.

1973ஆம் ஆண்டு சானா அவர்கள் ஓய்வுபெற, காலஞ்சென்ற கே.எம்.வாசகர் அவர்கள் பிரதான நாடகத் தயாரிப்பாளர் ஆனார். சூழ்நிலையில் பெரும் மாற்றம். அதிகளவு ஈழத்து எழுத்தாளர்கள் நாடகம் எழுதத் தொடங்கினார்கள். பேச்சுவழக்கு பற்றிய வாசகரின் கருத்திலும் மாற்றம் ஏற்பட்டிருந்தது. அத்தோடு கலையகத்தினுள்ளேயே ஒலிப்பதிவுக் கருவிகளும் இடம்பெறத் தொடங்கி விட்டன. நினைத்தபடி நிறுத்தி நிறுத்தி ஒலிப்பதிவைத் தொடரலாம். இதனால் வாசகருக்கு தயாரிப்புக் கெடுபிடிகளைத் தளர்த்தி, நடிகர்களுக்கு இயல்பாக நடிக்கக் கூடிய சுதந்திரத்தைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. இதனால், தமிழ் வானொலி நாடகங்கள் மிகுந்த வரவேற்பைப் பெறத் தொடங்கின. யாழ்ப்பாணத் தமிழ் பேசும் நடிகர்கள் பிரபலமாகத் தொடங்கினார்கள். சுப்புலக்ஷ்மி, காசிநாதன், விஜயாள் பீற்றர், ஆனந்தராணி, செல்வநாயகி, கமலினி, மார்க்கண்டன், தர்மலிங்கம், கே.எஸ்.பாலச்சந்திரன், யேசுரட்ணம், அமிர்தவாசகம் போன்ற மேலும் பல நடிகர்கள் அதிகளவில் மக்களுக்கு அறிமுகமானார்கள்.

காலஞ்சென்ற சில்லையூர் செல்வராஜன் அவர்களின் திரைப்படப் பிரதியின் கதையை மூலமாகக் கொண்டு கே.எம்.வாசகர் அவர்கள் எழுதித் தயாரித்து, மக்கள் வங்கியின் அனுசரணையுடன் வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகிய 'தணியாத தாகம்' என்ற வானொலி நாடகம், இலங்கை வானொலி நாடக வரலாற்றின் உச்சக் கட்டம் என்று கூறலாம். யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் அமைந்த சமூக வானொலி நாடகம் ஒன்று பிராந்திய வேறுபாடுகளைக் கடந்து, அத்தகைய அபரிதமான வரவேற்பைப் பெற்றது ஒரு வரலாற்று நிகழ்ச்சி. அதற்கு முதல் சானாவின் 'லண்டன் கந்தையா', ராமதாஸின் 'கோமாளிகள்' போன்ற நாடகங்கள் வர்த்தக சேவையில் ஒலிபரப்பப்பட்டு மிகுந்த வரவேற்பைப் பெற்ற நாடகங்கள் தான். ஆனால் நகைச்சுவை நாடகங்கள் என்ற வகையில் அவை பெற்ற வரவேற்பு ஆச்சரியமான தொன்றல்ல.




# வாழ்ந்து பார்க்கலாம்

## இலங்கை வானொலியில் வாழ்ந்து பார்த்த அனுபவங்களை பகிர்ந்துகொள்கிறார்

## பி. விக்னேஸ்வரன்


கே.எம். வாசகர் உணர்ச்சி வசப்படுபவர். அதை வெளிப்படையாகவே காட்டிக் கொள்பவர். நாடக ஒத்திகை, ஒலிப்பதிவுகளின் போது அவர் தன்னை மறந்த நிலையில் நின்று நடிகர்களுக்கு நடித்துக் காண்பிப்பார். நடிகர்களுக்கு வசனங்களை வரிக்கு வரி சொல்லிக் கொடுப்பார். நடிகர்கள் உணர்ச்சிகரமாக நடிக்கும் போது அவர்களின் உணர்ச்சிகளுக்கேற்ப இவரின் முகபாவங்கள் மாறிக் கொண்டே இருக்கும். ஆரம்பத்தில் இத்தகைய நெறியாள்கையினால் நான் கவரப்பட்டாலும், கா்லப்போக்கில் இதில் குறைபாடு இருப்பதை உணர்ந்தேன். காரணம், காலம் செல்லச் செல்ல அவரின் நாடகங்களில் அனைவரும் ஒரே பாணியில் நடிக்கத் தொடங்கி விட்டார்கள். குறிப்பாக, நடிகைகளும், புதிய நடிகர்களும் வாசகரைப் போலவே வசனங்களை ஏற்ற இறக்கங்கள், நிறுத்தங்களுடன் பேசத் தொடங்கி விட்டார்கள். நடிகர்களின் சொந்தப் பங்களிப்பு மிகக்குறைவாக இருந்தது. நடிப்பும் யதார்த்தத்திலிருந்தும் சற்று மிகைப்படுத்தப்பட்டதாக இருந்தது. ●

*நூல் கிடைக்கும் இடம்.*

P. Wikneswaran,
100, Mornelle Court
Apt 1080,
Scarborough, Ontario
MIE 4X2, Canada.

# அகிரா குரோசாவா: "எங்கள் காலத்து ஷேக்ஸ்பியர்"

*ஆங்கிலத்தில்: ஜயதேவ*
*தழுவல்: எம்.கே.எம்.எஸ்*



"வெளிநாட்டவர்களும் அதிகம் என் படங்களை நன்றாகப் புரிந்து கொள்கிறார்கள் என்று நான் அதிகம் கேள்விப்படுகிறேன். ஆனாலும், நான் உண்மையில் அவர்களுக்காகப் படம் எடுப்பதில்லை. படத்தயாரிப்பின் போது வெளிநாட்டவர்கள் பற்றி நான் கருத்திற் கொள்வதில்லை. நான் எடுக்கும்படங்களெல்லாம் இன்றைய இளம் ஜப்பானியர்களுக்காக எடுக்கப் படுவது.இளைய தலைமுறைக்கு நான் என் படங்களை உருவாக்க வேண்டி இருப்பதால், மேற்கத்தேயப் பாணி உருவாக்கத்தை நான் கைக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதுவே நடைமுறை சாத்தியமானதெனவும் காண்கின்றேன். இளையவர்களுக்கு விளங்கப்படுத்துவதற்காய் வேண்டி நான் இருப்பதைப் பரிமாற்றம் செய்ய வேண்டியிருக்கிறது. நான் இளைய தலைமுறை என்று குறிப்பிடுவது 20களில் உள்ளவர்களையாகும். உண்மையில் இவர்கள் தான் என் படங்களின் இலக்கு. இவர்களுக்கு ஜப்பான், ஜப்பானியத்துவம் தெரிவதில்லை இப்போதைக்கு. ஆனால், ஒரு காலத்தில் எல்லாவற்றையும் அவர்கள் அறிவார்கள். நானும் கூட, ஜப்பானியன் தான். அதுவும் உண்மையான ஜப்பானியன்...."

*- அகிரா குரோசாவா*

"உண்மை ஜப்பானியன் என தன்னை வர்ணித்துக் கொண்ட அகிரா குரோசாவா ஞாயிறன்று (30.8.98) தன் 88வது வயதில் இறந்து போனான். கடந்த காலங்களில் 'வாழ்ந்து கொண்டிருக்கும் உலகின் தலை சிறந்த சினிமா இயக்குனர்' என அடிக்கடி நினைவு கூறப்பட்டவர். உலகின் கவனத்தை தன் பால் ஈர்த்துக் கொண்டவர். மேற்கின் படத் தயாரிப்பாளர்களிடையே மதிப்பையும், மரியாதையையும் பெற்றவர். மரணப் பிரிவுபசாரச் செய்தியொன்றில், அகிரா குரோசாவாவின் பிரபலமான விசிறிகளில் ஒருவரும், இயக்குனருமான ஸ்டிவன் ஸ்பில்பேர்க் இவரை "எங்கள்" காலத்திய "காட்சியூடக ஷேக்ஸ்பியர் (Visual Shakespere)' என வர்ணித்திருக்கிறார். தரம், தாத்பரியம், ஆழ, அகலம் எனப்பார்க்கையில் அகிரா குரோசாவா சர்வதேச சினிமாவில் நிலையான வித்தகம் புரிந்திருக்கிறார். அவரின் சிறப்புத் திறமை சர்வதேச சினிமா உலகில் பணிவுடன் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அகிரா குரோசாவாவை காட்சியூடக ஷேக்ஸ்பியர் என்று சொல்லும் கூற்றை நியாயப்படுத்தும் வகையில் அவரின் இரண்டு படங்களைக் குறிப்பிடலாம். இரண்டும் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை சினிமாத் தனமாக சிறந்த முறையில் வியாக்கியானப் படுத்தித் தந்திருக்கிறது. 'இரத்தச் சிம்மாசனம் (Throne of Blood), Ran ஆகியன ஷேக்ஸ்பியரின் 'மெக்பத்', King Lear ஆகிய நாடகங்களைத் தழுவித் தயாரிக்கப்பட்டதாகும். (இரண்டாவதில், 'லியரி'ன் மரபுவழிவந்தோர் தற்செயலான பால் உருவ மாற்றத்துக்குள்ளானார்கள். மகள்கள் மகன்களாக மாறினார்.)

ஜப்பானின் விதிவிலக்குப் பெற்ற படத்தயாரிப்பாளர்களில் குரோசாவா நன்கு அறியப்பட்டவராகவும், வரவேற்கப்பட்டவராகவும் இருக்கிறார். ஐம்பது வருட காலத்துள் (1943 Sanshiro Sugata என்ற படத்தில் தொடங்கி, 1993ன் Madadaya வரை) முப்பது படங்களைத் தந்திருக்கிறார். அவற்றில் அநேகமானவை முதற்தரமான, தலை சிறந்த படைப்புக்களாய் உள்ளன. சர்வதேச அங்கீகாரம், வரவேற்பு கிடைத்தும் கூட அவரின் தன்முனைப்பில் எந்த மாற்றங்கயையும் ஏற்படுத்தவில்லை. தன்னடக்கமும், மேதாவித்தனமற்ற தன்மையும் அவரின் பாதைகளாயிருந்தன. இரு தடவை சிறந்த வெளிநாட்டுப் படங்கள் என்ற பிரிவில் ஒஸ்கார் விருதும், (இது ஒரு சாதனையும் கூட) Motion Picture's கலைகள் விஞ்ஞானங்களுக்கான அமெரிக்க கல்வியகத்தின் அதிஉயர் விருதான Lifetime achivement award ஐ 1990லும் பெற்றிருக்கிறார். (இந்த விருதைப்பெற்ற இன்னொரு ஆசிய நெறியாளர் சத்யஜித்ரே) தனது பெயர் இவ்விருதுக்கு தெரிவாகியிருப்பதை அறிந்த அகிரா குரோசாவா "அவன் இன்னும் அதை எட்டிக் கொள்ளும் நிலையடையவில்லை" என்றார். தான் இன்னும் தன் கலையைத் தேடிக்கொண்டிருப்பதாகவே பிரகடனப்படுத்தினார். இதை ஒன்றும் நாம், வெறுமனே தவறான, பிற்போக்கான பணிவு என்று கருத்திற் கொள்ளக்கூடாது. அவர் தெரிவு செய்து கொண்ட கலையூடகத்திற்கும், அதன் எண்ணற்ற சாத்தியப்பாடுகளுக்கும் அவர் திருப்பியளித்த மதிப்பும் உயர் அந்தஸ்தும் என்றுதான் அதைக் கொள்ள வேண்டும்.

டோக்கியோவாசியான அகிரா குரோசாவாவின் தந்தை "நன்கு பயிற்சி பெற்ற இராணுவ உத்தியோகத்தர்". மற்றும் 'கண்டிப்பானவர்". தாயோ "மிகச் சாதாரண மென்மைக் குணமுடைய ஒருத்தி." இந்தக் குடும்ப மற்றும் வர்க்கப் பின்னணியில் அவர், "இராணுவத்துடனான எந்த நடவடிக்கையையும் வெறுத்தார்." ஒரு நடுத்தர கல்விக்கூடமொன்றில் ஒரு பாடமாக இராணுவப் பயிற்சி பெற்றிருந்தாலும் "அவர் ஒரு போதும் துப்பாக்கி தூக்கித் திரிந்ததில்லை."

17 வயதில் The Doshva School of western Painting ல் சேர்ந்து பயிற்சி பெற்றுத் தேர்கிறார். இங்கிருக்கையில் இவரின் ஓவியங்கள் இரண்டு தடவை தேசியக் கண்காட்சிக்கு தேர்வு செய்யப்பட்டது. ஏழ்மை இவரை இதைத்தொடர விடவில்லை. ஓவியக் கல்லூரியில் இருந்து விலகிய அகிரா குரோசாவா, Japan Proletariat Artist's Groupல் இணைந்து கொண்டார். அங்கு அவர் மார்க்சியத்தை உள்வாங்காது கலை, இலக்கியத்தில் புதிய இயக்கங்களை கற்பதையே தன் இலக்காகக் கொண்டிருந்தார். ஆர்வத்தோடு வாசிப்பதில் ஈடுபட்டார். மணிக்கணக்கில் டோல்ஸ்டோய், Turgenev, தாஸ்தாவ்கி போன்றோர் பற்றி கதைக்கக் கூடியவராக மாறினார்.

குறிப்பாக தாஸ் ...ாகூவ்கி இவரில் பாதிப் பேற் படுத் தியிருக்கிறார்.. "நான் விரும்பும், இன்றுவரை மதிக்கும் ஒருவர் அவர். அவர் பெரும் தாக்கம் ஏற்படுத்தியவர்" என்று குறிப்பிடுகிறார்.

இதுதான் அகிரா குரோசாவாவை படநெறியாளராக உருவாக்கிய பிரதான காரணிகள். ஓவியனாக இருந்தமை, மேற்கின் கலை இலக்கியத்துடனான அவரது தொடர்பு, சமுராய்ப் பாரம்பரியங்கள் போன்றனவெல்லாம் அவரை உருவாக்கின. இதில் முதல் இரண்டும் பல்வேறு கருத்துக்களுக்கு உட்படக் கூடியது. ஆனால், ஒரு படத் தயாரிப்பாளருக்கு - தென்னாசிய சினிமாச் சூழலில் - பேசும் வார்த்தைபற்றிய காட்சியமைப்பை உருவாக்கும் திறனுள்ளமை இன்றியமையாத ஒன்றாகவே கொள்ளக் கூடியது.

மேற்கின் கலை, இலக்கியத்தை கற்பதில் ஆர்வமுடையவராக இருந்தார் என்பதில் இன்னும் சிலதையும் சேர்த்துச் சொல்ல வேண்டும். அகிரா குரோசாவா டால்ஸ்டாய், தாஸ்தாவ்கி, டர்ஜீனீவ் ஆகியோரது மாத்திரம் செல்வாக்கிற்குட்படவில்லை. Jhon Ford, Abel Gance, Howard Hawkes, George Stevens, Frank Capka, Willam Wyler என வேறுபட்ட மரபினர் சிலரும் அவரில் தாக்கம் செலுத்தியுள்ளனர். இந்தக் 'கடவை' சினிமாவின் அதிகார எல்லையில் சரியானதும், பொருத்தமுடையதுமான பெருக்கத்தையே, விருத்தியையே ஏற்படுத்தியிருக்கிறது. விளக்கிக் கூறும் தரத்தில் அகிரா குரோசாவாவின் சமுராய் பண்பு அவரை ஒரு தரமிக்க இயக்குனராக இனங்காட்டியிருக்கிறது. ஜப்பானிய திரைப்பட வரலாற்றாய்வாளரும், விமர்சகருமான Donald Richie இவ்வாறு குறிப்பிடுகிறார்: "அகிரா குரோசாவா சமுராய் குழாத்திலிருந்து வந்தவர். எந்தப் பாரம்பரியமும், சூழலும் அவரில் பாதிப்புச் செலுத்தியிருந்தாலும் கூட இந்த ஆரம்பத் தகைமைகளும், நிலைமைகளும் பாதிப்பேற்படுத்தவே செய்திருக்கின்றன. குறிப்பாக அவரில் தூய்மைத்துவ அமைப்பும், பழங்காலத்து பாணியிலான இரக்கம் கொள்கிற உறுதியும், பூரண ஒழுக்கமுடைமையும், சமரசமற்ற தன்மையும், கோட்பாட்டுச் செயற்பாட்டையும் காணமுடிகிறது. இதெல்லாம் Bushido என்கிற ஒற்றைச் சொல் கொள்கையின் கீழே வருகிறது."

Bushido பல்வேறு அடிப்படைகளில் இருந்து உருவான, அதிலும் Zen தத்துவத்திலிருந்து தோற்றம்பெறுகிற ஆழமானதும், மனதை ஈர்க்கிறதுமான ஒரு தத்துவக் கண்ணோட்டம். Donald Richie, "Bushido என்பது ஒரு வாழ்க்கை முறை. ஒவ்வொன்றையும் உள்ளதை உள்ளபடியே விளங்கிக்கொள்வதற்கான ஒரு வழிமுறை அது" என்கிறார்.

அகிரா குரோசாவாவின் அனேக படங்களில் இந்த Bushido பெறுமானங்களே இருப்பதாக பல அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். எனக்கு எப்போதுமே பிடித்ததான அவரின் The Sevan Samurai, Sanjuro, Yojimbo ஆகிய படங்களிலும் இந்தப் பெறுமானங்களே எடுத்துச் சொல்லப் பட்டிருக்கின்றன. தத்துவார்த்தப் பார்வை, நோக்கு, மனித வாழ்வு பற்றிய உணர்வுபோன்றவையே அகிரா குரோசாவாவின் படங்களில் நேர்த்தியையும், உறுதிப்பாட்டையும் கொடுக்கின்றன எனலாம்.

அகிரா குரோசாவா அவரது தொழில்சார்ந்த பிரபலக் கலாசாரத்துள்ளோ, உயர்வு நவிற்சிக்குமோ உட்பட்ட ஒருவராக இல்லாமல் தனிப்பட்ட ஒரு மனிதராகவே தோற்றம் தருகிறார். அவர் பற்றி அதிகமாய் எழுதப்பட்டதுமில்லை. விமர்சனத்தனமான தன் அணுகல்களில், ஊகங்கள், புலன்சாரா விடயங்களில் தனக்கிருக்கும் வெறுப்பைச் சுட்டிக் காட்டுகிறார். அவரது கலையின் தரம்பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார் அகிரா குரோசாவா.

*"பலர் என் படைப்பை விமர்சிக்கிறார்கள். அவை யதார்த்தமானதல்ல என்கிறார்கள். உலகின் வெளித்தோற்றங்களை அப்படியே பிரதி பண்ணி ஒப்படைப்பதென்பது எதையும் யதார்த்தமாக்கிவிடாது. அது பிரதிபண்ணல்தான். யதார்த்தம் எதுவென்று அறியவேண்டுமானால், ஒருவரின் உலகை நாம் ஆழ்ந்து கூர்ந்து பார்க்கவேண்டும். ஒருவன் யதார்த்தமென்று உணர்கிற ஒரு விடயத்துக்கு பங்களிப்புச் செய்கிற விடயங்களையெல்லாம் தேடியறியவேண்டும். இவை சொற்பமானது தான். அவற்றை ஒருவன் உருவாக்குகிறான். இந்த உள்மையப் பகுதியைச் சுற்றித் தான் உலகம் நகர்கிறது. சுழற்சி மையக்கோடும் இங்கே தான் திரும்புகிறது, மாறுகிறது. தாஸ்தாவ்கி, டோல்ஸ்டாய், டார்ஜீனீவ் போன்றோரெல்லாம் இந்த விடயங்கள் என்ன என்பதை தங்கள் படைப்புக்களில் காட்டியிருக்கிறார்கள். கலைஞனாக இருப்பதென்பது, அவன் விடயங்களை தேடுபவனாக கண்டுணர்ந்து ஆய்பவனாக இருப்பதாகும். ஒருவனின் பார்வையை திருப்பி விடுபவனாக, தடுப்பவனாக இருப்பது கலைஞனாக இருப்பதென்பதன் அர்த்தமல்ல."*

அகிரா குரோசாவாவின் பெயர் இலங்கையிலும் பிரபல்யமானதும், மதிப்பளிக்கப்பட்டதுமான ஒன்றாயினும் கூட அவரை உரிய முறையில் இனங்கண்டு இருக்கிறோமா என்பது ஒரு கேள்வியே. அகிரா குரோசாவாவின் ஜப்பானியத்துவத்தை நாம் பெரும்பாலும் வாட்சண்டையிலும், உடையலங்காரத்திலும், கதை வினோதங் களிலும் தான் காட்டியிருக்கிறோம். அல்லது கண்டிருக்கிறோம். "மேற்பரப்பின் கீழேயுள்ள" உண்மையான அகிரா குரோசாவாவை நாம் இன்னும் சரியான முறையில் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. எங்கள் மண்ணில் அவரை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. எப்போதாவது ஒரு நாள் அது நிகழும். எப்போது என்பது தான் தெரியாது. நிகழ்ந்தால் இலங்கையில் தற்போதைய சினிமாக் கலையின் போக்கு எவ்வளவு சிறுபிள்ளைத் தனமானது, போலியானது, அறிவற்றது என்பதை நாம் உணர்ந்து கொள்ளமுடியுமாயிருக்கும். சினிமாவின் அரசியல், சமூக, முக்கியத்துவம் தெரியாமல் அதில் ஈடுபடும் இலங்கை சினிமாக்காரர்கள், 'சீரியஸ் இயக்குனர்களின்' பொருத்தப்பாங்கற்ற நிலையும் தெரியவரும். ●

# The God of Small Things நாவல் பற்றி.....

# அருந்ததி ராய் : பார்ப்பன இடதும் மனுநீதியும்

**பேரா. டி.பி. விஜயகுமார்**

அருந்ததி ராயின் முதல் முயற்சியான ''சின்ன விசயங்களின் கடவுள்'' (The God of Small Things)ஒரு மகத்தான ஆக்கம். இன்றைய மைய நீரோட்ட இந்திய எழுத்தாளர்கள் பலரையும் அது பின்னுக்குத் தள்ளி விட்டது. ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாக விளங்குகிற பார்ப்பனீயம் ஆணாதிக்கம் ஆகிய இரண்டின் மீதும் தொடுக்கப்பட்ட நேரடித் தாக்குதல் அது: எனவே இடது, வலது மற்றும் மைய சார்புடைய எல்லா விதமான பார்ப்பனச் சிந்தனையாளர்களும் அதனைக் கடுமையாகத் தாக்குகின்றனர். கோட்டயம் நகருக்கு அருகிலுள்ள ஆயமெனம் என்கிற கிராமத்தில் வசிக்கும் மார்த்தோமிய சிரியன் கிறிஸ்தவக் குடும்பத்தின் கதை இது. தலித்கள், பெண்கள் மற்றும் இந்திய சமூகத்தின் மிகவும் ஒடுக்கப்பட்ட பிரிவினர் பற்றிய நெஞ்சை உருக்கும் கதையைச் சொல்கிறார் அருந்ததி.

கேரள கிறிஸ்தவர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். மேல் வருண சிரியன் கிறிஸ்தவர்கள், லத்தீன் கத்தோலிக்குகள் (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனவர்கள்) மற்றும் தலித் கிறிஸ்தவர்கள். ஆயிரத்தைன்னூறு ஆண்டு வரலாறுடைய சிரியன் கிறிஸ்தவச் சமூகம் மிகவும் இந்து மயமாக்கப்பட்ட ஒரு பிரிவு. இந்து சாதி ஒன்றைப் போல் அதுவும் ஒரு (சூத்திர) நாயர் சாதி. அவர்கள் சாதி முறையைக் கடைப்பிடித்தார்கள். அவர்ண சாதிகளான தலித்களையும், பகுஜன்களையும் அவர்கள் ஒடுக்கினார்கள். அதனை அவர்கள் பெருமையாகவும், உரிமையாகவும் கருதினார்கள். போர்த்துக்கீசர்களின் வருகைக்கு முன்பு ஆண்டியோக்கில் இருந்த பாபிலோன் சபையோடு அவர்கள் தொடர்பு கொண்டிருந்தார்கள். கோவாவில் இருந்த போர்த்துக்கீசப் பேராயர் **அலெக்ஸ் - டெ - மினெசிஸ்** அவர்களை இந்து மய நீக்கம் செய்ய முயன்றார். இந்த நோக்கத்திற்காகவே **உதயம் பேரூர் குருமார்** மாநாட்டைக் கூட்டினார் (1599). இந்துக்களிலிருந்து விலகிய ஒரு தனி அடையாளத்தை சிரியர்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது அவர் நோக்கம். எனவே சிரியர்கள் மத்தியில் இருந்த சாதீய நடைமுறைகளுக்கும், தீண்டாமைக்கும் அவர் தடை விதித்தார். சாதி உணர்வுடைய சிரியர்கள் இதனை எதிர்த்தனர். தங்களது உரிமைகளையும், உயர் சாதிப் பெருமைகளையும் அவர்கள் விடத் தயாராக இல்லை. எனவே அவர்களில் பெரும்பான்மையோர் ரோமுடனான தமது தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டு தங்களின் ஆரம்ப காலப் பெர்சிய அடையாளத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயன்றனர். இதனடிப்படையில் அவர்கள் **மட்டஞ்சேரி** மாதா கோயிலில் ''கூனன் சிலுவையின் மீது சபதம்'' (1564) எடுத்துக் கொண்டார்கள். இது மிகவும் பிற்போக்குத்தனமான ஒரு பின்னடைவு நடவடிக்கை. கேரள சிரியன் கிறிஸ்தவர்கள் நூறு சதம் கிறிஸ்துவத் தன்மையற்ற இந்து மயமானவர்கள் என்றால் அது மிகையாகாது.

கேரள மாதா கோயில் வரலாற்றின் இன்னொரு முக்கிய மைல் கல் ''சர்ச் மிஷன் சொசைட்டி'' (சி.எம்.எஸ்.), ''லண்டன் மிஷன் சொசைட்டி'' (எல்.எம்.எஸ்.) மற்றும் ''பேசல் மிஷன் ப்ரொட்டஸ்டன்ட் மிஷனரிகள்'' மேற்கொண்ட சிறந்த பணி. கேரள மறுமலர்ச்சியின் முன்னோடிகள் என இவர்களைச் சொல்லலாம். கோட்டயத்தைத் தலைநகராகக் கொண்டு சி.எம்.எஸ். மிஷனரிகள் சிரியன் கிறிஸ்தவர்கள் மத்தியில் சீர்த்திருத்தங்கள் செய்து அவர்களை நவீனப்படுத்தி, ஆங்கில மயப்படுத்தி இந்துமய நீக்கம் செய்ய முயன்றனர். நவீன கல்வியைக் கற்பிப்பதற்கும் அவர்கள் பெருமுயற்சி மேற்கொண்டனர். ஐரோப்பிய தொடர்புகளையும் அவர்கள் ஏற்படுத்தினர். ஆனால் சாதி உணர்வுள்ள மனுவாதி இந்துயிசச் சக்திகள் இதனைக் கடுமையாக எதிர்த்தனர். இரு சாதிகளும் கடுமையாக மோதிக் கொண்டன. யாருக்கும் வெற்றியுமில்லை. தோல்வியுமில்லை. சிரியன் புரட்டஸ்டன்ட்களும், மார்த்தோமியர்களும் நவீனத்துவ முயற்சிகளில் முன்னணியில் இருந்தனர். அருந்ததி ஒரு மார்த்தோமிய கிறிஸ்தவர். முழுமையாக இந்துமய நீக்கம் செய்யப்பட்ட அறிவுஜீவி. எனவே அவரது இந்த ஆக்கம் சிறப்பாக அமைந்துள்ளது. இல்லாவிட்டால் அழுகிப்போன மேல் வருண சாமானாக அது உருப்பெற்றிருக்கும். அவர் முழுமையாக மரபுவழி இந்திய மதிப்பீடுகளிலிருந்து விடுபட்டவர். நூறு சதவீதம் இந்தியத் தன்மையற்றவர். அவரது சிறப்பு இதில் தான் உள்ளது. இத்தகைய சமூகக் - கலாசாரப் பின்னணியில் தான் அருந்ததி தனது மகத்தான ஆக்கத்தை உருவாக்கியுள்ளார்.

கி.மு. 185ல் புஷ்யமித்ர சுங்கன் மேற்கொண்ட பார்ப்பனச் சதியையொட்டி கி.மு. 150ல் தோன்றிய மனுநீதியோடு தந்தை வழி சமூகத்தின் தோற்றத்தை நாம் பார்க்கவேண்டும். மனுயிசத்தின் உடனடி விளைவுகளாக பெண்ணடிமைத்தனம், சாதிய அமைப்பு வலுவாதல், கைவினைஞர்களும், சூத்திரர்களும் கீழ்மைப்படுத்தப்படுதல், அறிவியல்/ தொழில்நுட்ப வீழ்ச்சி ஆகியவற்றைச் சொல்லலாம். மனுதான் இந்திய சமூகத்தைக் கட்டமைத்தவன். இந்தியத்தண்டனைச்சட்டம், சிவில் வழக்குச் சட்டம், குற்றவியல் சட்டம் என்கிற எல்லாச் சட்டங்களிலும் உயர்ந்தது மனுவின் சட்டம். இந்துயிசத்தின் சாரம் சமத்துவமற்ற படிநிலையாக்க, சமத்துவம், சகோதரத்துவம், சனநாயகம் முதலான மனித மதிப்பீடுகளை முழுமையாகக் கவிழ்ப்பது இந்துயிசம்.



இந்த நாவலின் நாயகன் வேலுதா ஒரு தலித் பரவன். இவன் தான் 'சிறிய விசயங்களின் கடவுள்' வேலுதா ஒரு பன்முகப் பரிமாணமுடைய, பண்புமிக்க உயர்ந்த மனிதன். எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த அவன் ஒரு திறமை மிக்க மரத் தச்சன். மார்க்சிஸ்ட் கட்சியின் உறுப்பினன். கட்சிக்கார்ட் வைத்திருப்பவன். ஒரு உண்மையான புரட்சி மனமுடைய புத்திசாலித்தனமான கட்சி ஊழியன். நமது மாண்புமிகு குடியரசு தலைவர் கே.ஆர். நாராயணனின் சாதியைச் சேர்ந்தவன். ஆயாமெனம் இல்லத்தைச் சேர்ந்த மணவிலக்குப் பெற்ற இளம் பெண் **அம்முவை** அவன் காதலிக்கிறான். வங்க இளைஞன் ஒருவனுடனான முதல் மணத்தில் அவளுக்கு இரட்டைக் குழந்தைகள். ஒருவன் **எஸ்தப்பன்** மற்றவன் **ராகேல்**. ஏழு வயதிலேயே வயதுக்கு மீறிய புத்திசாலித்தனமுடையவர்களாக அவர்கள் விளங்கினர். நல்ல பண்புகளும், எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வமும் சிறந்த எதிர்காலமும் உடைய பிள்ளைகள் அவர்கள். அம்முவின் அண்ணன் **சாக்கோ** ஒக்ஸ்போர்டில் படித்த ஒரு மார்க்சிஸ்ட். இறுதித் தேர்வை சரியாக எழுதாததால் இங்கிலாந்தில் அவனுக்கு நல்ல வேலை கிடைக்கவில்லை. எதிலும் தோல்வியையே அவன் தழுவ நேரிடுகிறது. ஒக்ஸ்போர்டில் படித்தவனான போதிலும் பரிதாபத்திற்குரிய அவனது சகோதரி அம்முவின் விசயத்தில் அவன் நியாயமாக நடப்பதில்லை. சாக்கோவின் மனைவி ஒக்ஸ்போர்ட் ஹோட்டல் ஒன்றில் பணிப்பெண்ணாக இருக்கும் **மார்க்ரெட்**. சாக்கோவுடனான வாழ்க்கை பிடிக்காமல் அவனிடமிருந்து மணவிலக்கு பெறுகிறாள். இந்த மணவாழ்வின் மிச்சம் **'சோபி மோல்'** என்கிற பெண் குழந்தை. இந்தியா திரும்புகிற சாக்கோ அவனது அம்மா ஒழுங்காக நடத்தி வந்த ஊறுகாய் தொழிற்சாலையை குட்டிச்சுவராக்குகிறான். மார்கரெட்டின் இரண்டாவது கணவன் **கோ** இறந்த பின்பு தனது முன்னாள் மனைவியையும் மகள் சோபியையும் ஆயாமெனம் இல்லத்திற்கு வந்து தங்கிச்செல்லுமாறு சாக்கோ அழைக்கிறான். சோபியின் உடற்கூறு அடிப்படையிலான தந்தை சாக்கோ தான் என்றாலும், ஜோவை அவள் உண்மையான தந்தையாகவே நேசித்திருந்தாள். ஆறுதலுக்கு வந்த இடத்திலும் அவர்களுக்குச் சோதனைகள் தொடர்கின்றன. படகு விபத்தொன்றில் சோபி மரிக்கிறாள். வேலுதாவுக்கும் அம்முவுக்குமான காதல் விவகாரம் அம்பலத்துக்கு வரும்போது உயர் வருண சக்திகள் வேலுதாவைத் தீர்த்துக்கட்ட சதித்திட்டம் தீட்டுகின்றனர். உயர் வருண இந்து நாயர் சாதியைச் சேர்ந்த உள்ளூர் மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் கே.எம்.என். பிள்ளை இதில் முக்கிய பங்கு வகிக்கின்றார். இங்கும் சமூக நிலையைத் தக்க வைப்பதில் ஆர்வமுள்ள இவன் ஒரு கொடிய சாதி வெறியன். அம்முவின் அத்தை **பேபி கொச்சம்மா**, ஒரு முன்னாள் கன்னியாஸ்திரி. வேலுதா மீது பொய் வழக்கொன்றைத் தொடுக்கிறாள். அம்முவைக் கெடுத்ததாகவும், குழந்தைகளைக் கடத்திச் சென்று சோபியைக் கொன்றதாகவும் வழக்கு. கோட்டயம் காவல் நிலைய அதிகாரி **தாமஸ் மேத்யூ** ஒரு சிரியன் கிறிஸ்த்தவர். காங்கிரஸ் கட்சி ஆதரவாளர். ஒரு பாழடைந்த வீட்டில் இரட்டைக் குழந்தைகளின் கண் முன் வேலுதா அவனைத் தொடக்கூடிய சாதியைச் சேர்ந்த பொலிஸ்காரர்களால் அடித்துக் கொல்லப்படுகிறான். வேலுதா குற்றமற்றவனான போதிலும் தோழர் கே.எம்.என். பிள்ளை அவனுக்கு உதவி செய்யவில்லை. மேல் வருண கும்பலுக்கே அவர் ஆதரவாக இருக்கிறார். தோழர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் இரண்டாம் முறையாக முதலமைச்சராக இருக்கும் போது (1969) இது நடைபெறுகிறது. வேலுதா பற்றிய புகார் கிடைத்தவுடன் பொலிஸ் அதிகாரி பிள்ளையைச் சந்தித்து அவரது ஒப்புதலோடு தான் 'நடவடிக்கை' மேற்கொள்கிறார். 'மோதலில் சாவு' என பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றன.

ஆக, இது தீண்டத்தக்கவர்களும், தீண்டத்தகாதவர்களுக்குமிடையேயான சாதீயத் தகராறு. சவர்ணர்களுக்கும், அவர்ணர்களுக்குமிடையேயான மோதல். தீண்டத்தகாதவர்களுக்கு ஆதரவுமில்லை; ஆயுதங்களுமில்லை. சவர்ண ஆட்சியாளர்கள் ஆயுதம் வைத்திருப்பவர்கள், இரக்கமற்றவர்கள், கொடூரமானவர்கள். அருந்ததியின் இதயம் தீண்டத்தகாதவர்களின் பக்கமாகவே இருக்கிறது. எல்லா மேல் வருணத்தவரும் தமக்கிடையேயான சாதி, மத, கட்சி வேறுபாடுகளை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு வேலுதாவையும் அம்முவையும் பிரிக்கின்றனர்; தண்டிக்கின்றனர். அவர்கள் 'வரலாற்றின் அடியாட்கள்'. இந்தக் கொடூரமான கொலை எஸ்தா, ராகேல், அம்மு ஆகியோரின் வாய்ப்புமிக்க எதிர்காலத்தை அழிக்கிறது. இதுதான் பெரிய சோகம்.

வேலுதாவின் கொடிய கொலைக்குப் பின்பு அம்முவை அவளது சொந்த வீட்டிலிருந்து துரத்துகின்றான் ஒக்ஸ்போர்டில் படித்த சாக்கோ. பின்னர் யாருடைய ஆதரவும் அற்ற நிலையில் தூர லொட்ஜ் ஒன்றில் ஆஸ்துமா நோய்க்குப் பலியாகிறாள் அவள். எஸ்தா மன நோய் பிடித்தவளாகவும், ராகேல் ஒரு பிறழ்ந்த மனதுடையவனாகவும் ஆகின்றனர். இருபத்தி நான்கு ஆண்டுகளுக்குப் பின்பு (1993) ஆயாமெனம் இல்லத்தில் இரட்டையர்கள் சந்திக்கின்றனர். ராகேல் (அருந்ததி) முழுக் கதையையும் நினைவு கூர்கிறாள். கதை நமது இயத்தைத் தொடுகிறது. கண்களை நனைக்கிறது. அருந்ததியின் மொழித்திறன் அற்புதம். துயரம், உள்ளார்ந்த நகையுணர்வு என்கிற கலக்க முடியாத இரண்டு அம்சங்களைக் கலக்கிறார் அருந்ததி. அம்மு ஒரு வித்தியாசமான பெண். தன்னம்பிக்கையும் தன்னுறுதியும் மிக்கவள். ஆணாதிக்கத்தை எதிர்ப்பவள். நாவலில் மிகவும் கொடூரமான பாத்திரம் தோழர் கே.எம்.என். பிள்ளை. இதர இந்திய வகையிலான உயர் வருண ஆக்கங்களுக்கு மத்தியில் இந்தத் தன் வரலாறு நாவல் ஓங்கி உயர்ந்து நிற்கிறது.

இந்தியா முழுமையும் ஒரு அறிவுத்துறைப் பாலைவனமாகக் காட்சியளிக்கிறது. அருந்ததியைப் போன்றவர்களே நம்பிக்கை நட்சத்திரங்களாக உள்ளனர். நாவலில் ஏதும் ஆபாசம் இருக்கிறதென்றால், அது பார்ப்பனீயத்தின் ஆபாசம் தான். அருவெறுக்கத் தக்கதாக ஏதும் உள்ளதெனில் அது பார்ப்பனீய மார்க்சீயம் தான்.

கேரள இடதுசாரி இயக்கத்தை அருந்ததி ஆதரவாகத் தான் பார்க்கிறார். மேல்வருண இடதுத் தலைமையை மட்டுமே அவர் எதிர்க்கிறார். ஈ.எம்.எஸ்.சும், பிள்ளையும் அவர்களின் பிரதிநிதிகளாக விளங்குகின்றனர். தமது இயக்கத்தை அவர்கள் இந்து மயப்படுத்துகின்றனர். இந்துக் குற்றவியல் மதிப்பீடுகளுடன் சமரசம் செய்து கொள்கின்றனர்.

**ஸ்ரீ நாராயண குரு, மகாத்மா அய்யங்காளி, பொய்கயில் குமார குருதேவன்** ஆகியோரது தலைமையிலான தலித் - பகுஜன் இயக்கங்களின் உடன் விளைவாகத் தான் கேரளாவில் இடது இயக்கம் தோன்றுகிறது. மேலே குறிப்பிட்ட சமூக சீர்த்திருத்த இயக்கங்களுக்குப் பின்புலமாக எல்.எம்.எஸ்., சி.எம்.எஸ்., பி.ஈ.எம். முதலான புரட்டஸ்டான்ட் மிஷனரிகளின் பங்களிப்புகள் விளங்கின. கேரள மக்கள் மத்தியில் குறிப்பாக மலபார் மக்கள் மத்தியில் அழுகிக் கிடந்த சமூக வாழ்வைத் தூய்மைப் படுத்தியதில் **திப்பு சுல்தானுக்கும்** பெரும்பங்கு உண்டு. கேரள மறுமலர்ச்சியின் பெருமைகள் யாவும் தலித் - பகுஜன இயக்கங்களுக்கே சாரும். இதில் மேல் வருணப் பங்களிப்பு ஏதுமில்லை. கேரளக் கட்சிகள் என்பன உயர் சாதிகளால் தலைமை தாங்கப்பட்ட பிற்படுத்தப்பட்டவர்களின் கட்சிகள் தான். கேரளத்தைப் பிடித்திருக்கும் பெரிய நோய்களுக்கான மருத்துவம் இந்த முரணின் தீர்வில் தான் அடங்கியுள்ளது.

தலித் பிரச்சினைகளுக்கு மார்க்சீயம் ஒரு தீர்வாக இருக்க முடியாது. தலித் பிரச்சினை என்பது அடிப்படையில் ஒரு சமூக, கலாசார மதப் பிரச்சினை. மார்க்சீயத்தின் உயர் வருணச் சித்தாந்திகள் தலித் பிரச்சினையைப் பொருளியல் காரணிக்குள் அடக்க முனைகின்றனர். தலித் பகுஜன் மக்களால் பார்ப்பனீயத்திற்கு உருவாகியுள்ள உடனடி ஆபத்தைத் திசை மாற்றும் முயற்சி தான் இது.

கட்சித் தலைமை எப்படி மேல் வருணத்தவர்களின் கையில் சிக்கியது? தாய்வழிச் சமூக நாயர்சாதிக் கூட்டுக்குடும்ப 'தரவாடு' முறை அழிந்த போது உயர்சாதி இளைஞர்கள் செய்வதறியாது திகைத்துப் போயினர். உடலுழைப்பிற்குத் தயாராக இல்லாத அவர்கள் உடனடிப் புரட்சியாளர்களாகிக் கட்சித் தலைமையைக் கைப்பற்றினர். தங்களின் பெயர்களோடு சாதியை ஒட்டிக்கொண்டனர். சிவப்புடை தரித்த காவி அணியினராகவே விளங்கினர். அருந்ததி இதனைக் கூர்மையாகத் தோலுரிக்கிறார். ஈ.எம்.எஸ் எரிச்சல் படுகிறார்.

ஆணாதிக்க சாதி வெறியனான சாக்கோ சிரியன் கிறிஸ்தவர்களுக்குள் அக மணம் குறித்தே எப்போதும் பேசுகிறான். அருந்ததி உடற்கூறு ரீதியாக சாதியமைப்பையும் அகமணத்தையும் தாக்குகிறார். அருந்ததியைப் பொறுத்த மட்டில் சாதியமைப்பு அநீதியானது. கிரிமினல் தன்மையானது. பார்ப்பனீயம், இந்துத்துவம், தந்தை வழி முறை ஆகியவற்றின் மீதான தாக்குதலாக உள்ளதே நாவலின் சிறப்பு. நேருக்கள், பட்டேல்கள், பாசுகள், குப்தாக்கள், முகர்ஜிகள்... போன்றோரின் கேலிச்சித்திரமாகவே சாக்கோ ஆக்கப்பட்டுள்ளான்.

இந்த நாவலைப்பற்றிய மதிப்பீட்டில் மார்க்சிஸ்ட் கட்சியின் இளைஞர் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான **எம்.ர.பேபி, ஈ.எம்.எஸ்.** சுடன் கருத்து மாறுபடுவதேன்! பேபி ஒரு லத்தீன் கத்தோலிக். பிற்படுத்தப்பட்ட மீனவர். எனினும், சுயமரியாதையும், தன்னுணர்வும் மிக்க பேபி கொஞ்சம் அடக்கியே வாசிக்கிறார். நம்பூதிரிபாட் அவரது ஆச்சாரியார் அல்லவா? கேரளத்தின் நோய்களுக்கெல்லாம் இந்தப் பார்ப்பன ஆதிக்கம் தான் காரணம்.


மலபாரில் இன்னொரு நாடகமும் அரங்கேறியது. நாராயண குரு, அய்யங்காளி ஆகியோரின் கருத்துக்களைக் கண்டு அஞ்சி நடுங்கிய சவர்ணர்கள் சில தந்திரங்களை மேற்கொண்டனர். இந்தப் புரட்சிகர சிந்தனைகளை மழுங்கடிக்கும் நோக்குடன் **பிரம்மானந்த சிவயோகி** என்கிற நாயர் சந்தியாசி **வாக்பதானந்தா** என்கிற தீயர், சீடர் எனச் சிலரை உருவாக்கிப் பார்த்தார்கள். பிரம்மசமாஜயை புட்கைகளையும் ஊக்குவித்தனர். இத்தகைய தந்திரங்களின் மூலம் மலபாரில் தலித் பகுஜன் மக்களை சவர்ணத் தலைமையின் கீழ் கொண்டு வருவதில் வெற்றி பெற்றனர். கேரளாவில் குறிப்பாக மலபாரில் அரசியல் மோதல்கள் எப்போது நடைபெற்றாலும் பாதிக்கப்படுவதென்னவோ தலித் - பகுஜன்கள் தான்.

மலையாள அறிவுத்துறையின் வரட்சிக்கும், கலாசார சீரழிவிற்கும் அருந்ததி ஒரு பெரிய விதிவிலக்கு கார்ட்டுனிஸ்ட் **அபு ஆப்ரகாமையும்,** அருந்ததியையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இருவரும் நவீனப்படுத்தப்பட்ட மார்த்தோமிய கிறிஸ்தவர்கள் தான். முன்னவர் இந்துமயமானவர். அவரது மண்டல் எதிர்ப்பு கார்ட்டூன்களை நாம் எளிதில் மறக்க முடியாது. அருந்ததியோ இந்துமய நீக்கம் செய்யப்பட்டவர். புகழுக்குரிய பெரும் ஆக்கத்திற்குச் சொந்தக்காரர்.

**அடிக்குறிப்பு:**

நிலப்பிரத்துவ சக்திகளை பூர்சுவாக்கள் எனச் சொல்வது பூர்சுவாக்களை அவமானப்படுத்துவது. ஈ.எம்.எஸ்சை பூர்சுவா எனச் சொல்வது அவருக்கு நோபல் பரிசளிப்பதற்கு ஒப்பானது.

*நன்றி; நிறப்பிரிகை*



# கலையும் கவசவண்டிக்காரரும்

ரஞ்சகுமாரின் விமர்சனத்திற்கு எதிர்வினையாக (சரிநிகர் 154ல்) விஷ்ணுபுரம் நூலாசிரியர் ஜெயமோகன் எழுதியதிலிருந்து தெளிவானவை சில:

1. மார்க்ஸிய விமர்சன அணுகுமுறை பற்றியோ ஈழத்தில் உள்ள விமர்சன முறைகள் பற்றியோ அவர் அறிந்தது சொற்பம். சில ஆண்டுகள் முன்பு (லண்டன்) நாழிகையில் அவர் ஈழத்து இலக்கியம் பற்றி வழமையாகவே அறியாமை சார்ந்து வரும் அதிகாரத்தொனியில் எழுதியதற்கு நான் சுருக்கமாகவே எழுதிய பதிலுக்கு ஏதேதோ நோக்கம் கற்பித்து மீண்டும் எழுதினார். நான் எழுதிய மறுப்பு நாழிகையிற் பிரசுரமாகவில்லை. (இதற்கான விளக்கத்தை என்னிடம் கேட்காதீர்கள்).
2. எதுவும் தெரிகிறதோ தெரியவில்லையோ, மார்க்ஸிய விமர்சன முறையைத் தனக்கேற்றபடி கொச்சையாக வரையறுத்து அதையே தனது கேடயமாக்கும் இலாகவம் அவரிடம் உறுதியாக உள்ளது.
3. **தன்னுடைய படைபபு எப்படி** விமர்சிக்கப்பட வேண்டுமென்று அவர் ஒரு அளவுகோலை வகுத்திருக்கிறார். அந்தக் கோலை விட்டால் வேறெதுவுமே அவர் எதிர்பார்க்கிற ஒரு விமர்சனத்தை அவரது நூலுக்குத் தரமாட்டா என்பது அவரது நியாயமான அச்சம்.

இலக்கியம் பற்றியும் திறனாய்வு பற்றியும் உன்னதங்கள் பற்றியும் அவரது பார்வையுடன் எனது பார்வை உடன்படவில்லை என்ற நிலையில் அவை பற்றிய விவாதம் முடிவற்றது. ஆயினும், **விஷ்ணுபுரத்தின்** சில பக்கங்களைப் புரட்டிய போதே மிகவும் அருவருப்பான ஒரு இனவாதியின் குரல் அங்கே கதைசொல்லியின் குரலாகக் கேட்கிறது. நூலாசிரியரது 'ரப்பர்' நாவலில் அப்பட்டமாகத் தெரிந்த சாதிய வெறியைத் தாண்டி இலக்கியச் செழுமையை மட்டுமே தேடுமளவுக்கு என்னிடம் 'தூய' அழகியல் உணர்வு இல்லை. எந்தப் படைப்பாளிக்கும் தனது சமூக அரசியற் பார்வைகளை முற்றாக மறைப்பது கடினம். 'புராண' நாவல் எழுதினாலும், சமகால அரசியல் அதை ஊடறுத்து ஓடும்.

எல்லாப் படைப்புக்களிலும் வெவ்வேறு அளவுகளில் படைப்பாளியின் சித்தாந்தம் செயற்படுகிறது. அது படைப்பைச் சுருக்கும் காரியமாக ஒரு விமர்சகனுக்குத் தெரிவது, அந்தச் சித்தாந்தம் விமர்சகனது சித்தாந்தத்தினின்று எவ்வாறு வேறுபடுகிறது என்பதிற் தங்கியுள்ளது.

ஜெ. அளவில், ரஞ்குமாரின் அணுகுமுறையில் உள்ள ஒரே 'கோளாறு' பின்னவர் விஷ்ணுபுரத்தில் கண்ட சில குறைகளைச் சொன்னமையே. ''உயிரினும் மேலாக நம்பி வந்த அரசியல் நிலைப்பாடுகளை பத்தாண்டுகளுக்குள் மாற்றிக் கொள்வது இலங்கை போன்ற சூழலில் இருப்பவர்கள் பலருக்கு அனுபவமாக இருக்கலாம்'' என்ற கூற்றின் மூலம் ஒரு இலக்கியப் படைப்பின் அரசியற் பண்பை அடையாளங் காண்பதை நிராகரிக்க ஜெ. முயல்கிறார். பல நூறு வருடங்கள் போனாலும், ஃபாஸிஸ இலக்கியத்தின் அரசியலையும், சாதிய இலக்கியத்தின் அரசியலையும் அடையாளங்காண நாம் தவற இயலாது. தவறவும் கூடாது. அவ்வாறே, சமூக நீதிக்கான கிளர்ச்சியின் குரலும் அடையாளங் காணப்படும். அதுவுங் காணப்பட்டேயாக வேண்டும்.

**விஷ்ணுபுரத்தைப்** பலவேறு ரீதிகளில் வாசிக்கலாம் என்பது உண்மை. அதைப்புவியியல் ரீதியில் வாசிப்பவர், அவரது நகரத்தின் வரைபடத்தையும் அதன் புவியியல் அமைப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, வாய்விட்டுச் சிரிப்பாரா அல்லது அடுத்து வரும் பக்கங்களில் பிரமிக்க வைப்பதையே நோக்காகக் கொண்டு வரும் பம்மாத்து மொழிக்கு அவை கட்டியங் கூறுகின்றன என்று தன்னை அடக்கிக் கொள்வாரா என்று எனக்குத் தெரியாது. தெருக்களின் அமைப்பு எந்தப் புராதன/ சமகால ஊரமைப்பு மேதையையும் அசர வைக்கும். அதுவும் ஒரு அசலான பம்மாத்துத் தான்.

எது எவ்வாறாயினும், இலக்கியம் படைப்பது கணினி உதவியுடன் கவச வண்டி ஓட்டுகின்ற விஷயமல்ல. எத்தனையோ கவச வண்டிகள், காட்டிலும் சுடுமணலிலும் சேற்றிலும் கவிழ்ந்து சுவடழிந்து கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. இலக்கியம் ஒரு வேளை தனியனாக் கை வீசி உலாவலாம். மாறாக, மக்களோடு கைகோர்த்துக் கம்பீரமாக நடக்கலாம். பிரமிக்க வைப்பது தான் ஒருவரது இலக்கியத்தின் நோக்கமென்றால், அந்த இலக்கியம் பிரமிப்புக்காகவே வாசிக்கிறவர்களிடம் போகட்டும். அந்த வகையான இலக்கியத்தை விடப் பெரிதாகப் பிரமிக்கச் செய்கிற எத்தனையோ களியாட்டங்களும், வாணவேடிக்கைகளும் (கவசவாகனங்களும் கூட) இருக்கின்றன.

எப்படைப்பினதும் இலக்கிய ரீதியான முக்கியத்துவத்தைப் பற்றி ஒரு சொல்: இலக்கியத்தின் எசமானர்கள் எவர்களோ, அவர்களே முக்கியமான இலக்கியத்தை அடையாளம் காணுகிறார்கள். இன்று ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்து எழுகிற இலக்கியங்கள் சில, காற்றிற் பறக்கிற சிறு குருவிகள் போல ஒரு பார்வைக்குத் தெரியலாம். இன்னொரு பார்வையில், அவற்றுள் ஒவ்வொன்றும் ஆயிரங் கவசவண்டிகளிலுங் கனமானது. ●

*சிவசேகரம்*

6 –

## புலிகள்...

இப்போது கிளிநொச்சியிலும் நாம் உண்மையிலேயே சட்டவிரோத அமைப்பொன்றாகவே செயற்பட்டு வருகிறோம். ஆனாலும் துரதிருஷ்டவசமாக முதலிரு உறுப்பினர்களும் இரவு நேரத்தில் சுவரொட்டி ஒன்றை ஒட்டிக் கொண்டிருக்கும் போது கைது செய்யப்பட்டுள்ளனர் அவர்கள் மக்களுடன் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்த ஒரே முறை அது தான். நாம் இங்கு போல் பகிரங்கமாகப் பத்திரிகை விற்கவில்லை. பகிரங்கக் கூட்டங்களோ, சொற்பொழிவுகளோ - வைக்கவில்லை. எமது உறுப்பினர்களோ, அரசாங்கத்தின் தீர்வுப்பொதிக்கு எதிராக - இது மாபெரும் ஏமாற்று, இப்பொறியில் அகப்பட வேண்டாம் என்பது பற்றிய சுவரொட்டி ஒன்றையே ஒட்டி இருந்தனர்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கு நாம் எதிரானவர்கள். அவ்வொப்பந்தத்திற்கு இனவாத ரீதியில்எதிர்ப்புத் தெரிவித்த ஜே.வி.பி., ஸ்ரீ.ல.சு.க. உட்பட்ட ஏனைய கட்சிகளின் இனவாத ஆர்ப்பாட்டங்களுக்கு எதிரான நிலைப்பாட்டில் நின்றே நாம் எதிர்ப்புத் தெரிவித்தோம். மீண்டும் எமது அடிப்படை இறுதித் தொலை நோக்கிலான நிலைப்பாட்டிலிருந்து கொண்டு சிங்களத் தமிழ் தொழிலாளர் வர்க்கம் ஒன்றிணைந்து ,ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டி இலங்கை ஈழ சமதர்ம குடியரசு ஒன்றியம் ஒன்றை நிறுவுவதன் மூலம் மட்டுமே தமிழ்த்தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப் படும் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டே நாம் அவ்வொப்பந்தத்தை எதிர்த்தோம். அந்த ஒப்பந்தத்தின் வாலாக வந்ததனால் மாகாண சபைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தோம். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஸ்ரீ.ல.சு.க., ஜே.வி.பி. என்பன இப்போது அதனை ஏற்றுக் கொண்டு அவற்றுக்குப் போட்டியிட்வும், முயற்சி செய்கின்றன. அன்று நாம் எடுத்த நிலைப்பாடு சரியானதே என்று இன்றும் நாம் நினைக்கிறோம். வரதராஜப்பெருமாளின் கீழ் வட-கிழக்கு மாகாண சபைகளுக்கு நடந்ததைப் பாருங்கள். ஏதாவது ஒரு எதிர்ப்பை இருதலைக்கொள்ளி எறும்பாகத் தெரிவித்தது தான் தாமதம், கலைத்தே விட்டார்கள். மாகாண சபைகள் வந்ததே வடகிழக்குப் பிரச்சினையின் மீது தான். மாகாண சபை ஆட்கள் தமக்கு இந்த மாதிரி இருந்தால் நல்லது, இவ்வாறு செயற்பட்டால் நல்லது என்று ஏதாவது யோசனை தெரிவித்தவுடன் அதனைக் கலைத்து விடுவார்கள். என்னே பொய்யான மாகாண சபை முறை அது. அப்போ ஏன் அப்பொறியில் தலையைக் கொடுத்துவிட்டு துடிதுடித்துக் கொண்டிருக்க வேண்டும். நாம் நேரடியாகவே மக்களுக்கு அது மரணப்பொறியெனவும், அதற்கு எதுவித அதிகாரமும் இல்லை, அதனால் இது பற்றி எதிர்பார்ப்பு வைத்திருப்பதும் தவறானது எனத் தெரிவித்தால் போச்சு. சந்திரிகா குமாரணதுங்கவுக்கு ஜனாதிபதியாக வர அது ஏணியாய் இருந்திருக்கிறது. அவ்வளவே நடந்துள்ளது.

புளொட், ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.பி.டி.பி. ஆகியவை அரசாங்கத்தின் இயக்கங்களாகவே மாறியுள்ளன. இவையனைத்தும் இராணுவப்படைகளுடன் சேர்ந்து செயற்பட்டு இனவாத யுத்தத்தின் பங்காளர்களாக உள்ளன. அவர்கள் தொடர்பாக எதுவித மன்னிப்பும் எங்களுக்குக் கிடையாது. அதனால் தான் எமது உறுப்பினர்கள் தொடர்பான இந்த ரெலோ கதையின் பயங்கரத்தன்மை உள்ளது. எமது அத்தோழர்களுக்கு அந்த முத்திரையைக் குத்தி விட்டு த.வி.பு. இயக்கம் ஆபத்தை விளைவிப்பது என்பது பயங்கரமானது என எனக்குத் தெரிகிறது. அரசாங்கத்துடனும், இராணுவத்துடனும் இணைந்து காட்டிக் கொடுக்கும் புளொட், ரெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புகளுக்கு எதிராக தீவிரமாகப் போராடி இருக்கையில், அதன் ஒரு பகுதியாக த.வி.பு. இயக்கத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட ஒடுக்குமுறைகளுக்கெதிராகவும் நாம் போராடியுள்ளோம். இவ்வாறான முத்திரை குத்தல் ஒன்றின் மூலம் எமது தோழர்களுக்கு ஆபத்தை விளைவித்தல் அது மிக மோசமான நிலைமை ஒன்றாகும். அதற்கெதிராக நாம் இவர்கள் எமது உறுப்பினர்கள் என உரிமை கோரியுள்ளோம். அதனைக் கணக்கிலெடுக்காது தெரியாமல், தவறுதலாக ஆபத்தை உண்டு பண்ணிவிட்டோம், நாம் ரெலோ என்று நினைத்தோம் எனத் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள அவ்வாறான கதைகளைப் பின்பு அவர்களால் கூற முடியும். அது ஆபத்தானது. ஒடுக்குவதாயின் எமது பெயரில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஒடுக்குமாறும், சோ.க.கவின் இந்த அரசியல் நடவடிக்கைக்கு நாம் எதிரானவர்கள். அதனால் தான் நாம் அவர்களை ஒடுக்குகிறோம் என த.வி.பு. இயக்கம் கூறட்டும். அதனைக் கூறுகிறார்கள் இல்லை. அத்தோழர்களுக்கெதிரான அரசியல் குற்றச்சாட்டு என்ன என, வாயைத் திறந்து இன்னும் கூறவில்லை. கூறுமாறு நாம் கேட்கிறோம். குற்றச்சாட்டை முன்வையுங்கள். ஏன் அவர்களைக் கைது செய்தீர்கள் என நாம் கேட்டுள்ளோம். அவர்கள் அதனைச் சொல்கிறார்கள் இல்லை. இற்றைக்கு ஏழு வாரங்களாக அதனை அவர்கள் சொல்கிறார்கள் இல்லை. ○

## மூன்றாம்...

நிறுவனங்களும், தமிழ்ப் புத்திஜீவிகளுமே இது விடயத்தில் அதிகமாக உழைக்கவேண்டி ஏற்படும்.

தமிழ் மக்கள் கூட, தங்களது அரசியலைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இதனாலேயே உப்புச்சப்பற்ற அரை குறைத் தீர்வுகளில் கூட பலவேளைகளில் சலிப்படைந்து விடுகிறார்கள். அவர்கள் மத்தியில் தமிழ் அரசியல் நன்கு உரையாடப்பட வேண்டும். அதனூடாக அவர்களாகவே அரசியற் பலத்தினை பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்ட வேண்டும்.

இதற்கப்பால் சர்வதேச அளவிலும், எமது பலம் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்கு சர்வதேச அளவில் நமது அரசியல் நன்கு பேசப்பட வேண்டும். அதன் நியாயத்தன்மை நிரூபிக்கப்பட வேண்டும். சர்வதேச அளவில் இயங்கும் பல்வேறு நிறுவனங்களுடனும் உறவுகளைக் கட்டியெழுப்புவதன் மூலமே இது சாத்தியமாகும். சர்வதேச அளவில் முயற்சிகளை ஆரம்பிக்கும் போது, இந்தியாவிலும், குறிப்பாக தமிழகத்திலும் இதற்கான முயற்சிகள் கட்டியெழுப்பப்படவேண்டும். அப்போது தான் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராக இந்திய அரசு செயற்படுவதை இந்திய மக்களினாலேயே தடுக்க முடியும்.

தறிகெட்டு ஓடும் தமிழ்க் கட்சிகளை கட்டுப்படுத்தவும் இவ் அரசியல் பலம் அவசியம். இவற்றில் முன்னாள் இயக்கக்காரர்களை ஒருவாறு கட்டுப்படுத்தலாம். அவர்கள் இதயங்களில் ஒரு மூலையிலாவது தங்களைப் பற்றிய குற்ற உணர்வு உள்ளது. தீர்வு என வரும் போது கொஞ்சமாவது மனச்சாட்சியுடன் நிதானமாக நடந்து கொள்வார்கள். ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்த வரை தான் இது கடினமாக இருக்கும். அவர்களிடம் மனச்சாட்சியோ, குற்ற உணர்வோ மருந்துக்குக் கூடக் கிடையாது. வரலாற்று ரீதியாகவே தங்குமடங்களில் தங்கிய பழக்கம் அவர்களுக்கு. 1965ல் ஐ.தே.க. அரசில் சேர்ந்து தங்குமடத்தில் சேர்ந்து தங்கு மடத்தில் தங்கினார்கள். பின்னர் 1981ல் மாவட்ட அபிவிருத்திச் சபை தங்குமடத்தில் தங்கினார்கள். தொடர்ந்து இலங்கை - இந்திய ஒப்பந்தம் என இவர்கள் தங்கிய தங்குமடங்கள் அதிகம். தங்குமடங்களில் தங்கி தமிழ் மக்களுக்கு ஏதாவது பெற்றுக் கொடுத்தார்களா என்றால் எதுவுமே இல்லை.

எனவே, இனிவரும் காலங்கள் மிக முக்கியமானவை. தமிழ் மக்களின் முன்னேறிய பிரிவினர் மிக விழிப்புடன் இருந்து செயற்பட வேண்டிய காலங்கள் அவை. தமிழ்ப் பத்திரிகைகளின் பொறுப்பும் மிக அதிகமாக உள்ளன. ●

18 —

## தாயக மண்ணுக்கான...

மக்களுக்கும், சர்வதேச சமூகங்களுக்கும் எடுத்துச் சொல்லும் ஒரு நிகழ்வாக இதை ஏற்படுத்த விரும்புகிறோம்.

***தங்கள் அமைப்பு, அமைப்பென்ற ரீதியில் எதிர்கொள்ளும் பொருளாதார மற்றும் ஏனைய பிரச்சினைகள் எவை?***

**NMRO** ஆரம்பித்த காலந்தொட்டே - 1992ன் பிற்பகுதியில் இருந்தே - இவ்வமைப்பிற்கான எந்தவொரு வங்கிக் கணக்குமில்லை. ஏனென்றால், இந்த அமைப்பின் இலக்குகள் கல்வி சார் ரீதியாக தாயக மண் தொடர்பாகவும், பறிக்கப்பட்ட உரிமைகள் தொடர்பாகவும் அறிவூட்டலையே நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இழப்புக்களை மீளப்பெறும் வழிவகைகளை இனங்காணும் முகமாக ஆய்வுரீதியான பணிகளையும் எம் அமைப்பு மேற்கொண்டு வருகிறது. அதேவேளை அகதிவாழ்வில், நடைமுறைப் பிரச்சினைகள் அதிகமாகக் காணப்படுகிறது. ஆரம்ப நாட்களில் பல அகதி அமைப்புக்கள் பல நோக்கங்களுடன் செயற்பட்டு வந்தன. அவற்றில் அநேகமானவை நடைமுறைப் பிரச்சினைகளிலேயே அதிக கவனம் செலுத்தின ஆனால், காலப்போக்கில் அவற்றின் செயற்பாடுகள் பல காரணங்களால் குறைந்து கடந்த காலங்களிலிருந்து இன்று வரைக்கும் எமக்குதவும் உள்நாட்டோ, வெளிநாட்டோ உதவி நிறுவனங்கள் இல்லை. குறிப்பிட்ட ஒரு சிலரும், சில தனவந்தர்களும் எமக்கு உதவி வருகிறார்கள். சில இஸ்லாமிய இயக்கங்களும் எமக்கு உதவி செய்திருக்கின்றன. இதைக் கொண்டு தான் எமது அமைப்பு இவ்வளவு காலமாய் இயங்கி வருகிறது. துயரம் என்னவென்றால், எமது அமைப்பு ஒன்றே முக்கால் லட்சம் அளவில் கடனாளியாக இருந்து கொண்டிருக்கிறது. எம்போன்ற அமைப்புக்களுக்கு சர்வதேச ரீதியில் உதவும் நிறுவனங்கள் இருக்கிறது என அறிகிறோம். ஆனால், அவற்றை நாமோ அல்லது அவை எம்மையோ இன்னும் அடையாளம் காணவில்லை. சரிநிகர் ஊடான இந்தத் தகவல் மூலம் அறியக் கிடைத்து. எமக்கு உதவிகள் கிடைத்தால் எமது எதிர்காலத் திட்டங்களுக்கு உதவியாக இருக்கும். ●

Registered as a newspaper in Sri Lanka


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டில்'

பாரதி

இல.04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05

தொலைபேசி : 593615, 584380

தொலைமடல் : 594229



## சேதிக்குக் காத்திருப்பு?

திங்கள் அதிகாலை முதல் கொழும்பு கட்டுநாயக்கா பாதையிலும் காலி வீதியிலும் ஒன்றன் பின் ஒன்றாக அம்புலன்ஸ் வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

கடந்த ஞாயிறு முதல் கிளிநொச்சி - பரந்தனில் நடந்து கொண்டிருக்கும் பாரிய மோதலின் விளைவை ஊகிக்க வைக்கும் விதத்தில் இவ்வண்டிகளின் பரபரப்பு அமைந்திருக்கிறது.

ஆனால்அரச பாதுகாப்புத் தரப்பு அங்கு ஒன்றும்பெரிதாக நடக்கவில்லை. புலிகளை இராணுவம் ஓடஓட விரட்டி விட்டது என்பது போல் செய்தி அளந்து கொண்டிருக்கிறது.

'லயன் எயர்'ருக்குச் சொந்தமான பயணிகள் விமானமொன்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி வரும் போது காணாமல் போய்விட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இது விழுந்ததா விழுத்தப்பட்டதா என்ற தகவல்கள் இதுவரை தெரியவரவில்லை. ஆனால், கிளிநொச்சியில் இருந்து வரும் தகவல்களோ அரசாங்கம் அறிவிக்கும் தகவல்களுக்கு நேரெதிர்மாறானதாக இருக்கின்றன. அவற்றை எழுது முடியாமல் எமது கைகளைத் தடுக்கிறது தணிக்கை. இரண்டாவது முல்லைத்தீவாக கிளிநொச்சியும் ஆகப்போகிறதா என்பதை கூற இன்னொரு விஜயசேகரா வரும் வரை பொறுத்திருக்க வேண்டியது தான்!



சிந்தை இழக்காரடி!

வன்னியிலே என்ன நடக்கிறது? ஜயசிக்குறு வெற்றிவாகை சூடுகிறது. புலிகள் பயந்து கடலில் விழுவதற்காக ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இவை மட்டும் தான் அரசாங்கத்துக்கும் தென்னிலங்கைப் பத்திரிகைகளுக்கும் சொல்ல விருப்பமான செய்திகள் - அவையொன்றும் உண்மையல்ல என்று தெரிந்த போதும்.

ஆனால் அங்கே மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கி தவிக்கிறார்கள். உணவு விநியோகம் சீராக இல்லை. அகதி முகாம்களில் யுத்தத்தின் காரணமாக போய் ஒதுங்கியிருக்கும் மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டுவிட்டன. எந்த மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களோ வேறு வருமானங்கள் இல்லையோ, அந்த மக்களுக்கு உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதில் அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுகிறது. நோய்க்கு போதிய மருந்தில்லை. மருந்துக்காகவோ உணவுக்காகவோ வவுனியாவுக்கு வரவும் அவர்களுக்கு அனுமதியில்லை.

தொடர்ச்சியாக நிவாரண வெட்டுக்கெதிராக அங்குள்ள மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால் அதைப் பற்றி யாரும் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

அரசாங்கம் இது குறித்து அக்கறைகொள்ளாதது சரி. அதுவும் பட்டினியிட்டு வாட்டி எடுக்க விரும்பும் அரசு அக்கறை கொள்ளாததில் ஆச்சரியமில்லை. ஆனால் தமிழ் கட்சிகளுமா? இது வரை எந்தத் தமிழ்க் கட்சியும் இந் நிலைமை பற்றி ஆக்கபூர்வமாக ஏதும் செய்ததாகத் தெரியவில்லை - அடக்கி வாசித்த அறிக்கைகளைத் தவிர.

சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இழக்காரடி கிளியே தமிழ்க்கட்சிகள் சிந்தை இழக்காரடி!

## அமீன் வீட்டில் குண்டு:
# சுதந்திரமான நீதித் துறைக்கு வேட்டு!

கொழும்பு மேல்நீதிமன்ற நீதியரசர் மஹாநாம திலகரத்னவுக்கு எதிரான, இரகசியப் பொலிஸாரால் கெஸ்பேவ நீதிமன்றில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கில் நீதியரசருக்கு சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எல்.எம். அமீனின் வீட்டு வாசலில் ஞாயிறு காலை குண்டொன்று வைக்கப்பட்டிருந்தது. கூடவே நீதியரசருக்காக நீதிமன்றத்தில் ஆஜராகும் உங்களுக்கு இந்தப் பரிசு என்ற ஒரு கடிதமும்.

இராணுவ வீரர் சோமசந்திர என்பவரை கம்பிகளாலும், பொல்லாலும் தாக்கியமை, துப்பாக்கிப் பிரயோகம் செய்தமை போன்ற குற்றச் சாட்டுக்களின் பேரில் கெஸ்பேவ நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கொன்றில் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே நீதியரசர் மகாநாம திலகரத்னவை கைது செய்வதற்கான பிடியாணை பெறப்பட்டது. இந்தப் பிடியாணை பெறுதலில், சட்ட மா அதிபர் திணைக்களம் இயங்கிய வேகம் சந்தேகத்துக்கு இடமானது என்பதுவும், அரசியல் ரீதியான பழிவாங்கல் நோக்குடனேயே இது செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது என்பதுவும் சென்ற இதழில் வெளியிடப்பட்டிருந்தது. நீதியரசருக்கு வழங்கப்பட்ட பிடியாணை பின்னர் அதே மீளப்பெறப்பட்டதை உறுதிபடுத்தும் பத்திரத்தைக் காட்டியும் அதை உதாசீனம் செய்த சி.ஐ.டி. பணிப்பாளர் பந்துல விக்கிரமசிங்க நீதியரசரை பலவந்தமாக அவமதிக்கும் விதத்தில் இழுத்து வாகனத்தில் ஏற்றிச் சென்றதும் தெரிந்ததே.

ஆனால். அதற்கு மேலும் நடந்திருக்கிறது.

அவரை நாலாம் மாடிக்கு கூட்டிச்சென்றவர்கள் என்னவென்று தெரியாத பத்திரங்களில் அவரிடம் பலவந்தமாக பெருவிரல் அடையாளம் எடுத்திருக்கிறார்கள்.

நீதியரசரை கைது செய்யுமளவுக்கு அவருக்கு எதிரான பலமான சாட்சியங்கள் எதுவும் இல்லாத போதும் அவரைக் கைது செய்யும் உத்தரவை சி.ஐ.டி.யினருக்கு வழங்கியது சட்ட மா அதிபரே என்பதை சீ.ஐ.டி.யினரின் ஆவணங்கள் வெளிக்காட்டியிருக்கின்றன. பந்துல விக்கிரமசிங்க தனது அலுவலக டயரியில் பிடியாணை மீளப் பெறப்பட்டிருப்பினும் சாதாரண சட்டத்தின் கீழும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழும் கைது செய்தல் சாத்தியம் என்று குறிப்பிட்டு இரகசிய பொலிஸ் பிரதி பொலிஸ் மா அதிபர் புண்ணியா டி சில்வாவிடம் கைது செய்வதற்கு உத்தரவிட்டதாக குறிப்பிட்டுள்ளார். 10ஆம் திகதி பிற்பகல் 5.40 அளவில் எழுதப்பட்ட இந்தக் குறிப்பு மறுநாள் காலைவரை தனக்கு அழைப்பாணை மீளப்பெறப்பட்டது தெரியாது என்ற சட்டமா அதிபரின் கூற்றை பொய்யாக்குவதாக அமைந்துள்ளது.

இப்போது இந்த விவகாரம் ஒரு முக்கிய அரசியல் விவகாரமாகிவிட்டது. நீதியரசரைக் கைது செய்த பந்துல விக்கிரமசிங்க ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் உடனடியாக பொலிஸ் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

நீதித்துறையை பொலிசாரும் அரசியல்வாதிகளும் எப்படித் தமக்கேற்ற விதத்தில் பாவிப்பார்கள் என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு நல்ல உதாரணம்.

உயர் நீதி மன்ற நீதியரசர் என்ன யாரை வேண்டுமானாலும் நாம் எதையும் செய்வோம் என்ற மமதையுடன் இயங்கும் அரசியல்வாதிகளும் பொலிசும் இந்தப் பிரச்சினையில் அம்பலத்துக்கு வரக்கூடும்.

சட்டத்தரணிகள் சங்கத்தினர் இந்த சட்டவிரோத நடவடிக்கையை பலமாகக் கண்டித்துள்ளதுடன் இதை எதிர்த்துப் போர்க் கொடி எழுப்பி வீதியில் இறங்கியுள்ளார்கள்.

ஆயினும் பந்துலவின் நடவடிக்கையை சி.ஐ.டி தொடர்ந்து நியாயப்படுத்தி வருகிறது.

தனக்கு நடந்த அநியாயத்திற்கு நீதி கோரி நீதியரசர் பிரதம நீதியரசருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

விவகாரம் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில் தீர்க்கப்படக் கூடும் என்ற ஒரு நம்பிக்கை கடந்தவாரம் பொதுவாக வெளிப்பட்டது.

ஆனால், மேலே சொன்ன குண்டும் கடிதமும் விவகாரம் நீதிமன்றக் கதவுகளுக்கு வெளியே தீர்க்கப்பட முயற்சிகள் நடப்பதைக் காட்டி விட்டன.

ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் ஒரு லியனாராச்சி கொலை நடந்தது.

இப்போது அமீன் வீட்டில் குண்டு வைக்கப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சி எங்கு போகும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

உயர் அந்தஸ்து பெற்ற நீதித்துறையை சார்ந்தவர்களுக்கே நிலைமை இது என்றால் சாதாரண மக்களின் நிலை என்ன?

அவர்களுக்கு பாதுகாப்பு என்ன?

## பத்திரிகையாளர்கள் தடுத்து வைப்பு!

கடந்த 9ஆம் திகதி இரத்தினபுரியிலுள்ள தோட்டப்பகுதிகளில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களைப் பற்றி செய்தியிடவென அங்கு சென்ற பத்திரிகையாளர்கள் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டதுடன் அவர்கள் தமது கடமையை செய்வதற்கு இடையூறாகவும் இருந்துள்ளனர்.

செப்டம்பர் 24ஆம் திகதி கொழும்பிலிருந்து இரத்தினபுரி நோக்கி சரிநிகர் பத்திரிகையைச் சேர்ந்தவர்கள் இருவரும், இன்போர்ம் நிறுவனம் (INFORM), மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (Centre for Policy Alternative), மனித உரிமைகள் செயலணி(Human Rights Action Committee), ஆகியவற்றின் பிரதிநிதிகளும் ஹிரு பத்திரிகையைச் சேர்ந்த ஒருவருமாக ஆறு பேர் சென்றிருந்தார்கள்.

வேவல்வத்தைப் பிரதேசத்தில் தகவல்களை சேகரித்துக் கொண்டிருந்த போது தோட்ட உதவி சுப்பிரின்டன்ட் ஒரு கூட்டத்துடன் அங்கு வந்து, பத்திரிகையாளர்கள் எவரையும் அனுமதிக்க முடியாது என்றும், இராணுவத்தின் அனுமதியைப் பெற்று வரும்படியும் சத்தமிட்டார். இதைத் தொடர்ந்து, அருகிலிருந்த வேவல்வத்தை பொலிஸ் காவல் நிலையத்தில் அனுமதியைப் பெறுவதற்குச் அப்பத்திரிகையாளர்கள் சென்றிருந்த போது, பொலிஸார் புகைப்படம் எடுக்கவோ வீடியோ எடுக்கவோ கூடாது என்று உத்தரவிட்டுவிட்டு போக அனுமதித்தனர். (ஏற்கெனவே பலர் சென்று எடுத்த புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளியாகிருந்தன என்பது கவனிக்கத்தக்கது.)

ஆனாலும், பொலிஸார் இவர்கள் போகுமிடமெல்லாம் பின்தொடர்ந்தனர். அவர்கள் தகவல்களை திரட்டிக் கொண்டிருந்த போதெல்லாம் பொலிஸாரும் கூட இருந்தனர். பாதிக்கப்பட்டவர்கள் தங்களது சொந்த அவலங்களை சுதந்திரமாக வெளிப்படுத்த இது பெரும் தடையாக இருந்தது. பத்திரிகையாளர்கள் தமது கடமையைச் சுதந்திரமாகச் செய்யவும் இது பெரும் இடையூறாக இருந்தது.

பிற்பகல் 1.30 மணியளவில் ஒரு பொலிஸ்காரர் இவர்களிடம் வந்து "சொல்லியும் கேளாமல் நீங்கள் புகைப்படங்கள் எடுத்திருக்கிறீர்கள் உடனேயே உங்களை "மாத்தையா" வரச்சொன்னார்..." என அழைத்துச் சென்றனர். பத்திரிகையாளர்கள் பொலிஸ் நிலையத்தை அடைந்த போது, அவர்களுடன் உரையாடியவர்கள் மற்றும் அவர்களின் தகவல் திரட்டலுக்கு உதவி செய்தவர்கள் எனப் பலரும், பொலிஸ் நிலையத்திற்கு கைது செய்து கொண்டு வரப்பட்டிருந்தனர்.

அவர்களின் முன்னிலையில் அந்நிலையத்தின் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பனாகொட எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருவர், "நீங்கள் புகைப்படம் எடுத்திருக்கிறீர்கள்" எனக் கூறி சத்தம் போட்டதுடன் அவர்களால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்களை பலவந்தமாக பறித்துப் போட்டுக் கேட்டார். அவர் அப்படிக் கேட்டுக் கொண்டிருக்கையில் அந்த ஒலிப்பதிவு நாடாவில் பத்திரிகையாளர்களுக்கு வாக்குமூலமளித்தவர்களில் சிலரும் அங்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

சில மணி நேரங்களாக அங்கு தடுத்து வைக்கப்பட்டதன் பின் அவர்களை போகுமாறு கூறி, ஒலிப்பதிவு நாடாக்களை திருப்பிக் கொடுத்தனர்.

-பத்திரிகையாளர்களின் பின்னால் பொலிஸாரை பின் தொடரவைத்ததன் மூலம் சுதந்திரமாக அவர்களை தரவுகள் சேகரிக்க விடாததுடன்,

-பாதிக்கப்பட்டவர்கள் நடந்ததை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கும் தடையாக இருந்தனர்.

-இறுதியில் புகைப்படமெடுத்த குற்றச்சாட்டின் பேரில் பத்திரிகையாளர்களை தடுத்து விசாரித்தது மட்டுமன்றி

-அவர்களின் தனிப்பட்ட விபரங்களையும் பொலிஸில் பதிவு செய்து கொண்டனர்.

-அவர்களுக்கு தகவல் தந்தவர்களையும் பொலிசுக்கு கொண்டு வந்து விசாரித்ததுடன், நம்பிக்கையின் பேரில் அவர்களுக்கு மட்டுமேயென வழங்கப்பட்ட கருத்துக்களையும், தகவல்களையும் அடக்கிய பதிவு நாடாக்களை நிர்ப்பந்தமாக போட்டுக் கேட்டனர். இது பத்திரிகையாளர்களின் அடிப்படை உரிமையில் தலையிடும் ஒரு விடயம் என்கின்ற அதேவேளை, தகவல் தந்தவர்களுக்கு எதிர்காலத்தில் ஆபத்தை இது விளைவிக்கவும் கூடும் என்று நினைக்காமலிருக்க முடியவில்லை.

இந்த ஒலிப்பதிவு நாடாவில் பாதிக்கப்பட்டவர்கள் அளித்த வாக்குமூலங்களில்

1. சமபவம் நடந்த 9ஆம் திகதியன்று 11 பொலிஸாரின் மேற்பார்வையின் கீழேயே நடந்தது என்றும்,

2. சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு தமது காடைத்தனத்தை 5 மணித்தியாளங்களுக்குள், நடத்தி முடிப்பதற்கு பொலிஸாரால் ஆசீர்வாதம் வழங்கப்பட்டிருந்ததாகவும், 5 மணித்தியாளங்களுக்குப் பின்னர் ஏன் இன்னமும் போகவில்லையா என்று அவர்களை நோக்கி பொலிஸாரே கேட்டனரென்றும்,

3. பொலிஸாருக்கும் சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கும் நெருங்கிய உறவு இருப்பதாகவும், தினமும் இரவில் அவர்களுடன் தான் குடியும் கும்மாளமுமாக இருப்பதாகவும்,

4. இது வரை பொலிஸார் சம்பவத்தில் ஈடுபட்ட 500க்கும் மேற்பட்டவர்களில் எவரின் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும்

கூறப்பட்ட தகவல்கள் அந்த ஒலிப்பதிவில் உள்ளடங்கும்.

அங்கு சென்ற பத்திரிகையாளர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் திரட்டிய தகவல்கள் இவ்வன்முறைச் சம்பவத்தில் பொலிசுக்கும் பங்கு இருக்கின்றது என்பது வெளிப்படையாக தெரிவித்துவிடும் என்பதாலேயே அவர்கள் எம்மை இவ்வாறு தடுத்து வைத்தார்கள் என்று கூறுகிறார் அங்கு சென்ற பத்திரிகையாளர் ஒருவர். (இரத்தினபுரி சம்பவ விபரங்கள் உள்ளே.)

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02. அலோ சாலை. கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிரின்ற் இன் இல. 07 ...